SHANARS ARE KSHATRIYAS,

BEING

A Reply To The Objectionable Statements

MADE BY CHENTHINATHA IYER

Regarding The Shanars,

BY

Y. GNANAMUTHOO NADAR,

GRADUATE, S. G. C.,

L. Clerk, District Court, Tinnevelly,

Antiquarian and Representative

of the Shanar Race.

:o:o:

சாணார் சத்திரியர்.

:o:o:

திருநெல்வேலி ஜில்லாக்கோர்ட்டு மா. கிளர்க்கும்

அன்றிக்குவேரியரும் சான்றோர் பிரதிநிதியுமான

ஏ. ஞானமுத்து நாடார்

கிராட்யூயேற்று, எஸ். ஜீ. சி., அவர்கள்

இயற்றியது.

MADRAS.

PRINTED AT THE V. N. JUBILEE PRESS.

1889.

Copyright Reserved.

SHANARS ARE KSHATRIYAS.

இதில்
செந்திநாதையர் குதர்க்கங்களுக்குக் கண்டனங்களும்;
சாணார் சத்திரியர் என்று அலெக்சாண்டர் ஐயர்,
சாயர்புரம் காலெஜ், சௌந்திரநாயகம்பிள்
ளை, கால்டுவேல் பிஷப் விஷயங்களாய்
நடந்த கடிதங்களும் அதன்பதில்
களும்; மகாராணி அம்மா
ளவர்கள், திருவாங்[illegible]ாரா
ஜா, வைசிராய், கவர்னர், இஸ்டே
ற்று செக்ரற்றேரியா[illegible], மியூ[illegible]யம்தலைவர்
இவர்களுக்கு அனுப்பியகடி[illegible]களும் [illegible]தன்
பதில்களும்; செந்திநாதையர் பிராதுமுதலிய பல
சான்றோர் ஜாதி ரிக்கார்டுகளும் அடங்கியிருக்கின்றன.

:o:

சாணார் சத்திரியர்.

:o:

நாசரேத், சாயர்புரம், புதியம்புத்தூர்ச் சரகங்களின்
விசாரணை ஞானமுத்து உபதேசியாரவர்கள்
குமாரர் திருநெல்வேலி ஜில்லாக் கோர்ட்
டு மா. கிளர்க்கும், அன்றிக்குவேரி
யரும், சான்றோர் பிரதிநிதியுமான

ஏ. ஞானமுத்து நாடார்

கிராட்யூயேற்று, எஸ். ஜீ. சி., அவர்கள்
இயற்றியது.

MADRAS.
PRINTED AT THE V. N. JUBILEE PRESS.

1889.

Copyright Reserved.

விலை ரூபாய் 1 அணா 8; தபாற்கூலி அணா 2.

TO

Ratnaswamy Nadar, Esq.,

(Son of late Thavasumuthu Nadar, Esq.),

This Work "Shanars Are Kshatriyas"

is Dedicated

BY

THE AUTHOR.

தவசுமுத்துநாடார் எஸ்குயர் அவர்கள்

குமாரர்

இரத்தினசாமி நாடார் எஸ்குயர்

அவர்களுக்கு

"சாணார் சத்திரியர்" என்னும்

இந் நூல்

நூலாசிரியரால்

அரங்கேற்றப்பட்டது.

LIFE OF THE AUTHOR.

FOR THE TAMIL READERS.

நூலாசிரியரின் சரித்திரம்.

சு ரு க் க ம்.

———:0:———

தமிழ் வாசிப்பவர்க்கு.

நாம், நாசரேத் சாயற்புரம் புதியம்புத்தூர்ச் சரகங்களில் நூதனமாய்க் கிறிஸ்துசபைகளை உண்டுபண்ணி, அவைகளில் நூதனமாய் எஸ். பி. ஜி. (S. P. G.) மிஷனை ஸ்தாபித்து, அவைகளில் 62 வருஷக்காலபரியந்தம் எஸ். பி. ஜி. யின் விஜாரணை உபதேசியாராயிருந்து, 1882-ம்௵ மார்ச்சு௴ 2௳ நாசரேத்தில் 81 வயதுள்ளவர்களாய் கர்த்தருக்குள் ஜீவித்து, நாளதும் எங்கும் கீர்த்திபொருந்தியவர்களாயிருக்கிற விஜாரணை ஞானமுத்து உபதேசியாரவர்களின் சிரேஷ்ட குமாரர். நாம், சாயற்புரத்தைச்சேர்ந்த செபத்தையாபுரத்தில் பிறந்து, நம்முடைய பால்யமுதல் சாயற்புரம் கலாசாலையில் கல்விபயின்று, நாசரேத்சரகம் தென்திருப்பதியின் தாலுகா ஸ்கூலில் அங்கிலேய உபாத்தியாயராயிருந்ததின்மேல், மெட்ராஸ் சலிவன்ஸ் கார்டன்ஸ் வித்தியாசாலை (Madras Sullivans' Garden's College) யில் உலகசாஸ்திரங் (Secular Science) களும், வேதசாஸ்திரங் (Theology) களும், கிரேக்கை (Greek) ப்பாஷையும் தேர்ந்து, அவ்வித்தியாசாலையின் பரீக்ஷை ஒப்பேரி, அவற்றின் கிராட்யூயேற் (Graduate) ஞான

தின்பின், மெட்ராஸ் டையொசெஷன் கமிற்றி (Madras Diocesan Committee) யாரவர்கள், கும்பகோணத்தில் லீப்பர் ஐயருடனிருந்த சத்தியநாதன் ஐயரைப் பட்டுக்கோட்டைக்கு மாற்றி, நம்மை அவருக்குப்பதிலாய் லீப்பர் ஐயருக்கு அசிஸ்ற்ருண்டாக நியமித்துக் கும்பகோணத்திற்கு அனுப்பினார்கள். நாம் மெட்ராசிலிருந்து அவ்விடம் போய், குருப்பட்டாபிஷேகத்து (Holy Order) க்கென்று புரொபேஷன (Probationer) ராகவிருந்தோம். அதன்பின் நம்முடைய கேட்டுக்கொள்ளுதலின்படி, மெட்ராஸ் டையொசெஷன் கமிற்றி செக்கரற்றேறியார் கனம் சிம்மன்ஸ் (Rev. A. R. Symonds) ஐயரவர்கள், நம்மை இவ்விடம் திருநெல்வேலிக் கோர்ட்டுக்குச் சிபார்சுபண்ணி, அந்தப்படி நாம் சப்கோர்ட்டில் நியமுகம்பெற்றுக் கும்பகோணமிருந்திவ்விடம் வந்தோம். அதுமுதல் நாம் அந்த சப்க்கோர்ட்டிலும், அதன்பின் டிஸ்ற்றிரிக்ட்டுக் கோர்ட்டுச் சென்றிரல் ஆபிஸ் கிளர்க் (Clerk) வேலையிலும் உத்தியோகங்கள் பார்த்தது 14 வருஷங்கள். இந்தக் காலங்களில் நாம் இதன் A (ஏ) அநுபந்தம்முதல் C (சி) அநுபந்தம்வரையுள்ள பிரபந்தங்களை அங்கிலேய பாஷையில் எழுதி, அவைகளைத் திருவாங்கூர் அபிமானி பத்திரிகையில் அச்சிட்டுப் பிரசுரஞ்செய்தோம். (49 முதல் 80 வரை பக்கங்கள்பார்க்க). D (டி), E (ஈ) அநுபந்தங்களிலுள்ள பிராதுகளையும் அங்கிலேயபாஷையில் எழுதி அங்கங்கும் அனுப்பினோம். (81 முதல் 105 வரை பக்கங்கள் பார்க்க). அதன் பின்னும் 1887-ம்ஞு எப்பிரில்மீ 16உ நாம் "தூத்துக்குடி விஞ்ஞாபன கண்டனம்" என்ற புஸ்தகத்தைச் சென்னபட்டணம் போய் அச்சிட்டுப் பிரசுரஞ் செய்தோம். அப்போதவ்விடமிருந்த தவசிமுத்து நாடார் எஸ்குயர் அவர்கள், அவ்விடம் முக்கியஸ்தரைவருத்தி, நமக்கதற்காக ஓர் ஞாபகமுகர்வாங்கிக் கொடுத்தனுப்பினார்கள்.

அம்மூகரின் பதிவு இதுதான்.

இப்போதும் 1889-ம்௵ ஜூன்௴ 10-ம்வ [illegible]ம் "சாணார் சத்திரியர்" என்னும் இந்நூலையும், இத்துடன் சேர்ந்துவரும் "இரக்ஷிப்பின்பிளான்" என்ற நூலையும் அச்சிட்டுப் பிரசுரஞ்செய்கிறோம்.

இச்சுருக்கமான எம்சரிதை எம்குலத்தவர்க்கு அவசியம் தேவையாயிருக்கிறதென்று நம்மை அநேகர் கேட்டுக்கொண்டமையால், இதை இங்ஙனம் நாம் அமைத்திருக்கின்றோம்.

PREFACE.

I have always felt it my duty to publish refutations against objections raised by those, who assert that Shanars are not Kshatriyas. (Vide Appendixes). I have, therefore, endeavoured in this work to refute the statements made by Chenthinatha Iyer in his book, and in doing so, it is not my intention, as a Christian, to uphold any distinction of caste, since in the sight of God, there is no difference between Brahmans, Kshatriyas, Vaisyas, and Sudras. It is strange that Bishop Caldwell, who is paid and ordained to preach against the observance of caste distinction, delivered a lecture in England on the 22nd June 1875 stating that Native Christians in India may be allowed to observe caste distinction, and has published a book entitled the "Tinnevelly Shanars".

The following is an extract from the Madras Church Missionary Record. "This was a paper read at the afternoon sitting, on—The Manners and Customs of Western Christianity, how far to be enforced on converts to the faith:—introduced by Dr. Caldwell, so well known to us here in South India, in which it was argued that the relinquishment of caste, as a pre-requisite for babtism, was to put upon the Native Converts, a burden too heavy for them to bear, and one which, he was satisfied, the Apostles would not have imposed.

This remark was taken up by a young Brahman Convert present, who asserted that it was 'a curious fact that the Brahmans, when they put on Christ looked upon their caste as mere rags, and without hesitation threw it away,' and that caste was, in his opinion, 'altogether incompatible with Christianity.' Others too spoke against Dr. Caldwell's views.".

"We cannot, therefore, but deeply regret that one, so deservedly esteemed as Dr. Caldwell should have lent the weight of his name and long experience as a Missionary to the apparent countenance of caste within the fold of the Christian Church, and that he should have allowed his hearers to go away with the impression that his Missionary brethern in India are either so foolish, or so ignorant, as to set their faces against Caste, merely because it is an institution opposed to the 'manners and customs' of Western Christianity". (Vide Madras C. M. S. Record July, August and September 1875, pp 173—176).

Thus by the statements of Bishop Caldwell, the Native Christians are obliged to resuscitate their caste feeling and keep it up, and thereby there have long been two factions among the Native Christians of Tinnevelly in South India. The Non-Shanar Christians and the Shanar Christians have, for a long time past, tried to supplant each other in the regard and love of the European Missionaries. This rivalry culminat ed in the publication of the pamphlet "Shanars not Kshatriyas" by Chenthinatha Iyer, at the ins-

tigation of certain Non-Shanar Christians, because the Shanars had proved that Bishop Caldwell's pamphlet the "Tinnevelly Shanars" is not consistent with facts, and that the Shanars are really Kshatriyas by Caste and that the arguments in the pamphlets "Bishop Caldwell and the Tinnevelly Shanars" and " Dravida Kshatriyas", which are intended to prove that the Shanars are Kshatriyas, obviously fall into the mood "Barbara" of the first figure thus:—

The *Shandore Caste* is the *Kshatriya Caste*;
The *Shanar Caste* is the *Shandore Caste*:
Therefore the *Shanar Caste* is the *Kshatriya Caste.*

Chenthinatha Iyer has not been able either to understand this argument or to reduce it to the proper form of Syllogism. His exposition of the principle, which renders every Syllogism valid, is obscure, and must be characterised as incorrect. There is also another argument that because the Shanar is mentioned by a writer after the Vedar (வேடர்), therefore the Shanar and the Vedar are one and the same Caste, which is as incorrect as the argument that the Sudras are Brahmans, because they are mentioned after the Vaisyas, who are mentioned after the Kshatriyas, who are again mentioned after the Brahmans. (Vide pp 22, 23 of his book).

Chenthinatha Iyer according to his own admission, has written his book in order to strip the Shanars of the name Shandore, (Vide his Preface,) and he affirms that Bishop Caldwell, who

had settled among the Shanars with the avowed object of preaching Christianity to them, published his "Tinnevelly Shanars" to discourage the conversion of the Shanars himself and to teach other Missionaries that it is not desirable to convert the Shanars to Christianity. (Vide pp 36-38 of his book).

The following pages contain a minute examination of the various statements made by the said Chenthinatha Iyer, and if it in any way conduces to the welfare of my castemen, I shall feel amply recompensed.

Palamcottah.
10*th June* 1889. } Y. Gnanamuthoo Nadar.

முகவுரை.

—:o:—

சான்றோர் குலத்தவரை க்ஷத்திரியரல்லவென்று ஆட்சேபனைகள் எழுதிப் பிரசுரஞ்செய்வோர்க்குக் கண்டனங்கள் அச்சிடுவது நெடுகிலும் நமதுவேலை. (அநுபந்தங்கள்பார்க்க). ஆதலின், செந்திநாதையர் அச்சிட்டிருக்கும் நூலுக்கும் நாம் கண்டனங்கள்கூறி, அவர் சந்தேகங்கள் அங்கங்கேயிருக்கின்றவைகளுக்கு நியாயங்கள் எழுதிப் பிரசுரஞ்செய்ய ஏற்பட்டோம்.

வெவ்வேறுபாஷைகளைப் பேசும் வெவ்வேருநாட்டவரும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனும் நாலுஜாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அததுகளில் சங்கர ஜாதிகளின் வகுப்புகளுமுண்டு. அப்படியே, மராட்டிய நாட்டிலுள்ளோர் மராட்டியப் பிராமணர், மராட்டியக்ஷத்திரியர், மராட்டிய வைசியர், மராட்டியச்சூத்திரர் எனும் நாலுவகுப்பில் நிற்கின்றனர். தெலுங்கர் அல்லது வடுகநாட்டவரும் வடுகப்பிராமணர், வடுக க்ஷத்திரியர், வடுகவைசியர், வடுகச்சூத்திரர் எனும் நாலுவகுப்பில் நிற்கின்றனர். தமிழ் அல்லது திராவிடநாட்டவரும் தமிழ்ப் பிராமணர் அல்லது திராவிடப்பிராமணர், தமிழ் க்ஷத்திரியர் அல்லது திராவிடக்ஷத்திரியர், தமிழ்வைசியர் அல்லது திராவிடவைசியர், தமிழ்சூத்திரர் அல்லது திராவிடச் சூத்திரர் எனும் நாலுவகுப்பில் நிற்கின்றனர். இந்து தேசத்தின் மற்றும்பாஷைக்காரரும் அவ்வாறே. அந்தந்தப்பாஷைக்காரருள் அநுலோமர், பிரதிலோமர், அந்திராளர், விராத்தியர்முதலான சங்கரஜாதிகளுமுண்டு.

"சாணார் சத்திரியர்" எனும் இந்நூலில், செந்திநாதையரின் ஒவ்வொரு குதர்க்கங்களுக்கும், பிஷப் கால்டுவேலின் விபரீத வாசகங்களுக்கும் தமிழர் சாஸ்திரங்களைக்

கொண்டு கண்டனங்களும், சாணூர் தமிழ் அல்லது திராவிடக்ஷத்திரியரென்று எவரும் கட்டாயமாய் ஒப்புக்கொள்ளத்தக்கபோந்த ருசுக்களும் அடங்கியிருக்கின்றன. அலெக்சான்டர் ஐயர், சாயற்புரம் காலெஜ், சௌந்திரநாயகம்பிள்ளை, கால்டுவேல் பிஷப் விஷயங்களாய்ச் சான்றோர் ஜாதியைப்பற்றி நடந்த கடிதங்களும் அவைகளின் பதில்களும்; மகா இராணி அம்மாளவர்கள் ஆபிசுக்கும், திருவாங்கூர் மகா இராஜா அவர்களுக்கும், வைசிராய் அவர்களுக்கும், கவர்னர் அவர்களுக்கும், மெட்ராஸ் மியூசியம் தலைவர் அவர்களுக்கும், இஸ்ற்றேற்று செக்கரட்டேரியார் அவர்களுக்கும் சாணூர் சத்திரியர் என்று எழுதி அனுப்பியகடிதங்களும் அவைகளின் பதில்களும்; செந்திநாதையர் பிராதும், அதன் பைசலும், பலபல சில்லரை சான்றோர் ஜாதி ரிக்கார்டுகளும், அங்கிலேயபாஷையிலும் தமிழ்ப்பாஷையிலும், வெவ்வேறாய் அநுபந்தங்களாகவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நாம் இதை ஜாதிவித்தியாச முறையாயெழுதவில்லை. கிறிஸ்தவர்களுக்கு ஜாதிவித்தியாசமேயில்லை. அந்நிய சொசையிற்றியிலிருந்து கிறிஸ்தவராய் வந்திருக்கிறவர்களும், அவர்கள் போதனையால் இயூரோப்பிய குருமாரும், சாணூர் தாழ்ந்த ஜாதியாரென்பது இந்து சாஸ்திரம் நோக்காமல் சொல்லுகின்றனரெனவும், அவர்கள் அதில் க்ஷத்திரியர் என்று சொல்லப்பட்டிருக்கின்றாரெனவும், ஜாதி யேற்பாட்டு இந்து சாஸ்திரங்களை எடுத்துக்காண்பிப்பதே நமது நோக்கம். கடவுளுக்குமுன் பிராமணர்குலத்தவரான மாணிக்கவாசகரும், க்ஷத்திரியர் குலத்தவரான ஏனாதிநாயனாரும், வைசியர் குலத்தவரான மூர்த்திநாயனாரும், சூத்திரர் குலத்தவரான திருநாவுக்கரசு நாயனாரும் சமமே. பிஷப் கால்டுவேல் 1875-ம் வரு ஜூன்மீ 22உ சீர்மையிலோர்கூடுதலில், கிறிஸ்தவர் ஜாதிவித்தியாசம் பார்ப்பது பாவமல்ல,

அதாவது அவர்கள் ஞானஸ்நானத்திற்கு முன்ஜாதியை விட்டுவிடவேண்டியது அவசியமல்லவென்று எழுதிவா சித்தனர். இதுமிருந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணி னது. சி. எம். எஸ். கமிற்றிமாரும் இதைப்பற்றிப்பிர மிக்கின்றுர்கள். (சி. எம். எஸ். ரிக்கார்டு, 1875-ம் ஷு ஜூலை, ஆகஸ்டு, செப்ற்றெம்பர்மீ 173 முதல் 176 வரை பக்கங்கள்பார்க்க). ஜாதி வித்தியாசமில்லையெ ன்று பிரசங்கிக்கும்படி அங்கிலேய திருச்சபையின் சம் பளத்திலும் குருப்பட்டத்திலும் அமைந்திருக்கும் இவர், அங்கிலேய திருச்சபையின் கொள்கைக்கு விரோதமா ய் ஜாதிவித்தியாசம் பார்க்கலாமென்று பிரசங்கிப்ப தும், ஜாதிவித்தியாசத்தை இந்துக்கிறிஸ்தவர் நடுவில் ஸ்தாபித்து "திருநெல்வேலிச் சாணுர்" என்றபுஸ்தகத் தை அச்சிட்டுப் பிரசுரஞ் செய்திருப்பதும் யோசிப்ப வர்க் காச்சரியமாயிருக்கின்றது.

பாளையங்கோட்டை
1889-ம் ஷு
ஜூன்மீ 10-ம்வ.

ஏ. ஞானமுத்துநாடார்.

தமிழ்நாட்டுப்பார்ப்பார் தங்கள் ஜாதிப்பேரை தமிழ் வார்த்தையில் வழங்காமல், பிராமணரென்று சமஸ்கிர்தவார்த்தையில் வழங்குவதுபோல, தமிழ்நாட்டுச் சாணரென மருஉவாய்வரும் சான்றூர் குலத்தவர், தங்கள் ஜாதிப்பேரைத் தமிழ்வார்த்தையில் வழங்காமல், க்ஷத்திரியரென்று சமஸ்கிர்தவார்த்தையில் வழங்கினலும்குற்றமன்று.

TABLE OF CONTENTS.

பொருளடக்கம்.

பக்கம்.

அரங்கேற்றம் v
நூலாசிரியரின்சரித்திரம் vii
நூன்முகம் (அங்கிலேயபாஷையில்). ... xi
(a) பிஷப் கால்டுவேல் ஜாதி வித்தியாசம் பார்க்கலாமென்று பண்ணியபிரசங்கமும், அதன்பேரில் கமிற்றிமார் செய்த குறிப்பும். xi
(b) சாணர் க்ஷத்திரியரென்று ஓர் நீதிசாஸ்திரருபகாரம் (ஓர் சிலெஜிஸ்ம்). xiii
முகவுரை (தமிழ்ப்பாஷையில்). ... xv
(a) மராட்டியநாட்டு க்ஷத்திரியர் ... xv
(b) தெலுங்கு அல்லது வடுகநாட்டு க்ஷத்திரியர் xv
(c) தமிழ்நாட்டு க்ஷத்திரியர் xv
(d) அநுலோமர் xv
(e) பிரதிலோமர் xv
(f) அந்திராளர் xv
(g) விராத்தியர் xv
(h) மாணிக்கவாசகர் xvi
(i) எனாதிநாயனார் xvi
(j) மூர்த்திநாயனார் xvi
(k) திருநாவுக்கரசுநாயனார் xvi
☞ ஓர் பிரதான வாசகம் xviii
1. கால்டுவேல்பிஷப்பும் செந்திநாதையரும் ... 1
2. "திருநெல்வேலிச்சாணர்" என்ற புஸ்தகத்திற்கிட்டபெயர் சரியான பெயரன்று ... 4

3. சிவகாசிவர்த்தகர் 5

4. நாடாக்கள் என்னும்பதம் நாடு+ஆட்கள் என்ருகி, "ஆராயுஞ்ஜனங்கள்" என்றர்த்தமல்ல. 7

5. சாணுனென்பது சான்ருர் என்னும் சொல்லின் திரிபு. 8

6. சாணுர், சான்ருர், சான்ருேர், சான்றவர் என்றவைகள் க்ஷத்திரியர் ஜாதியைக்குறிக்கும் மொழிகள் 9

7. நாடார் என்பது பனைப்பிரயோஜனத்தை விடுத்தவனென்றர்த்தமல்ல 9

8. நாடாக்கள் என்பதற்கு நாட்டிலுள்ளார் என்றர்த்தம். அதற்கு இலக்கணம்... ... 11

9. நாடார், நாடாக்கள் என்றவைகள் "நாட்டை ஆண்டவர்" என்றர்த்தம். அது அதிவியாப்தி என்னும் குற்றமல்ல 12

10. இராஜாஜாதி 12

11. தேவர் 12

12. கோனுர் 12

13. நாடான், நாடார்என்றவைகள்உபஜாரப்பதமல்ல 13

14. சாணுர் க்ஷத்திரியனென்பதற்கு பத்துப் பிரதான ருசுக்கள் 14

(1) திவாகரம் நிகண்டிரண்டிலும் சூத்திரங்களும் பாட்டுகளும் நாலுஜாதிகளின் வரிசைப்படி பாடப்பட்டன. அவைகளின்விபரம் 14

(2) தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல் 5-ம் சூத்திரத்தைக்கொண்டு ருசு. அதில் சான்ருேர் 2-ம் ஜாதி என்று கண்டிருக்கிறது 15,33,109

(3) சீவகசிந்தாமணி, நாமகளிலம்பம், 361-ம் பாட்டைக்கொண்டு ருசு. அதில் ஜீவகன் என்று இராஜகுழந்தைக்கு, பார்ப்பாரும் சான்ருேர் உள்ளிட்டோரும்

கூடி, பேரிட்டனர் என்று நச்சினாக்கி ணியர் உரைசெய்திருக்கின்றனர். 15,33,109

(4) தஞ்சைவாணன் கோவை, வரைதல், 366-ம் பாட்டைக்கொண்டு ருசு. அதில் அந்தணரையும் சான்றோரையும்வைத்து இராஜாவின் கலியாணம் நடந்த தென்று சொல்லப்பட்டிருக்கின்றது 51,33,109

(5) பார்ப்பார் என்பது பார்க்கிறவர், சான்றோர் என்பது கல்விமான்கள் என்பதைக்கொண்டு ருசு. ஏனென்றால், பார்ப்பார் வேதத்தைப்பார்க்கிற ஞானக்கண்ணுடையவர்: சான்றோர் குடிகளை ஆளும் கல்வித்திறமை யுடையவர் ... 15

(6) திருக்குறளில் கல்வி அரசியனுள், அதாவது ராஜ இலட்சணங்கள் கூறப்படும் அத்தியாயத்தினுள், வைக்கப்பட்டதைக்கொண்டு ருசு.... 15

(7) பழமொழியில் கல்வி அரசியலுள்வைக்கப்பட்டதைக்கொண்டு ருசு ... 16

(8) நாலடியாரில் கல்வி அரசியலுள்வைக்கப்பட்டதைக்கொண்டு ருசு 16

(9) மூன்று மூனு என்றும், மூன்றான் மூனான் என்றும் வழங்குவனபோல, சான்றாரென்பது சானூொன வழங்குகிறதென்பதைக்கொண்டு ருசு. இது இலக்கணவிதிப்படி மரூஉ ஆகிறது ... 16

(10) சான்றார், சான்றவர், சான்றோர் என்னும் சொற்கள் "மிகு" எனப்பொருள்படுகின்ற "சாலு" என்னும் பகுதியில் நின்று பிறந்து, ஒருபொருள்கொண்ட மொழிகளாயிருப்பதைக்கொண்டு ருசு. 16

15. உவின்ஸ்லோ, ராட்லர்முதலிய அகராதிகளில் சாணூர், சான்ருர், சான்ருேரென்றவைகள் ஜாதிப்பெயராகக் கண்டிருந்தும் க்ஷத்திரியர் என்று காட்டாததற்குக் காரணம் 17
16. சாணூர்பேர் நிகண்டில் கண்டிருக்கிற விபரம். இலக்கணம் 18
17. சான்ருேரென்பது ஜாதிப்பேராக முதலர்த்தமாய் வருகிற ரண்டுபாட்டுகள் ... 19
18. பறையர்பேர் திவாகரத்திலிருக்கிறது ... 19
19. பள்ளர்பேர் திவாகரத்திலிருக்கிறது ... 20
20. சகலஜாதிகளின் பெயரும் திவாகரம் நிகண்டுகளில் நிறுத்தியிருக்கிறது 20
21. அறிவுடையோரென்று அர்த்தங்கொள்ளும் சான்ருர், சான்ருேர் என்றவைகள் க்ஷத்திரியருக்குப் பேராகத் தமிழில்வழங்கிவருகின்றன 20
22. சான்ருர் என்பதற்குமூலபதம் "சாறு" என்று உவின்ஸ்லோ சொன்னலும், "சாறு" என்பதுக்கு மூலபதம் "சாலு" என்று அவர் சொல்வார். அதற்கு இலக்கணம் ... 21
23. ஆதியில் நூல்கள் எழுதின சான்ருேர்குலத்தவர் 22
24. மது, மதுச்செய்வோர் 23
25. மது உற்பத்தி செய்வோர் பாவத்தைவிளைவிக்கிறவரல்லர் 24
26. சான்ருர் வேடருமல்லர்: ராமருக்குதவியாக வந்த அனுமப்படைகளுமல்லர் ... 25
27. புரொபசர்மானியர் உவில்லியம்ஸ்சொல்வது. 25
28. நிகண்டு திவாகரங்களில் கண்ட ஜாதியேற்பாடுகளும், பிஷப் கால்டுவேலின் ஜாதியேற்பாடும் 26

29. நிகண்டு திவாகரப்படி பாடப்பட்டது; அமரத்தின்படி பாடப்பட்டதல்ல; நிகண்டும் அமரமும் ஒத்திருக்கவில்லை 27
30. அமரம் மூன்றுகாண்டங்களில் 1-வது, 2-வது காண்டங்களைக் கொண்டதற்கு ருசு 27
31. பிராமணருக்குச் சான்றவர், சான்றோர், சான்றார் என்னும் பேர்களில்லை 29
32. திவாகரம் 11-ம் சூத்திரத்தில்வரும் சான்றோர் பிராமணரானால் அதுகூறியது கூறல் என்னும் குற்றமாகிறது. அதற்கு ருசு... 29
33. அறிஞர் என்ற அறிவுடையார் என்னும் பதம் பாண்டியனைக் குறிக்கிறது. அதற்கு ருசு 30
34. திவாகரம் மக்கட்ப்பேர்த்தொகுதி 19-ம் சூத்திரத்தில் வருவது கிரீடாதிபதியின்பேர்; குலப்பேரல்ல; அது எவ்வரசனுக்கும் பொருந்தும். அதற்கு ருசு 30
35. சேர, சோழ, பாண்டிய அரசர்களுக்கு நாடான் என்பது பட்டப்பேர் 31
36. தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, தஞ்சைவாணன்கோவை, திருவள்ளுவர் குறள், கம்பராமாயணம் முதலியநூல்களில் வரும் சான்றோர் என்றமொழி ஜாதி நோக்கி நிற்கிறது. அவைகள் ஒவ்வொன்றின் விபரம் 31
37. நாவிதர் 34
38. சாணார்காசு என்றதனால் சாணார்முன்னரோ அரசுபுரிந்தவரொன்றுகிறது 35
39. கள்ளச்சான்றார் 37
40. கொடிக்கால் சான்றார்... 38
41. நட்டாத்திச்சான்றார் 38
42. ஏனாதிநாயனார் க்ஷத்திரியர் குலத்தவர். அவர் குலம் பெரியபுராணத்தில் சான்றார்குலம் என்று கண்டிருக்கிறது 39

43. திவாகரர் ஜாதி முறைக்கும் நாவலர்ஜாதி முறைக்குமுள்ளபேதம் 40
44. சூரியவம்மிசக்ஷத்திரியர் பூணூலிழந்த முகாந்தரம். 41
45. ஏற்றல் அரசருடைய அறுதொழிலில் ஒன்றல்ல 42
46. க்ஷத்திரியருக்கு இப்போது அங்கமாக மந்திரியும், நாடும், அரணும், பொருளும், படையும், நட்புமில்லாததற்குக் காரணம் ... 43
47. பரிமேலழகர் சான்றோர் 44
48. சான்றோர் கட்டைப்புத்திக்காரரல்லர் ... 44
49. "திருநெல்வேலிச்சாணார்" என்ற புஸ்தகத்தை பிஷப் கால்டுவேல் எழுதியதாகச் சொல்லப்படும் காரணம் 45
50. மற்றும் ஜாதிகளும் தம்தம் ஜாதியைப்பற்றி நூல்கள் எழுதியிருக்கின்றனர்... ... 46
51. தமிழ் க்ஷத்திரியர் எக்காலத்தினும் ஒழிந்து போயிருப்பதில்லை 46
52. தோள்ளைக்காதும் முடித்தலையும் 47

அநுபந்தம் A.

1. சாணார் இந்துக்களல்லவென்றெழுதிய ரெவ. அலெக்சாண்டருக்குஎழுதிய 1-ம் கடிதம்... 49,111
2. சி. எம். எஸ். செக்கிரட்டேரியாருக்கு எழுதிய லெட்டர் 54,118
3. ரெவ. அலெக்சாண்டருக்கு எழுதிய 2-ம் கடிதம் 56,120
4. பிஷப் கால்டுவேலுக்கு எழுதிய லெட்டர் 58,122
5. சி. எம். எஸ். செக்கிரற்றேரியார் "சாணார் இந்துக்கள்" தாம் என சி. எம். எஸ். ரிக்கார்டில் செய்த பிரசுரம் 60,124

அநுபந்தம் B.

1. சாணார்தாழ்ந்த ஜாதி யாதலின் சாயர்புரத்தினில் முதற்தரம் காலேஜ் ஸ்தாபிக்கப்படக்கூடாதென்றேற்பாடான தீர்மானம் ... 61

2. அது சாயர்புரத்தினிலேயே ஸ்தாபிக்கப்படவேணுமென்று வரையப்பட்ட லெட்டர் 62

3. அது பலிதமாகி "நன்மை விரும்புவோன்" ஒருவர் எழுதிய லெட்டர் 64

4. இச்சந்தோஷசெய்தியினிமித்தமாய் பலர் எழுதின கடிதம் 65

அநுபந்தம் C.

1. சௌந்திரநாயகம் பிள்ளை பி.எ., பி.எல்., சாணார் தாழ்ந்தஜாதி யென்றெழுதிய 1-ம் லெட்டர் 66

2. அதற்கெழுதிய பதில் லெட்டர் 67

3. சௌந்தரநாயகம்பிள்ளை எழுதிய 2-ம்-3-ம் லெட்டர்கள் 70,71

4. அவைகள் ரண்டிற்கும் எழுதிய பதில் லெட்டர் 72

5. சௌந்திரநாயகம் பிள்ளை எழுதிய 4-ம் லெட்டர் 74

6. அதற்கெழுதிய பதில்லெட்டர் ... 75

7. சௌந்திரநாயகம்பிள்ளை அப்புரம் எழுத ஏலாமல் விட்டுவிடல் 77

8. அவர்விட்டுவிட்டதன்மேல் எழுதப்பட்ட அடுத்தலெட்டர் 77

அநுபந்தம் D.

1. பிஷப்கால்டுவேலுக்கு விரோதமாய் சான்ருேர் கிறிஸ்தவர் சீர்மைக்கெழுதியபிரியாது 81,126
2. இந்துமதச்சான்ருேர் அவருக்கு விரோதமாய் சீர்மைக்கெழுதியபிரியாது ... 84,129
3. இங்கிலாந்துதேச மந்திரியவர்களுக்கு எழுதியது 86,131
4. மந்திரியவர்களிடமிருந்துவந்தபதில் ... 87,133
5. சான்ருேர்குலத்தவர் சீர்மைக்கு ரண்டாந்தரம் எழுதிய பிரியாது 88,133
6. இந்தியாவின் வைசிராயவர்களுக்கு எழுதிய பிரியாது 88,134
7. வைசிராயவர்களின் பதில் 89,135
8. மதிராஸ் கவர்ன்மென்ருரவர்களுக்கெழுதியது 89,136
9. மதிராஸ் மீயூசியம் தலைவரவர்களுக்கெழுதியது 90,136
10. அதற்குவந்தபதில் 90,137
11. திருவாங்கூர் மகாராஜா அவர்களுக்கெழுதியது 91,138
12. அதற்கு அவர்களெழுதிய பதில் ... 91,138
13. புதியம்புத்தூர் எஸ். பி. ஜி. பிராவின்சியல் கவுன்சில் 92
14. சாயற்புரம் எஸ். பி. ஜி. பிராவின்சியல் கவுன்சில். நேரில்சண்டை... ... 92
15. சபைக்குழப்பம் 93
16. இங்கிலாந்து சபையைவிட்டு வேறுசபையில் சேருதல் 94
17. மதபேதகம் 94

அநுபந்தம் E.

1. செந்திநாதையர் பிரியாது 95
2. ஜட்ஜிமெண்டு 98
3. இங்கிலாந்து இந்திய இஸ்ற்றேற்று செக்கரற்றேரியாரவர்களுக்கெழுதியது ... 99
4. இண்டார்சு உத்தரவு 102
5. இந்தியன் சர்ச்சுமன் என்ற கல்குத்தாப் பேப்பரின் பிரசுரம் 102
6. சத்தியவர்த்தமானியின் பிரசுரம் 103
7. சிலுவைக்கொடியின் பிரசுரம் 103
8. மதிராஸ் சி. எம். எஸ். ரிக்காரிட்டின்பிரசுரம் 104
9. மதிராஸ் சென்சஸ் ரிப்போரிட்டின் பிரசுரம் 104
10. ரெவ. ஏ. ஆர். சிம்மன்ஸ் ஐயரவர்களின் பிரசுரம் 105
11. ரெவ. ரிங்கிள்ற்ரூப் ஐயரவர்களின் பிரசுரம் 105
12. ரெவ. கால்டுவேல் ஐயரவர்களின் பிரசுரம்... 105
13. சாணார் க்ஷத்திரியரென்று இதுவரைபிரசுரமாயிருக்கின்ற நூல்கள் 139

அநுபந்தம் F.

1. புஸ்தகத்தினுள் கண்டிருக்கிற நூல்களின் பாடல்களும், அவைகளைச் சார்ந்தவைகளும் 106-110

இனிமேல் பிரசுரமாகும்புஸ்தகங்களின்விளம்பரம் 111

CORRIGENDA.

முக்கியபிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
12	15	இராஜ	இராஜா
12	16	வடே	வே
13	21	விபரம்	விபரம்,
13	22	பார்.	பார்
19	7	வாசித்துப்	வாசித்து,
21	3	"சான்ருர்"	"சாற்ருர்"
21	27	வேள்ளம்	வெள்ளம்
33	13	தையருடைய	தையர்சொல்லும்
34	12	நோக்காது."	நோக்காது,''
34	25	17-ம்	12-ம்
34	26	19 ம்	13-ம்
35	18	யிலும	யிலும்,
37	1	வாசி, குலத்தவருள் ஓர்கோத்திரத்தார்	
38	6	வாசி, பட்டனர். கள் (=அமுதம்) என்றவார்த்தையிலிருந்தும் கள்ளன் என்பது பிறந்தது.	
38	17	solsun	sol=sun
38	30	கேட்டு, வாங்கிச்	கேட்டுவாங்கி,
39	5	பின்	முழப்
42	25	வருந்தர்து	வருந்தாது
45	27	தர்ஜுமால்	தர்ஜுமா
47	17	வாசி, இந்து க்ஷத்திரியனுன புத்தனுடைய சிலே	
48	1	எவவற்றையும்	எவ்வற்றையும்
57	4	களென்றும்.	களென்றும்,
70	29	பரபருக்கு	பரவருக்கு
75	8	ரேன்பதுக்கும்	ரென்பதுக்கும்
87	27	வாசி, அவர்கள் பிஷப் கால்டுவேலே நன்மை செய்ய ஏவும்படி அவர்களைக் கேட்டனுப்பப்பட்டது.	
99	2	வாசி, Secretary of State	

இரக்ஷிப்பின் பிளான்.

25	17	இரட்சிப்புக்	இரக்ஷிப்பு

SHANARS
ARE
KSHATRIYAS.

சாணார் சத்திரியர்.

சிறிது தினங்களுக்குமுந்தி செந்திநாதையர் என்று பேர்கொண்ட ஒருவரியற்றிய "சாணசத்திரியப் பிரசண்டமாருதம்" என்றோர் நூலைப்பார்வையிட்டோம். அதேதோ சற்குணநாடாரவர்கள் கால்டுவேல் பிஷப்பவர்களைத் திட்டிவிட்டதாகவெண்ணிப் பதைபதைத்து, செந்திநாதையர் பிஷப்புக்கு வக்காலத்துபிடிக்கவந்ததுபோலுந் தோன்றியது. இவரிப்படி வக்காலத்துப்பிடிக்கவந்த முகாந்தரமென்னவென்று விசாரித்தாலோ, பிஷப்புக்குஞ் சாணாரக் கிறிஸ்து சமயத்தவருக்கும் மனஸ்தாபமுண்டாயிருக்கும் இக்காலத்தில், இப்படி பிஷப்புக்குக்காக பரிந்துபேசி ஒருபுஸ்தகம் எழுதிவைத்தோமானால், அவர் இவ்விடம் வந்தவுடன் தன்பேரில் மானஞ்சாதித்து தகுந்தசம்பளம் வைத்துத் தருவார் என்ற எண்ணத்தாலோ, அல்லது இப்படி குயுக்தியானநூல்கள் எழுதுவதில் தாம் சமர்த்தரெனக்காட்டவோ, அல்லது வேறுமுறையாலோ, ஏதோ அறிகிலேம். சற்குணநாடாரவர்களெழுதிய புஸ்தகத்தைக் கண்டிக்கமுயன்ற இவர், அவர்கள் எழுதிய நியாயங்களைத்தவிர்க்க ஏலாமல் சான்றோர்குலத்தவரை நிந்திக்கப்புகுந்து புன்மொழிகூறியது, பெண்டாட்டிக்கு ஆற்றமாட்டாது பானைசட்டி உடைக்கிறவகைபோலவும், சந்திரனைப்பார்த்து குறைகூறுவதுபோலவுந்தானிருக்கிறது. ஆனாலும்,

தம்மை யிகழ்வாரைத் தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

என்ற முதுநூல்பிரகாரமும்,

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய்சொல்லியக் கால்சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு,

என்ற நீதிநெறிப்பிரகாரமும், நாமும் புன்மொழிகூறா துவிடுகிறோம். செந்திநாதையருடைய சந்தேகங்கள் அங்கங்கே இருக்கின்றவைகளுக்கு நியாயம் எழுத ஏற்பட்டோமேதவிர, தூஷணைசெய்ய நாம் இதை எழுதவில்லை. ஆதலின், இந்நூலைச் செந்திநாதையர் வாசித்த பின் நூலெழுதுவாரொன்றால், யோக்கியதையாக மேலோரொப்பத்தக்கவிதமாய் எழுதுவாராக. தூஷணை செய்வது கீழோருடைய புன்றொழிலேயன்றி, மேலோர்தொழிலாகுமா? ஒருபோதுமாகாது.

இற்பிறப் பில்லா ரெனைத்து நூல் கற்பினுஞ்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ—விற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூ றேற்றாதார்
புல்லறிவு தாமறிவ தில்.

மேலும், இந்தச் செந்திநாதையர் சான்றோர் குலத்தவர் பிஷப்புக்குவிரோதமாக நூலெழுதியமையால் செய்நன்றி கொன்றவரெனவும், அப்படி யிருக்கப்படாதெனவும், செய்நன்றிப் பிரசங்கம் செய்கிறதற்கு இவர்பிஷப்பிடத்தில் பெறக்கருதும் நன்றி யெதுவோ! இதைக் குறித்து பிஷப்பு சற்று எச்சரிக்கையாயிருந்தால் நல்லது. சாணூர் கிறிஸ்துமார்க்கத்துக் குட்பட்டதினால் அநேகம் நன்மைகள் வந்ததுபோல சொல்லுகிறார். மேற்கண்ட நன்மைகள் சான்றோர் குலத்தவருக்கேன்

செய்யப்பட்டது. கிஸ்துமார்க்கத்தமைந்ததாலல்லவா? கிறிஸ்துமார்க்கத்தமையாது இந்து மதத்திலேயிருந்து இம்மிஷனரிமார்களிடத்தில் நன்மையைப் பெற்றவர்களெத்தனையோபேரென்று செந்திநாதையர் விசாரித்ததுமில்லையோ? கச்சேரியில்போய்க் கேட்கக்கடவர்.

மேலும், யாழ்ப்பாணம் முதலியவிடங்களிலுள்ள சில சூத்திரர் செய்கிறபடி படிக்குமட்டும் கிறிஸ்துமார்க்கத் தமைந்திருந்து, இரட்டைப்பேர்புனைந்து, கல்விவிஷயம் முடிந்தவுடனே பழையபேரைத் தரித்துக்கொண்டு, கிறிஸ்துமார்க்கத்தை மறுதலிப்பதுக்கொப்ப, இச்சான்றோர் குலத்தவருஞ் செய்யவில்லையென்று விசனப்படுகிறாரோ? சான்றோர் அப்படிச்செய்ய ஒருபோதும் உடன்படார்! இதுகாரியங்களைக் கவனிக்குமிடத்து, சான்றோர் குலத்தவர் பெற்றநன்மைகள் அற்பமென்றல்லவோ சொல்லவேண்டும். சான்றோர் கிறிஸ்துமார்க்கத்தமைந்ததால் சான்றோர்குலத்தவருக்கு நன்மை யுண்டாயிற்றென்றால், சான்றோர் குலத்தவரால் பிஷப்புக்கும் நன்மையுண்டாயிற்றன்றோ! இத்தனை சான்றோர் கிறிஸ்துமார்க்கத்தமைந்திலரென்றால், பிஷப்புப்பட்டமெங்கிருந்துவரும்? இங்ஙனமிருக்க, பிஷப்பு ஷை குலத்தவரை நிந்திக்க நியாயம் எப்படியுண்டாயிற்று. இதையறிந்த சற்குணநாடாரவர்கள் "தம்மையிகழ்ந்தாரைத் தாமவரின் முன்னிகழ்க" வென்ற முதுநூலுக்கிசைய, பிஷப்பு எழுதிப்பிரசுரஞ் செய்தநூலைக் கண்டனஞ் செய்தவரென்றால், செய்நன்றி கொன்றமையென்னுங்குற்றம் எங்ஙனம் நேர்ந்தது? செந்திநாதையர் இதில் பிரவேசிக்கவேண்டிய நிமித்தியம்தான் நமக்குவிளங்கவில்லை. பிஷப்பும் சான்றோர் குலத்தவரும் தம்தம் மனச்சஞ்சலத்தை வெளிப்படுத்திக்கொள்பவரென்றால், செந்திநாதையருக்கு எப்பக்கம்வலியுண்டாயிற்று. இதுதான் அடாதகாரியத்தில் தலையிடுவது. ஒருவேளை உண்மைசொல்ல வேண்டுமென்று புகுந்தனரோ? அப்படியுமிலது. வேணுமென்றோ, அறியாமையாலோ

சத்தியத்தை மறைத்து முழுப்பூசனிக்காயைப் பிடிசோற்றில்திணித்து மறைக்கப்பார்க்கிறார்.

பெருந்தாலிகட்டும் சாணார் குலத்தவரை சிறுதாலிகட்டும் சூத்திரர்குலத்தவருக்கு ஈனமெனப்புகல்வது உண்மையோ! பிராமணர் சூத்திரர்முதலிய உயர்குலத்தவரென்,சூத்திரரைப்பிராமணருக்கடுக்க நிறுத்தினதும் உண்மையோ! பிஷப் கால்டுவேல் தாமே ஒப்புக்கொள்ளும் விஷயங்களை மறுக்கத்துணிவதும் உண்மையோ! இதுவிஷயத்தை வேண்டும்போது தெளிவுறவெடுத்துக் காட்டுவோம். தாமெழுதிய புஸ்தகம் 17-ம் பக்கத்தில் காட்டுகிறபடி, பலபுஸ்தகங்களின் பேரை மூச்சுவிடாமல் சொல்லிவிடுவதால் இலக்கண இலக்கியங்களில் மகாவல்லவரென்பது ஏற்படுமென்று எண்ணினரோ! அவரெழுதிய புஸ்தகத்தில் காட்டும் நியாயங்களெவ்வகையென்று முறையேகவனிப்போம்.

1. முதல்முதல் பிஷப்புக்கு வக்காலத்துப் பிடிக்க இவர் ஏற்பட்டதெங்ஙனமெனில், "பிஷப்பெழுதியபுஸ்தகத்துக்கு திருநெல்வேலிச் சாணாரென்று பேரிட்டது தகாது" என்று சற்குணநாடாரவர்கள் சொன்னதை மறுத்து, அப்படியல்ல அப்பேர்தகுமெனக்கூறியதாம். *(செ-பு-பக். 6.) நல்லது,இவர் வக்காலத்து ஏற்றுக்கொண்ட பிஷப்புதாமே மேற்படி விஷயத்தைதாம் எழுதிய புஸ்தகத்தில் ஒப்புக்கொண்டால், இவர் வக்காலத்து யாது பயன்படும். அவர் எழுதுமாறு, "The Castes to which the greater number of the members of our native Congregation belong form the bulk of the population in the South of Tinnevelly" என்றும், "And probably comprise a majority of the entire province" என்றும், "The Shanars are the most numerous class amongst the heathen in the South Eastern part of Tinnevelly" என்றும் சொல்லுகின்றவைகளின் தாற்பரியமென்ன? "பிஷப்கால்டுவேலவர்கள் உண்மையுரைத்தாராக" என ஒப்புக்கொண்டதன

* செ - பு. செந்திநாதையர்புத்தகம்.

மேல், அவர்சொன்னதைமறுப்பது புத்தியோ. (செ-பு. முகவுரை பார்க்க) South eastern (தென்கிழக்கு) என்பது இடையன் குடிச்சரக அனுபவத்தைக் குறிக்குமேயல்லது, திருநெல்வேலிமுழுவதும் அந்தவார்த்தையிலடங்கியிருக்கிறதென்று செந்திநாதையர் ஞானக்கண்ணுக்குப் புலப்பட்டதோ? பின்னையேன் அப்புஸ்தகத்துக்கு "திருநெல்வேலிச்சாணர்" என்று பேரிடவேண்டும். இதையோசியாது இரண்டு தாள்நீளம் எழுதுவதில்காரியமென்னை? நாடாரவர்கள் பிஷப்போடு பிரியாமலிருக்கவில்லை யென்றால், செந்திநாதையரெங்ஙன மிருந்தார்? இவர்களிருவரோடும் அவர்பிரியாமலிருந்தாலல்லவாதம்முடைய நியாயப்படிக்கு, இவ்விருவருக்கும் வழக்குத்தீர்க்க வல்லவராவார்? இன்னும் பிஷப்புஎன்ன சொன்னார்! "In the absence of historical records and monuments it is impossible to gain satisfactory information respecting the origin and history of the Caste" இப்படித் தமக்குச் சாணருடைய உற்பத்தியைப்பற்றியும், அவர்களுடைய சரித்திரத்தைப் பற்றியும் ஒன்றுந்தெரியாது என்றுசொல்லிப்போட்டு, பின்பு அவர்கள் அப்படி இப்படி என்று பலவாறாகக் கூறியிருக்கிறார். இதுநியாயமன்றென்று நாடாரவர்கள் சொன்னால், விவேகிகள் இதைச்சரிதான்என்று ஒப்புக்கொள்வார்.

2. திருநெல்வேலியின் வடபகுதியிலுள்ள சாணர், வியாபாரம்நடத்தும் உபாயத்தில், ஒருஜாதியாரும் தமக்குச்சமமில்லாதவரென்று நாடாரவர்கள் புழுகினதாகச் செந்திநாதையர் சொல்லுகிறார் (செ. பு. பக். 10, 11.) நாடாரவர்களிதை எங்ஙனஞ்சொன்னார்கள்! அவர்கள்சொல்வது "The Shanars in the north of Tinnevelly who were scarcely surpassed by any other caste in their genius for trade" என்றுமட்டும் சொன்னார்கள். சாணர் மற்ற ஜாதியாருக்கு வியாபாரத்தில் இளைத்தவர்களல்ல வென்றுவது, மற்றைஜாதியாருக்

கொப்பந்தம் இவர்களும் வியாபாரத்தொழிலில் வல்லவர்களென்ருவது, பொருள்கொள்ளவேண்டியதேதவிர, வேறு அர்த்தங்கொண்டால், நாடாரவர்கள் சொன்னது பொய் என்று சொல்வது என்னமதி. நாடாரவர்கள் புஸ்தகத்தின் அங்கிலேயபாஷையை அர்த்தம்பண்ணவும் எலாமல் அதைக்கண்டிக்க முயன்றது என்னயோக்கியதை. வடபக்கத்துச் சாணூர் மற்றைஜாதியாருக்கொப்பந்தம் வியாபாரத்தில் கெட்டிக்காரரென்பது செந்திநாதையருக்குத் தெரியாதது ஆச்சரியந்தான். இது எல்லாரும் ஒப்புக்கொண்ட சங்கதி. ஆனுல், இதனுல் அவர்கள் இராசசெல்வம் பொருந்தியவர்களென்ருவது, குபேரசெல்வம் பொருந்தியவர்களென்ருவது எற்படுமா? செந்திநாதையரவர்களுடைய அனுபவத்தை என்னசொல்ல! வியாபாரத்தில் பொய்சொல்வது சாணூருக்கு விசேடலட்சணம்போல் கூறுகிருர். சாணூருக்கு மாத்திரமா அதுபொருந்தியது? மாரிஸ் இந்து தேசச்சரித்திரம் பக். 6-ல்இந்துக்களின் முக்கியமானகுறை கோழைத்தனம்,உண்மையின்மை,சோம்பல், அழிவழக்குஎன்றுகண்டிருக்கிறது. செந்திநாதையர் எக்காலத்தும் பொய்சொல்லா மெய்யரென்று மற்றவர்களெண்ணிக்கொள்ளவோ இப்படி எழுதினுர். இதுவே இவர் சாமர்த்தியப்புழுகென்ற நியாயத்தைவெளிப்படுத்தும். மேலும், நாடாக்களென்றமையால் வியாபாரத்தினுலும் கீர்த்தியினுலும் ஓங்கினவரென்று நாடாரவர்கள் சொன்னதாகச்சொல்வதும் பிசகு. (செ. பு. பக். 12.) இது எங்ஙனங்கண்டார்! இதுவும்நாடாரவர்கள்புஸ்தகத்தின் அங்கிலேயபாஷையை வியார்த்திபண்ணத்தெரியாமல், மௌட்டிகத்தால் கூறியதென்று கற்ருேர் எளிதில்கண்டுணர்வார். சிவகாசியைப்பற்றி ஓர்துரை எழுதியது:—"From their reputation and commercial character they are styled Nadikals" என்ருர். அதாவது, சிவகாசிச்சாணூருக்கு வியாபாரவிர்த்தியால் நாடாக்கள் என்ற பேர்வழங்குகிறதென்று மேற்படிதுரை எழுதியதில்,நாடாக்களென்பதுக்குப்பதில்ாக "நாடிகாள்" என்று

அச்சுப்பிழையாய்அமைந்திருக்கிறது. நாடிகாளென்பது நாடாக்க ளென்றிருக்க வேண்டியது. அந்தவார்த்தைக்கு "நாடுகளுக்கு அதிகாரிகளென்றர்த்தம்" என்றுமட்டும் எழுதுகிறார்கள். இது நாடாரவர்களெழுதிய நூலை வாசிப்போரெல்லாருக்கும் எளிதில்புலப்படும். அங்ஙனம்விட்டு, "எந்தநூலில்கண்டார்? இவருக்குச்சான்றாக வந்தசான்றார்பேர்தான் என்னே?" என்றுபலவாறாகக்கூறுவதில் நியாயமெங்ஙனமுண்டாகும்!

பின்னும், செந்திநாதையருடைய கல்வித்திறமையையும், புத்திக்கூர்மையையும் வெளிப்படுத்தி நாடாக்களென்னும் பதத்துக்குத் தாற்பரியம் பண்ணப்போகிறார். சற்றுகவனியுங்கள். நாடாக்கள் என்பதுக்கு நாட்டையாளுபவர் என்று நாடாரவர்கள்சொன்னதுபொருந்தாது; அப்பதத்தைப்பிரித்து "நாடு+ஆட்கள்" என்றாக்கி "ஆராயுஞ்சனங்கள்" என்று பொருள்கொண்டாராம். (செ. பு. பக். 13.) இனி என்னத்தையாராய்தல் என்ற கேள்விக்கு உத்தரவுசொல்லப்போகிறார். "பதநீரிறக்குங்காலங்களையும், நுங்குசீவுங்காலங்களையும், பனங்காயறுத்துவீழ்த்துங் காலங்களையும்,மற்றைப்பிரயோசனங்களை யெல்லாம்பெற்று அனுபவிக்குங்காலங்களையும் தவறவிடாது ஆராய்தலாகிய நாடுதலில் வல்லவர்களானதால் நாடாக்கள்" என்று பேராயிற்றென்கிறார். "நாடு ஆட்கள்" என்கிற வார்த்தையிலடங்கியபொருள் எத்தனைநீளம்!! இனிச் சற்றுயோசித்து தாற்பரியம்பண்ணுவோம்."Bp. Caldwell and the Tinnevelly Shanars" (பிஷப்கால்டுவேலும் திருநெல்வேலிச்சாணரும்) என்ற புஸ்தகம் வருங்காலத்தையும்,அதுக்குவிரோதமாக தாம் போலிநியாயம் எழுதுங்காலத்தையும், அதனால்வரும் பலாபலனையும் செந்திநாதையர் நாடியிருந்த ஆளானதால், செந்திநாதையரை நாளதுமுதல் செந்திநாதநாடாக்கள் என்று சொன்னால், சான்றோர்குலத்தவர் சம்மதிப்பாரோ! வைக்கீல்வேலைசெய்பவர்கள் பீஸ்வருங்காலங்களையும், கட்சிக்காரர்வருங்காலங்களையும், சச்சேரியில்

ஈரங்கிடக்குங்காலங்களையும், வரும்பலாபலனையும் நாடவேண்டிய ஆட்களானதால், வைக்கீல்களெல்லாம் வைக்கீல்நாடாக்களாய்விட்டார்களோ! அப்படியே ஒவ்வொரு உத்தியோகஸ்தருமா ஆய்விட்டார்கள்? இனி சாணருக்கு நாடாட்கள் பட்டங்கொடுக்க எல்லாரும் வருத்தப்படுவார்போலும். இவ்வளவு விசேடதாற்பரியஞ் செந்திநாதையர் மண்டையி லெப்பக்கத்திலூறியது! இத்தாற்பரியமா சுருதியனுபவங்களுக்கொத்தது! எந்தச் சுருதியிலிப்படித் தாற்பரியஞ் செய்திருக்கிறது. இதல்லவா பகலை இரவென்றுசொல்லும் படுபாதகமாகும். இதைவிட்டு மற்றவர்களைக் குறைகூறுவது என்னமதி.

3. "சாணார் என்பதையும் சான்றோரென்னுஞ் சொல்லின் திரிபுஎன்று சொல்லுவதற்குப் பிரமாணமில்லை" என்கிறார். (செ. பு. பக். 13.) இங்ஙனம் இவர் இவ்வாறுகூற இவருக்குபதேசித்தவர்யாரோ. பிஷப்கால்டுவேலவர்கள் "உண்மையுரைத்தாராக" "Intelligible form of the same name Sandrar of which Shanar is etymologically a corruption," என்கிறார். பிஷப்பு ஒப்புக்கொண்டதைஇவர்மறுப்பதுஎன்னயோக்கியதை. மேலும் இவரிங்கு சொஸ்தப்புத்தியோடிருக்கிறாரோ வென்றால் அதுவுமிலது. இங்கு சாணார் என்பது சான்றோர் என்பதின் திரிபு என்பதுக்குப் பிரமாணமில்லையென்ற இவர், 18-ம் பக்கத்தில் சான்றோர் என்றவார்த்தைக்கு மூலங்கண்டுபிடிக்கப்புகுந்து தம் மௌட்டிகத்தை வெளிப்படுத்தியது என்னமதியாலோ! 23 - ம் பக்கம் 15 - ம் வரியில் "வருணமரபின்படி சான்றோனப்படும் சாணார்" என்று கூறுவதும் என்னமதி? பின்னும் இத்தோடுநின்றதா! 30-ம்பக்கத்தில் நாயன்மார்வரிசைசொல்லுமிடத்து, ஏனாதிநாயனாரைச் சான்றோர்குலத்தவர் என்று நாவலர் ஒப்புக்கொண்டதாகவுஞ் சொல்லுகிறார். இது விஷயங்களைக்கொண்டு இவர் புத்திவிசால மிவ்வளவென்பதைக் கற்றோர் கண்டுகொள்ளட்டும்.

"சாணூர் தான் சான்ருரென்ருலும், சான்ருர் சான்ரோர் என்ருலும், சான்ருர் சான்றவரென்ருலும், இம்மொழிகள் சத்திரியஜாதியைக் குறிப்பதுக்கு யாதொரு இலக்கியபிரமாணமில்லை" என்கிருர். (செ. பு. பக். 13.) சற்குணநாடாரவர்களெழுதிய புஸ்தகமிரண்டிலும் இந்தவிஷயத்தைப் பூராவாக ருசுப்படுத்தியிருந்தும், அதைச் சற்றென்கிலும் கண்டிக்கமுயலாமல், காதையடைத்துக் கண்ணைமூடிக்கொண்டு பிறவிக்குருடனெருவன் பட்டப்பகலில் சூரியோதயமில்லையென்று குழறியவாறு போலுழறிஞல் யாம் என்னசெய்வோம். விவேகிகளுக்கும் யோக்கியர்களுக்கும் நியாயஞ்சொல்லப்படுமேயல்லது மற்றவர்களிடத்துப் பேசுவதும் யோக்கியதையன்று. இலக்கியப்பிரமாணமில்லையாம். சிந்தாமணி, குறள், நாலடியார், தொல்காப்பியம், தஞ்சைவாணன்கோவை முதலிய நூல்களைவிட இலக்கியமேதுவேண்டியது. இவர்தாம் உற்பத்திசெய்த இப்புஸ்தகத்தில் எவ்விதமான உயர்ந்த இலக்கியங்களையெல்லாங்கொண்டு நியாயஞ்சாதித்துவிட்டார் என்று வாசிப்போருக்குப் புலப்படாமற்போகாது. சற்குணநாடாரவர்கள் தாமெழுதிய புஸ்தகங்களில் சான்ரோர், சான்ருர், சான்றவர் என்னும் வார்த்தைகள் தமிழரசகுலத்தவர்பேராக வழங்கியிருக்கின்றதென்றுசொன்ஞல், நியாயஞ்சொல்லுகிறவர்கள் அது அப்படியன்றென்றும், அவ்விடங்களில் அதுவேறு அர்த்தங்கொள்ளவேண்டுமென்றும், இலக்கியப்பிரகாரமாக ரூபகாரப்படுத்திஞல் யாம் அதை ஒப்புவோம். ஒரு ஆதாரமுமின்றி புன்மொழிகூறும் செந்திநாதையர் வெறுமன இல்லையென்றுசொன்ஞல் அறிவுடையாரதை எங்ஙனம் ஒப்புவார்கள்.

4. "சாணூர் நாடாரென்று சொல்லப்படுகின்றமையால், இதுக்கு அர்த்தம்யாதென்பீராயின், நாடார் என்பது பணத்திஞலும் உத்தியோகத்திஞலும்சிறந்த சாணூருக்குமாத்திரம் உபசாரமாய்ச் சொல்லப்படுதலிஞல், இச்சாணூர் தங்கள்முன்னோர்கள் போலிராது பனைப்பி

யோசனத்தை மிகுதியும்விடுத்தவாரதலின் நாடாரென் றுசொல்லப்படலாம்" எனத்தமதுயுக்தியின் மிகுதியை யெடுத்துக்காட்டித் தமதுமதியீனத்தை வெளியாக்குகி ருர் (செ. பு. பக். 13). இதில்முந்தி "உண்மையுரைத் த" பிஷப்கால்டுவேல் Nadar (நாடார்) என்பதுக்கு Lord of the soil (நாட்டுக்கதிகாரி) என்றுசொல்ல, இ வர் இவ்விதமோடனத் தாற்பரியம்பண்ணினதை யோ க்கியர் கயமைஎன்பாரோ? "பனைப்பிரயோசனத்தை" என்றபதம் "நாடார்" என்பதில் எங்ஙனமடங்கினது? இங்ஙனமாகில், செந்திநாதையரும் தம்முன்னோர்கள் போவிராது பனைப்பிரயோசனத்தை மிகுதியும்விடுத்தவ ராதலின், செந்திநாதநாடாரென்று இனி அழைக்கப்படு வாரோ!! இத்தாற்பரியஞ்செய்வது எந்தச்சுருதிக்கொத் திருக்கிறது. இதையாவர் ஒப்புவர்?

மேலும், நாடாக்கள் என்பதுக்குத்தாற்பரியமாக, "ப னைப்பிரயோசனத்தை ஆராய்தலில் வல்லவர்கள்" என் றுசொன்ன இம்மாபுத்திமான், இங்ஙனம் "பனைப்பிர யோசனத்தை மிகுதியும்விடுத்தவர்" என்றுதாற்பரியம் பண்ணினயுக்தி எவ்விதயுக்தி? இது இவருடைய மௌ ட்டிகத்தை லேசாய்வெளியாக்கிவிடும். "பனைவளரும்நா டுகளில்வசிக்கு மியல்புடையாராதலின் நாட்டார்" என் ருல் (செ. பு. பக். 14.) செந்திநாதையருக்கு அப்பேர் ஏன் இடப்படவில்லை. அவரும் பனைவளரும் நாட்டில்தா னேயிருக்கிருர்.

* பாரதவெண்பா பீஷ்மர்சொல்லியது.

51 வது கவி.

"நாடறிய நாட்டார் சபையகத் தேபாஞ்சாலீ
நாடறியத் துசுரிந்த நாசத்தால்—நாடறிய
தன்னேவம் தீர்க்கத்தழை பூங்குழல் விரித்த
பொன்னே யவ்வண்ணமகள்." என்பதிலும்.

நளவெண்பா சுயவரகாண்டம்.

149 வது பாடல்.

"அங்கை நெடுவேற் கணையிழையாய் வாவியின்வாய்ச்
சங்கம் புடைபெயரத்தான் கலங்கிச்—செங்கமலப்
பூச்சிந்து நாட்டேறல் பொன்விளக்குந் தண்பணைசூழ்
மாச்சீந்து நாட்டானிம்மன்"

என்பதிலும், கூறப்பட்ட இராஜாக்களான "நாட்டார்" பணைவளரும் நாடுகளில்வசிக்கும் இயல்புடையாராதலின் "நாட்டார்" என்னப்பட்டாரோ? செந்திநாதையரே உண்மைபேசும்! இது நம்நூலுணர்ச்சியின் மிகுதியைவெளிப்படுத்திற்றே! "நாடாக்களென்பதுக்கும் நாட்டிலுள்ளாரென்று அர்த்தமுடித்தல் கூடுமோவெனில், அதுநாட்டாட்களென்று வந்தாலன்றி இலக்கணம் அதுக்கு இடங்கொடாதாம்" (செ. பு. பக். 14.) இங்ஙனம் இவர் இலக்கண ஆராய்ச்சியை என்னசொல்ல! "வேற்றுமைமிகவே" என்பதுக்கு உரையெழுதும் ஆசிரியர் சிறுபான்மை அப்படி இரட்டாதும்வரும் என்பதுக்கு உதாரணமாக, "காவிரிநாடு கிழவோன்" என்று எழுதியிருப்பதை இவர்பார்த்ததுமில்லையோ.நன்னூல் உயிரீற்றுப்புணரியல் 33ம் சூத்திரம். "நாட்டை ஆண்டவர்" என்றுபொருள் கொள்ளவேண்டுமென்றால், அதுநாடாண்டார் என்றுவராவிட்டால் முடியாதாம் (செ. பு. பக். 14.)அங்ஙனமாகில் உண்மையுரைத்த பிஷப்பு Lord of the soil (நாட்டுக்கதிகாரி) என்றுசொல்லுவானேன். நாடான் என்றபேர் நாட்டையாண்டவனென்று அர்த்தங்கொள்ளாவிட்டால், "நாடான்" என்னும்பேர் செய்யுட்களில் அதைக் குறிப்பதெப்படி? இதுவோமிஞ்சிய அனுபவம். செந்திநாதயருடைய இலக்கியத்தை யென்னசொல்ல! நாடான் என்பதுக்கு இராஜன் என்று நூலாசிரியர்கள் அர்த்தம்பண்ணியிருக்கின்றனர். "உண்மையுரைத்த பிஷப்பு நாடான் என்பதுக்கு Lord of the soil என்று தாற்பரியம்பண்ணுகிறார். ஆகையால் நா

டான், நாடன் என்பவைகள் ஒருபொருட்கிளவிகளாம். இது நூல்வழக்குக்கும் இலக்கணவிதிக்கும் ஒத்திருக்கிறது. இதைவிட்டுமோடனத்தாற்பரியம் பண்ணுவதில் பயனென்னே? எழுதினவருடைய அயோக்கியதையை வெளிப்படுத்தவோ? சான்றோர் என்பது எப்படி தமிழரசர்ஜாதிப்பேரோ அப்படியே நாடன் நாடான் என்பவை அவருடைய பட்டப்பேராக எக்காலத்தும் வழங்கிவந்திருக்கிறதென்பதை மறுக்க யாரால்தான் முடியும்.—

மேலும், நாடார் நாடாக்க ளென்பதை நாட்டையாண்டவரென்று சொன்னல் அதிவியாப்தி என்னுங்குற்றம் பொருந்துகின்றதாம்.

இராஜாக்கள், தேவர், கோனூர்முதலிய பலஜாதிகளுக்கும் வரம்பின்றி யோடுமாம் (செ. பு. பக். 14.) எங்ஙனமோ! மேற்கூறிய மூவருள் இராஜ ஜாதியாரைப்பற்றி நாம்பேசவேண்டிய அவசியமில்லை. அவர்கள் தெலுங்குபாஷைக்காரர். தமிழ்நூலுக்குச் சம்மதப்படாதவர்; தமிழ்நூல் அகராதிகளில் அவர்கள்பேர்வர அவசியமில்லை. மற்றையிருவரில் தேவர் தங்களை இராஜாக்களென்று சொன்னல் தமிழரசகுலத்தவர், அவர்களுடைய ஸ்தானம்நிகண்டு மக்கட்பேர்த்தொகுதி 68-வது சூத்திரம் அவர்களைச்சார்ந்ததென்றும், தேவர் என்னும்பதம் தெவ்வர் என்னும் பதத்தின் திரிபெனவும், தெளிவுறக்காண்பிப்பார். கோனூர் தங்கள்பேர் இராஜனென்ற அர்த்தத்தில்வழங்கினதென்று சொல்பவரானல், தமிழரசகுலத்தவர் அப்படியன்று நிகண்டுசூத்திரம் 70 உங்களைச்சேர்ந்தது; கோன் என்றவார்த்தை Go (ஙோ=ங்கோ) என்னும் சமஸ்கிருதபதத்துக்குச் சம்பந்தபட்டதெனமொழிவர். மேலும், மேற்கண்ட இரண்டுவார்த்தைகளுக்கே அரசனென்று தாற்பரியம்பண்ணிக்கொண்டாலும், அதிவியாப்தியென்னுங்குற்றம் எங்ஙனம்பொருந்தும்? புராட்டெஸ்டாண்டு குருமார்களும், வீரசைவர்களும் "ஐயர்" என்ற

பேரைத் தரித்துக்கொண்டதாலும், கம்மாளர் ஆசாரிய ரென்றபட்டத்தை எடுத்துக்கொண்டதாலும், பிராமணர் மேற்கண்டபட்டங்களைக்கொண்டு தங்களை முதல் ஜாதியென்று சொல்வதுகுற்றமா? பாதிரிமார் தம்மை ஐயரென்றூர்; வீரசைவர் தம்மை ஐயரென்றூர்; கம்மாளர் தம்மை ஆசாரியென்றூர்; பிராமணர் தம்மை ஆசாரியர் என்றும், ஐயரென்றுஞ்சொன்னூர். அப்போ, இவர்களில் இப்பட்டம் யாருக்குமுந்தியுள்ள தென்றும், மற்றவர்களுக்கிப்பட்டப்பெயர்கள் எப்படி வந்தனவென்றும் நூலாதாரமாய் அறிவது யோக்கியர்களுடைய கடமையேயன்றி, இப்பட்டங்கள் முற்கண்டவர்களுக்கு வருவதால் பிராமணர் முதல்ஜாதியென்று சொல்வது தப்பென்றும், அதிவியாப்தியென்னுங்குற்றம் நேர்ந்த தென்றுங்கூறினூல் உலகத்தார்நகைப்பாரல்லவா? அது போலவே, சான்றூேர் என்றும், நாடாரென்றும் பேர் பெற்றுவிளங்கிநிற்கும் ஓர்குலம் உலகத்திலிருக்க, முற்காலத்துத்தமிழரசர்கள் ஷ பேரால் அழைக்கப்பட்டன ரென்றூல், இச்சான்றூேரே ஷ அரசகுலமென்பதற்கு ஆட்சேபனையென்ன? மேலும், தமிழ்ஜாதியார் தம்மிஷ்டப்படி பேர்புனைந்துகொண்டார்கள் என்று இவர்சொல்வது பிசகு. ஏனென்றூல், அதுமுன்னூலுக்கு விபரம் பார். 12 - வது நிகண்டு, சூத்திரம் - 53. வீரசைவர் ஐயரென்றபேர் எடுத்துக்கொள்ளுவதும், கம்மாளர் ஆசாரி என்றபேர் புனைந்துகொள்ளுவதும், பாண்டிய இராஜாக்கள் நாளையில் நடக்குமா?

கம்மாளர் பிராமணருக்குரிய ஆசாரியப்பட்டத்தால் உபசாரமாயழைக்கப்படுவதுபோலச் சாணுரும்நாடான், நாடாரென்று சொல்லப்படுகிறூர்களென்கிறூர். (செ-பு பக்-14.). பிராமணர்பேரைக் கம்மாளர் எடுத்துக்கொண்டார்கள். சாணுருடைய நாடார், நாடான் என்னும்பட்டங்கள் வேறு யாருக்குண்டு. வேறுயாரிடத்திலிருந்து இவர்கள் பெற்றுக்கொண்டார்கள். செந்திநாதையருக்

கிப்பேருண்டோ? இதுவே யிவர் நாடான், நாடார் என் பவைகள் சத்திரியப்பட்டப்பேரொன்று ஒப்புக்கொண்ட தாயிற்று. வேறு தமிழரசஜாதியைச் செந்திநாதையர் காட்டட்டும். வேறுதமிழரச ஜாதியில்லாதிருக்க, சாணூர் சத்திரிய அரசருக்குரிய ஜாதிப்பேரையும், பட்டப்பே ரையுந்தரித்திருப்பவரானுல், அவர் ஷை அரசகுலத்தவ ரொன்று ஒப்புக்கொள்ள சமுசயமும்வேண்டுமோ? சாணூர் தமக்கு உபசாரமாக நூதனபதங்கள் சிருஷ்டிக்குங்கால மிதன்று. உள்ளதையும் இழந்துவிட நேரிடுகின்றதே. உபசாரமாயழைக்கப் படுவார்களென்கிருர். இவர்முந் திச்சொல்லியது ஷைவார்த்தைகளின்தாற்பரியமானுல், அது என்னமாய் இப்போது உபசாரமாயிற்று? ஆக இவ ருக்கே தாம்முந்திச்செய்தது மோடனத்தாற்பரியமென விளங்கினதென்பதுதெளிவாயிருக்கிறது.

5. இனிமேல்சாணூர் சத்திரியரொன்பதற்குச் சற்குண நாடாரவர்கள் சாதித்தநியாயங்களை முன்னரோ சாதிக் கப்போகிருராம். எங்ஙனமெனில், நாடாரவர்கள் தம் முடைய புஸ்தகத்தில் அங்கிலேயபாஷையி லெழுதிய நியாயங்களைத் தமிழில் மொழிபெயர்த்து விடுவதாலோ? அவைகளை இங்ஙனம் பெயர்த்தெழுதுகிருேம்.

"திவாகரம் நிகண்டு என்னும் இரண்டிலும் மக்கட் பெயர்த்தொகுதியிலே, சூத்திரங்களும் பாட்டுகளும் நாலுஜாதிகளின் வரிசைப்படி பாடப்பட்டன என்றும்; சூத்திரர் என்ற பெயர்வருகிற திவாகரம் 33 - ம் சூத் திரமும், நிகண்டு அச்சுப்பிரதிகளில்விடப்பட்டு ஏட்டுப் பிரதிகளிலிருக்கிற "இந்த முக்குலத்துளார்க்கே ஏவல் பூண்டொழுகின்ற வேந்திரவாளர் தாமேவிதித்த சூத்தி ரர் என்ருகும்" என்றபாட்டும், சூத்திரரைக்குறித்தன எனவும்; திவாகரம்32-ம் சூத்திரமும், நிகண்டு 25,26-ம் பாட்டுகளும், அவைகளில் வைசியர் பெயர்வருவதால், வைசியரைக் குறித்தன எனவும்; திவாகரத்தில் 32-ம்

சூத்திரத்திற்கும், நிகண்டில் 25-ம்பாட்டிற்கும் முன்னே பார்த்தால், திவாகரம் 8-ம் சூத்திரமும், நிகண்டு 5 - ம் 6 - ம் பாட்டுகளும், அவைகளில் பார்ப்பாரென்ற பெயர் வருவதினால், பிராமணரைக் குறித்தன எனவும்; எனவே சத்திரியர்பேர் பிராமணரைக் குறித்த செய்யுள்களுக்கும் வைசியரைக் குறித்தசெய்யுள்களுக்கும் இடையிலேயேவரவேண்டும் எனவும்; திவாகரம் 11 - ம் சூத்திரமும் நிகண்டு 7 -ம் பாட்டும் சத்திரியரைக் குறித்தன எனவும்; தமிழருக்குளிக் காலத்திற் சத்திரியரென்று பேர்தரித்த ஜாதி இல்லாமையினால், அந்தச்சத்திரியரைக் கருதிய சூத்திரங்களும் பாட்டுகளும் இவைகள் தாமென்று சற்று வருத்தத்துடன் நிச்சயிக்க வேண்டும் எனவும்; ஆதலின், தொல்காப்பியத்தில் "அந்தணர்திறத்தும் சான்றோர்தே எத்தும்" என்றது பிராமணரிடத்தும் சான்றோரிடத்தும் எனப்பொருள்படுகின்றமையாலும், சிந்தாமணியில் நச்சினார்க்கினியர் "பார்ப்பார் சான்றோருள்ளிட்டாருங்கூடிச்சீவகன் என்று இராஜகுழந்தைக்குப் பேரிட்டார்" எனவுரைசெய்தமையாலும், தஞ்சைவாணன்கோவையில் "அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டுவரைந்து" (அதாவது அவர்களைவைத்து இராஜாவின் கலியாணம் நடந்தது) என்று சொல்லப்பட்டமை யாலும், பார்ப்பார் (பார்க்கிறவர்) என்றபெயர் பிராமணருக்கு எப்படி வழங்குகின்றதோ அதுபோலச்சான்றோர் (கல்விமான்கள்) என்பதும், சத்திரியருக்கே வழங்கப்படுகின்றது எனவும்; எல்லோரும் பார்ப்பாராய் (பார்க்கிறவராய்) இருந்தாலும், பார்ப்பாரென்றது பிராமணருக்கே சொல்வதுபோல, எல்லோரும் படித்தோரென்று பொருள்படுகின்ற சான்றோர் என்பதும் சத்திரியருக்கே சொல்வதெனவும்; பிராமணருக்கு ஞானக்கண் எப்படி ஆவசியகமோ அப்படியே சத்திரியருக்குக் கல்வி ஆவசியகம் எனவும்; இதுபற்றியே திருக்குறளில் கல்வி அரசியலுள் (அதாவது இராஜஇலட்சணங்கள் கூறப்படும் அத்தியாயத்தினுள்) வைக்கப்பட்ட தெனவும்; அப்படியே பழ

மொழியிலும், நாலடியாரிலும் கல்வி அரசியலுள் வைக்க ப்பட்டதெனவும்; மூன்று மூன்றுன் என்பனஎப்படி மூ ணு மூணுன் என்றும்; தோன்று தோன்ருர் என்பன தோ ணு தோணுனென்றும் வழங்குவனபோலச் சான்ருனென் பது சாணுனெனவழங்குகின்றது எனவும்; சான்ருர், சா ன்றவர், சான்ரோர் என்னுஞ் சொற்கள் "மிகு" என ப்பொருள் படுகின்ற "சாலு" என்னும் பகுதியில் நின்று பிறந்தனஎனவும்; பிறக்கவே, சான்றவர், சான் ரோர், சான்ருனென்பன ஒருபொருள்கொண்ட மொ ழிகளாமெனவும்; மேற்கண்ட நியாயங்களினுல் திவாகர த்திலே அறிவுடையோரை உணர்த்திவரும் சான்ரோர் என்னும்பேரும், நிகண்டிலே அறிஞரை உணர்த்திவ ரும் சான்றவர் என்றபேரும் சத்திரியரையே குறித்தன எனவும்; அதனுல் சாணுரே சத்திரியரெனவும் சொல்லு கிருர்." (செ-பு-பக்-14-16.). இப்படி நாடாரவர்கள்சொ ல்லுகிறதாக இவர் மொழிபெயர்த்திருக்கின்ற அவ்வளவ ற்றிற்கும் நியாயம் சொல்லி மறுத்துவிட்டாலன்ருே இ வர்வல்லவரென்கலாம். அப்படிச் செய்யச் சற்றென் கிலும் ஏலாமல், நிகண்டுதிவாகரத்திலும், நாலடியாரி லும், திருக்குறளிலும், தொல்காப்பியம் சீவகசிந்தாமணி யிலும், தஞ்சைவாணன்கோவை, கம்பராமாயணமுத லிய நூல்களிலுமிருந்து எடுத்துக்கூறி சான்ரோர் சத்தி ரியரென எற்பட்டிருக்கிறதென்று நாடாரவர்கள் எழுதி யதைக் கண்டிக்கவும் முயலாமல், விருதாவாகத் திரும்ப வும் "நிகண்டு திவாகரங்களிலும்" ராட்லர் உவின் ஸ்லோ முதலிய அகராதிகளிலும், அகத்தியம் தொல் காப்பியம் முதலிய இலக்கணங்களிலும், மகாபாரதம் திருவள்ளுவர் முதலிய நூல்களிலு மிருந்து சான்ருர் சத்திரியரை உணர்த்திவரக் காட்டுவாரா வென்றும் அப்படிக்காட்டினுல்தான் தொல்காப்பியத்திலும், சிந்தா மணியிலும், கம்பராமாயணத்திலும் தமக்குச்சார்வாக எடுத்துக்கொண்ட சான்ருர் என்றதைச் சத்திரியரென அங்கிகாரஞ்செய்வேம் என்றுசொல்வது என்னபுத்தி?

(செ. பு. பக். 17.). நிகண்டு திவாகரங்களிலிருந்து நாடாரவர்கள் எடுத்துக்காட்டினார்கள்; தொல்காப்பியத்திலிருந்தும் எடுத்துக்காட்டினார்கள்; பஞ்சகாவியத்துனுள்ளொன்றாகிய சிந்தாமணியிலிருந்தும் எடுத்துக்காட்டினார்கள்; தஞ்சைவாணன்கோவையிலிருந்தும் எடுத்துக்காட்டினார்கள்; கம்பராமாயணத்திலிருந்து மெடுத்துக்காட்டினார்கள். இன்னும் வேணுமானால் வேறு உதாரணமுந் தருவோமென்றுசொன்னார்கள். இங்ஙனமிருக்க, இவைகளொவ்வொன்றையும் முறையே எடுத்துக்கண்டிக்கவேண்டிக் கடமைப்பட்ட இவர் அப்படிச்செய்யாது, அதிலிருந்து காட்டவில்லை, இதிலிருந்து காட்டவில்லை, ஆகையால் முன்காட்டியது தப்பென்றால் யோக்கியர்கள் இவர்கல்வித்திறமை யிவ்வளவென்று அறிந்துகொள்ளாரோ? நாடாரவர்கள்தாம் எழுதியசங்கதியை உதகரிக்கும்படியாக, நீதிநூலிலிருந்தோர் உதாரணமும், தொல்காப்பியம் என்னும் இலக்கணத்திலிருந்தோர் உதாரணமும், தஞ்சைவாணன்கோவையி லிருந்தோர் உதாரணமும், திவாகரம் நிகண்டிலிருந்தும், பெருங்காவியங்களாகிய சிந்தாமணி, இராமாயணம் இவைகளிலிருந்தும் உதாரணமெடுத்துக் கூறினார்களே தவிர, தமிழ்நூல்களொவ்வொன்றிலுமிருந்து எடுத்துக்கூறுவது அவசியமுமன்று. அப்படிச்செய்ய அறிவாளிகள் சொல்லவுமாட்டார்கள். அப்படியிருக்க, அவர் எடுப்பு அடிபட்டு ஒழிந்துபோயிற்றென்பது எங்ஙனம். யார் எடுப்பு அடிபட்டு ஒழிந்துபோயிற்றென்பது இந்நூல்வாசிக்கும் எல்லாருக்கும் விழங்காமற் போகாது.

மேலும், உவின்ஸ்லோ ராட்லர்முதலிய அகராதிகளில் சான்றார் என்பதும், சான்றோர், சாணார் என்பதும், ஜாதிப்பேராக வழங்கியிருந்தும் சத்திரியரென்று காட்டவில்லை யென்கிறார். (செ. பு. பக். 17.). அவைகள் பண்டிதசிரோமணிகளுடைய உதவியைக்கொண்டு எழு

தப்பட்டவைகள்தான். ஆனல் அதனலென்ன? சான்ருர், சான்றோர் என்பவைகள் சாணருடைய ஜாதிப்பேரென்று ஒப்புக்கொண்ட மேற்படி ஐரோப்பிய ஆசிரியர்கள், உடனே நிகண்டு திவாகரங்களைப்பார்த்து இப்பேர்களைச்சத்திரியஜாதிப் பேராகக்குறியாது தவறிவிட்டனவென்ருல், அப்பண்டித சிரோமணிகளேமாற்றுக்குள் அகப்பட்டு உண்மையைக்காண யேதுவில்லாது போயிற்றென்பது தெளிவாயிருக்கிறது. அப்படிக்கில்லாவிட்டால் அப்பண்டித சிரோமணிகள் வெள்ளாளரைப் பூவைசியராக்க அவ்வகராதிகளில் முயன்றது ஏதுக்காக? அதற்கு நூலாதாரமுண்டா? அப்பண்டித சிரோமணிகள் சூத்திரராகையின், தம்ஜாதியை வைசியராக்க முயன்ருரேயன்றி, மற்றைஜாதியாரின் பேரைமாத்திரம் சொல்லினர். இதுவன்றியும், அவர்கள்சொன்னலும் சொல்லாவிட்டாலும், அவர்கள்முன்னூலுக்கு எவ்வளவு ஒத்துவருவாரோ, அவ்வளவுதூரந்தான் நாம் அவரை ஒப்புவோம்.

பறையர், துரும்பர், பள்ளர், நளவர் இவர்கள்பேர் நிகண்டிலே காணப்படவில்லையென்கிருர்: (செ.பு.பக்.16.). இதனல் என்னநியாயமுண்டுபடும். சாணர் பேரும் அதுபற்றி நிகண்டு திவாகரங்களில் விடப்பட்டிருக்கிறதென்கிருரோ? சாணர் என்பது சான்ருர் என்றவார்த்தையின் ஓர்வடிவமென, இவர்குளறிய புஸ்தகம் 23 - ம்பக்கத்தில் ஒப்பியிருக்கிருர். உலகவழக்கில் சான்ருர் என்று ஒருவார்த்தைவருமானல் "சான்றோர்" "சான்றவர்" என்பவை அவைகளுக்கு நூல்வழக்கில் வருமென்பது அற்ப இலக்கணப்பயிற்சி யுடையாருக்குந்தெரியும். (பகுதி "சாலு" என்ருலுஞ்சரி, "சாறு" என்ருலுஞ்சரி); cf (ஒத்துப்பார்) ஆன்றோர் and ஆன்றவர்; பெற்றோர் and பெற்றவர்.

"ணளரய ஈற்றல் ஆ ஓ ஆகலும் செய்யுளுள்
உரித்தே" நன்னூல் பொதுவியல் உ-ம் சூத்திரம்.

ஆகையால், திவாகரத்தில் சான்றோரென்றும், நிகண்டில் சான்றவரென்றும் வரும்ஜாதிப்பேரே "சான்றார்" குலத்தைக் குறிக்கின்றதென்பது, மூளைதெளிவாயிருக்கப்பெற்ற யாவருக்கும் விளங்கவேண்டியது. அறிவுடையோர் பேரொனவருவதுபற்றி ஜாதிப்பேர் அன்றென்று கூறுகிறாரோ? நாடாரவர்கள் எழுதியபுஸ்தகத்தைக்கண்ணூன்றித் தெளிவுரவாசித்துப் பார்ப்பார் (பார்க்கிறவர்) என்பது பிராமணரைக்குறிக்கும் வண்ணம், அறிவுடையோரொனப் பொருள்கொள்ளும் சான்றோர் தமிழரசகுலத்தவரைக்குறித்து நிற்கின்றதெனவும், அது ஒரு ஜாதிப்பேரெனவும் கண்டுணரக்கடவர். மற்றும் ஈன ஜாதியாருக்கு இப்பேர்செல்லாது.

"சான்றாண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது-வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு."

"நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
குலநலத்தா ளுகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்."

இந்த இரண்டு பாட்டுகளையும் தெளிவாய் வாசித்து, சான்றோர் என்பது குலத்துக் கடுத்ததென்றறியக்கடவர். பின்பு இரண்டாம் அர்த்தமாக அறிவுடையோருக்குப்பேராயிற்று.

திவாகரத்தில் பறையர் பெயரில்லை யென்றார். "உண்மை யுரைத்த" பிஷப்புதாமெழுதிய புஸ்தகத்தில் "Between the Vellalars and their Pariar Slaves" என்றெழுதியிருப்பதை, இவரென்ன மதியால் தம் புஸ்தகம் 36-ம் பக்கத்தில், சூத்திரருக்கும் புலையருக்கும் இடையிலுள்ள ஜாதியாரென்று மொழிபெயர்த்தார். அங்ஙனமாகச்சே பறையருக்குப் புலையரென்றோர் பெயரு

ண்டென்று இவர் ஒப்புக்கொண்டதாச்சுது. இப்புலையர் எங்ஙனமென்று திவாகரத்தைத் திறந்துபார்த்தால், அங்ஙனம் அவர் பெயர் தீட்டியிருப்பதைப் பார்க்கலாம். பள்ளர் பெயரில்லையென்றார். "மள்ளர்," "உழவர்' என்பன அவருக்கு மறுபேரென்றும், அப்பேர் பொருந்தி அவர்களை ஸ்தாபித்திருக்கிற இடமிதுவென்றும் லேசாய்க் கண்டு கொள்ளலாம். இப்படியே மற்றும் ஜாதிகளுக்கும் பார்த்துக்கொள்க. தமிழ் ஜாதியார் யாவர் பெயரும் தமிழரசர்கள் ஒப்புக்கொண்டபடி, ஷை திவாகரம் நிகண்டுகளில் நிறுத்தியிருக்கிறது. இதை மறுக்க செந்திநாதையர் யாவர்? அற்பத்தமிழுணர்ச்சிதமதென்பது எல்லாருக்கு முணர்த்த இதுவுமா வேண்டியது?

மேலும், சற்குணநாடாரவர்கள் சான்றார், சான்றோர் என்னும்வார்த்தைகளுக்கு "அறிவுடையோர்" என்பது தாற்பரியமில்லையென்று சொல்லவில்லை. அறிவுடையோரென்று அர்த்தங்கொள்ளும் அவ்வார்த்தை, சத்திரியருக்குப்பெயராகத் தமிழில் வழங்கிவருகிறதென்று மாத்திரஞ்சொல்லி, நூலாதாரம் எடுத்துக்காட்டினார்களென்பது அவர்கள் எழுதிய நூலைவாசிக்கு மெல்லாருக்குந் தெளிவாயிருக்கிறது. ஆதலின், "அந்தணர்" என்றவார்த்தையை அறவோருக்கும், கடவுளுக்கும், பிராமணருக்கும் எப்படி இடத்துக்கேற்க அர்த்தம் பண்ணவேண்டுமோ, அதுபோல, சான்றார் என்றதையும் அறிவுடையோர் என்றும், அரசர் என்றுமிடத்துக் கேற்கத் தாற்பரியம் பண்ணவேண்டுமே யல்லது, அறவோரைக் குறிப்பதால் அந்தணரென்றவார்த்தை பிராமணரைக் குறிக்கக் கூடாதென்பது எப்படி மதியீனமோ, அப்படியே சான்றோர் என்பதும் அறிவுடையோரைக் குறிப்பதால் அரசருக்குப் பேராகமாட்டா தென்பதும் மதியீனம்.

6. இனிச்சான்றார்" என்றபதம் சாணாருக்கு வழங்கிவருவதால் ஷைபதத்துக்கு மூலங்கண்டு பிடிக்கப்புகுந்து,

தம்முடைய அதிவிவேகத்தை வெளிப் படுத்துகிறூர். சான்றூர் என்றவார்த்தை "சாறு" என்றபகுதியிலிருந்து பிறந்து, "சான்றூர்" என்றூகி மெலித்தல் விகாரம்பெ ற்று, சான்றூர் என்றூகிற்றும். இப்படி உவின்ஸ்லோ கூறியது அனுபவத்திற்கும், சுருதிக்கும் ஒத்திருக்கின்ற தாம். (செ. பு. பக். 18.). சான்ரேூர், சான்றவர் என் னும் வார்த்தைகள் "சாலு" என்னும் பகுதியி லிருந்து பிறந்திருக்க, அதோடு ஒருபொருட்கொண்ட சான்றூர் என்னும் வார்த்தை சாறு என்பதிலிருந்து பிறந்ததெ ன்று சொன்னால், இதற்கு இலக்கண ஆதாரமென்ன? "சாறு" என்றவார்த்தையிலிருந்து "சான்றூர்" வந்தால் அதிலிருந்து சான்ரேூர், சான்றவர் என்னும் வார்த்தை களும்வரவேண்டுமல்லவா? cf (ஒத்துப்பார்) ஆன்ரேூர் and ஆன்றவர். அப்படியாகில், திவாகரம் நிகண்டு என் னும் நூல்களில் வரும் சான்ரேூர், சான்றவர் என்னும் வார்த்தைகளும், "சாறு" என்றவார்த்தையி லிருந்துபிற க்கவில்லை யென்பதற்கு ஆதாரமென்ன? சான்ரேூர், சான்றவர் என்ற வார்த்தைகள் இரண்டு ஜாதியை வெவ் வேறூகக் குறிப்பனவாக, ஷ அகராதிகளில் ஏன்சொல் லப்படவில்லை? "சாறு" என்றவார்த்தையும் "சாலு" என் றவார்த்தையி லிருந்து பிறந்ததென்பது, செந்நாதை யர் கேட்டிலரோ? மேலும், ஒருவார்த்தை எந்தமூலத்தி லிருந்து பிறந்தாலென்ன? அது என்ன அர்த்தங்கொ ண்டு நூல்களில் வழங்கப்படுகின்ற தென்பதல்லவாமுக் கியமாய்க் கவனிக்கவேண்டியது. வெள்ளாளர் என்னும் பதத்தை வேள்(வேள்=மண்)என்ற வார்த்தையி லிருந்து பிறப்பித்தாலென்ன? வேள்ளம் என்றவார்த்தையிலிரு ந்துபிறப்பித்தாலென்ன? வெள்ளாளர் ஒருவர்தானே. அப்படியே "சாறு" என்பதிலிருந்து பிறந்தாலுஞ்சரி "சாலு" என்பதிலிருந்து பிறந்தாலுஞ்சரி, சான்றூரோசா ன்ரேூர்சான்றவர். சான்றூர் என்பது "சாறு" என்பதி லிருந்து பிறந்ததால், அதிலுண்டான கேடு என்னவோ?

சேரன்பேர் எதிலிருந்து பிறந்தது. "சுரா" வாகிய சாறு என்பதிலிருந்தல்லவா?

"கரும்பூர்ந்த சாறுபோல் சாலவும் பின்னுதவுபவரா னதால்," சான்றோர் பேர் விசேடணம்பற்றி "சாறு" என்பதிலிருந்து பிறப்பித்தனரோ? மற்றையர் அதன் கோதுபோல்பவரோ? "சாறு" என்பதிலிருந்துவந்த சா ற்றூர் என்பது சான்றூர் என்றுகஅனுபவம் என்னவோ? இவர் இலக்கணத்தில் பெற்றிருக்கும் அறிவுவிர்த்தியை யாதென்று சொல்வேம். உவின்ஸ்லோ "சாறு" என்ற வார்த்தையிலிருந்து சான்றூர் என்னும் பதம் பிறந்தன ரென்றுல்,அவர்"சாறு" என்றவார்த்தையையும் "சாலு" என்பதிலிருந்து பிறப்பிப்பார். ஆதலின், அவர்கருத்தறி யாது நடிப்பதில் பயனென்னை?

தற்காலத்தில் சான்றோர் குலத்தவர் நூலெழுதாவிட் டால் முன்னுள்ள சான்றோர் குலத்தவர் நூலெழுதவில் லையென்ற நியாயம் எங்ஙனமுண்டாயிற்று. (செ. பு. பக் 19.). தமிழில் எக்காலத்தும் மேன்மைபெற் றோங்கிய நூல்கள் சான்றோர் குலத்தவரான தமிழரசகுலத்தவரா ல் எழுதப்படவில்லை யென்று யாவர்மறுக்கக்கூடும்? கம் பநாடன் இராமாயணம், ஏரெழுபது என்றநூல்களையும்; அதிவீரராமபாண்டியநாடன் நைடதம், கூர்மபுராணம், காசிகாண்டம், வெற்றிவேற்கை, என்ற நூல்களையும்; வீரசோழநாடன் வீரசோழியம் என்றநூலையும்; குலசே கரபாண்டிய நாடன் லிங்கபுராணம் என்ற நூலையும்; சே ரநாடனுகிய திருமங்கை ஆழ்வார் நாலாயிரப்பிரபந்தம் என்ற நூலையும்; வழுதி நாடராகிய வரதுங்க பாண்டிய நாடன் பிரமோத்திரகாண்டம் என்ற நூலையும்; பரிமே லழகர் குறளுக்கு உரையையும்; இன்னும் இவர்போல் அரசகுலத்தவர் அனேகர் எழுதி யிருப்பதையும் இவர் அறிந்திருப்பதில்லையா? இக்காலத்துப் பிராமணர் எப் படித் தம்நூலாராய்ச்சியை விட்டு தம் உத்தியோகத் தானங்களை நாடுபவரென்றுல், தமிழரசர் குலத்தவர் தற்

காலத்தில் தம்பிழைப்புக்கடுத்தவைகளைத் தேடநேரிட்டு நூல்களெழுதாவிட்டால், அவர்கள் முன்னோர்களெழுதிய நூல்களில்லையென்று போமா? கள்ளிறக்கா திருக்க பிரகடனஞ் செய்யுமுந்தி, செந்திநாதையரவர்கள் கம்பருடைய "உண்டாட்டுப் படலத்தையும்," திருவிளையாடற் புராணம் "தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்தையும்" கண்டனஞ் செய்வாராக. (செ. பு. பக். 19.). இந்நூல்களில் கண்டிருக்கும் மதுச்செய்தவர்யாரோ? செந்திநாதையர் தாம் செய்ததை சான்றோர் குலத்தவர் அபகரித்துக் கொண்டனரென்று ரூபகாரப் படுத்திவிட்டால், அக்குலத்தவர் அதைநிறுத்திவிட ஏற்பாடுசெய்வாம்.

7. நாவலர் கூறியதில் கள்செய்வோரைப்பற்றி ஒன்றுஞ்சொல்லாததால், சாணுர் சுத்தரென்று சொல்லி நாடாரவர்கள் பதுங்கப்பார்க்கிறார்களாம். (செ. பு. பக். 20.). செந்திநாதையரோ அவர்களைப் பாவிக ளென்று தீர்த்துவிட்டாராம்: எங்ஙனமோ? மேலே 6-வது பிரிவின் பிற்பாகத்திற் காட்டிய உண்டாட்டுப் படலம், திருவிளையாடற் புராணமுதலிய நூல்களிற் காட்டி யிருக்கிறபடி, மது இரண்டுவகைப்படும். இவற்றுள் சான்றோர் குலத்தவர் உற்பத்திசெய்வதற்கு "புதுமது" என்று திருவிளையாடற் புராணத்தில் வருகிறது. இராமாயாணத்தில் இதை ஸ்ரீராமருடைய பெந்துக்கள் உண்டுகளித்ததாகச் சொல்லி யிருக்கிறது. இதுபிராமணரும், அரசகுலத்தவருஞ் சாப்பிட்டுவந்தது. ஆனலிது புளித்துப் பழமையானதற்கு மேல், உழவர்முதலிய ஈனஜாதிகள் சாப்பிடவேண்டியதும், அவர்கள் வசத்தி லிருக்கவேண்டியதுமான பழநறையாகும். இதைத்தான் உண்டாட்டுப்படலமெழுதிய கம்பர் "பழையர் தமனையன பழநறைநுகரும் உழவர் தமனையன" என்றும் எழுதியிருக்கிறார். திருவிளையாடற் புராணத்தில் உழவரிதைச் சாப்பிடுவதாகவும், மேற்கூறிய "புதுமது"வைமேலோர் சாப்பிடுவதாகவும் கூறி

யிருக்கிறது. ஆகவே, சான்ருேர் மதுஉற்பத்தி செய்வது உயர்ந்தோர்பொருட்டே. அதுகெட்டுப்போனதின் பிறகுதான் ஈனஜாதியாருடையதாகிப் பாவத்தைவிளைவிக்கத்தக்கது, ஆகையால்தான் நாவலரவர்கள் மதுஉற்பத்தி செய்தவரைக் கூறுதுவிட்டனர். மேலும் இதுவிஷயமாகச் செந்திநாதையரெடுத்துக் கூறிய உதாரணமும் எவ்விதத்திலும்பொருந்தாததாயிருக்கிறது. (செ.பு.பக். 21.). எங்ஙனமெனில், மேலே நாம் காட்டியபடி, மதுசெய்வது உயர்ந்தோர்பொருட்டே. அதுகெட்டுப்போனதின் பின் ஈனஜாதியாளுெருவன் அதைக்கொண்டு தன்னைக் கெடுத்துக்கொண்டால், கொலைக்குத் துணைபுரிந்தவர்களுடைய குற்றம் எங்ஙனமாகும்? இவ்வளவு கண்டறியச் செந்திநாதையருக்குப் புத்தியில்லையா? உதாரணங்கொடுப்போம். பகைவரைச் சிட்சிக்கவும், சுயசமரட்சணைக்காகவும், அங்கிலேயரும், கம்மாளரும், வாள்துபாக்கிமுதலியவைகளைச் செய்து கொடுப்பவரென்ருல், இருவர் ஒருவருக்கொருவர் சச்சரவுப்பட்டு, வாதுகூறி, ஒருவரையொருவர் அப்பட்டயத்தால் வெட்டியாவது, துபாக்கியால் சுட்டுவீழ்த்தியாவது கொன்ருல், மேற்கண்ட ஆயுதங்களைச் செய்தவரை, செந்திநாதையர் நீதியதிபராயிருந்து, வாரண்டால் வருவித்துத் தண்டனை புரிந்தால், ஹைகோர்ட்டார் அத்தீர்ப்பை உறுதிசெய்து போடுவார்போலும்!! வெகுயுக்தி!! இதல்லவா ஈரமட்சுவரில் கன்னம்வைத்தகள்ளன் சுவர்விழுந்துசாக, அவன் சாவுக்காக ஏதுமறியாத கோமுட்டியைக் கழுவேற்றின மூடசிகாமணியென்னும் இராசாவின்கதையாகும். செந்திநாதையர் உடனே வெள்ளாளர் நெற்பயிரிடாதபடி ஏற்பாடுசெய்வாராக. அரிசியிலிருந்து ஓர்விதச்சாராயம் வடிக்கப்படுகிறதல்லவா? திராட்சத்தோட்டங்கள் வைக்கவிடாதபடி சற்காருக்கு மனுப்பண்ணிக்கொள்வாராக. அதிலிருந்து மயக்கவஸ்து சாராயங்கள் செய்கிருர்களே. இதுகளையெல்லாம் யோசியாது, ஆண்டும் ஈண்டும் யாண்டும் தப்பிப்பதுங்க இடங்கொடோம் என்பது என்னமதியாலோ?

8. இனி 22-ம், 23-ம் பக்கங்களில், தம்முடைய மௌட்டிகத்தை வெளிப்படுத்தி, சான்றோர் ஓர்காலத்தும் வேடரென்னப்படாதிருந்தும், வேடர் நாங்களென்று ஒப்புக்கொள்ளுகிற ஜாதியாரும் வேறிருக்க, இராமருக்குதவியாகவந்த அனுமப்படைகளென்று கூறவேண்டுமென்ற அவாவுள்ளவர்போல் பேசுகிறார். Professor Monier Williams (உவில்லியம்ஸ்) குரங்குகளென்று இராமாயணத்தில் சொல்லப்படுவது காட்டுச்சனங்களென்று சொன்னாரேதவிர, வேறோர்ஜாதிப்பேரைக்குறிக்கவில்லை. அப்படியிருக்க, இவர் சான்றோர் குலத்தவரைக்குறிப்பிட்ட தென்னமதியாலோ? உவில்லியம்ஸ் சொல்வதை இங்ஙனம் பேர்த்தெழுதுவோம். "The Great Dravidian race of the South of India represents the most powerful of these early immigrants, and must not be confounded with the more uncivilized aboriginal tribes inhabiting the hills and the jungles of India, and symbolised in poetry by monkeys." இங்ஙனம் குரங்குகளென்றது காட்டுஜனங்களை யென்றெழுதியிருக்க, செந்திநாதையர் சான்றோர் குலத்தவரைக் குறிப்பிட்ட புத்திவிசாலத்தை என்னசொல்ல! சான்றோர் குரங்குகளாயின் செந்திநாதையர் அப்படியாகாமல் தப்பித்துக்கொள்ள அவருக்கு எங்ஙனம் அந்நியாயம் விட்டுவிடும்? அவரும் அதிற்கண்ட திராவிடஜாதிதானே. "தென் இந்தியாவின் திராவிடஜாதியார்" என்று உவில்லியம்ஸ் இங்ஙனம் சொல்லியிருப்பதை அவர் கவனிக்கவில்லைபோலும்.

மேலும் "உண்மையுரைத்த" பிஷப்பு சான்றோர்குலத்தவரை இராமருக்கு எதிரிகளென்றார். இவர் அவருடைய இஷ்டரென்கிறார். (செ. பு. பக். 23.). இப்படி இவர் வாயில்வந்தபடி கூறுவது யோக்கியதையன்று. மேலும், வருணமரபின்படி வேடரையடுத்து சான்றோரெனப்படும் சாணார்வருகின்றமையால் சாணார் வேடராயினராம். (செ. பு. பக். 23.). இவருடைய நியாயத்தைப்

பார்த்தால், இவரைச் சிருஷ்டித்த சிவபிரானுக்கும் இப்படிப்பட்ட விசேஷ சென்மத்தை உற்பத்திசெய்தோமென்று சந்தோஷம் உண்டாகும்போலும். 39-ம் பக்கத்தில் பிராமணர் சூத்திரரெனப்பிராமணருக்கடுக்கச்சூத்திரரை நிறுத்தியபடியால், செந்திநாதையர் தமது நியாயப்படி சூத்திரராய்விட்டாரோ? 30-ம் பக்கத்தில் நாயன்மார்வரிசையில் அடுத்தடுத்துவரும் பேர்கள் அதில் அடுத்தடுத்துவரும் பேர்களைக் குறிக்குமென, இவர்கூறிய நியாயப்படி நியாயஞ்சொல்ல முயன்றால், செந்திநாதையர் புலையராவரோ. ஆனால் அதை ஒப்புபவர்யாவர்? என்றாலும் புன்மொழிகூற நாம்புறப்படாததால் அங்ஙனம் எழுதாதுவிடுகிறோம்.

9. இனி 24-ம், 25-ம் பக்கங்களில், நாடாரவர்களுடைய சமஸ்கிருத உணர்ச்சியைப்பற்றிச் சொல்லப்புகுந்தார். இவர் தமிழறிவின் நுட்பத்தையும், அனுபலத்தையும் இதுவரையும் இவர்கூறிய புன்மொழிகளைக்கேட்ட எல்லாருக்கும் விளங்காமற்போகாது. இனிமேல் சமஸ்கிருதத்தையும் பற்றிச் சொல்வானேன். சற்றுகவனமாய் விசாரிப்போம்.

24-ம் பக்கம் 9-வதுவரியில், "நிகண்டுமெறையவர்பேர் முதல் சூத்திரர்பேரிறுதியாக அவ்வவருக்குரிய தொழிலோடுங்காணப்படு" மென்கிறார். ஆகவே நிகண்டு திவாகரங்களினால் தமிழருள் நாலுவருணங்க ளுண்டெனவும் அவர்களில் முதலாவது வகுப்பார் மறையவரொன்றும், இரண்டாவது குலத்தவர் தமிழரசச்சத்திரிய குலத்தவரொன்றும், மூன்றாவது குலத்தவர் வைசியரொன்றும், நாலாவது குலத்தவர் சூத்திரரொன்றும் ஒப்புக்கொள்ளுகிறார். இங்ஙனமிருக்க, பிஷப் தாமெழுதிய Dravidian Grammar (திராவிட இலக்கணம்) என்றநூலில் தமிழருக்குள் நாலுஜாதி யேற்பாடுக ளிருந்ததே யில்லை என்கிறார். இவரைச் செந்திநாதையர் "உண்மையுரைத்தார்" என்கிறார். இதுஎன்னபுத்தி! பின்னும் தமிழரசகுலத்தவர்

சூத்திரரென மேற்கண்ட பிஷப்பவர்கள் அதில்சொல்ல செந்திநாதையர் அவரை "உண்மையுரைத்தார்" என்று சொல்வது மெப்படி? 30-ம்பக்கத்தில் இவர்தாமே அத் தமிழரச குலத்தவரைச் சத்திரியரென ஒப்புக்கொண்டு எழுதவில்லையா? இந்த இரண்டும் விவேகிகள் கவனிக்க வேண்டியது. இவர்தாமே பிஷப்பு சொல்வதை ஒப்ப வில்லை. மேலும், நிகண்டு, செந்திநாதைய ரொப்புக் கொள்ளுகிறபடி, திவாகரத்தின் முறைப்படி பாடப்ப ட்டுள்ளதேயல்லாது, அமரத்தின்படி பாடப்பட்டதெ ன்று யாவர்சொன்னார்? தமிழ் அகராதிகளுக்கும், சமஸ் கிருத அகராதிகளுக்கும் சம்பந்தமிருக்கவேண்டிய தென் னத்துக்காக? அங்ஙனமாகின், திவாகரத்தின் முறையும், அமரத்தின்முறையும் ஒப்ஸ்ற்றர் (Webster's) இங்கிலீஷ் அகராதிக்கு ஏன் ஒத்திருக்கவில்லை. அமரமும் நிகண்டும் ஒத்திருக்கவில்லையென்று காண்பிப்போம். சமஸ்கிருதத் தில்அற்ப உணர்வுடைய எவரும் கடையில்போய் டீக்கா அமரம் தமிழ் உரையை வாங்கி அதையோர்பக்கமும், நிகண்டாவது, திவாகரமாவது இன்னோர்பக்கமும் வை த்துக்கொண்டு, இரண்டையும் வாசித்துப் பார்த்தால், அதன்முறை வேறு, திவாகரத்தின்முறைவேறென எளி தில்புலப்படும். அமரம் மூன்றுகாண்டமாகப் பிரிந்துள் ளது. முதற்காண்டம் சுவர்க்கவர்க்கமுதல் வாரிவர்க்க மீறாகஉள்ள 9-வர்க்கங்களடங்கியது. இரண்டாங்காண் டம் பூவர்க்கமுதல் சூத்திரவர்க்கமீறாகவுள்ள பத்துவர்க் கங்களடங்கியது. இந்த இரண்டாங்காண்டத்தில் பிந் தின ஐந்துவர்க்கங்கள் மனுஷ்யவர்க்கம், பிரமவர்க்கம், சத்திரியவர்க்கம், வைசியவர்க்கம், சூத்திரவர்க்கமாம். மூன்றாவது காண்டத்தைப்பற்றி இப்போது நாம்பேச வேண்டிய தில்லை. இந்த இரண்டாங் காண்டத்திற் கண்ட பிந்திய ஐந்துவர்க்கங்களும் திவாகரம் நிகண்டு களில் மக்கட்பேர்த்தொகுதியிலடங்கியிருக்கிறது. இப் படியாகச்சே நிகண்டு அமரம் இவற்றின் வரிசைக்கிரம மொன்றென்று சொல்வது மதியீனமல்லவா? மேலும்,

மக்கட்பேர்த்தொகுதியில் பிராமணர் பேருக்கு முந்தி, அருந்தவர், சைவதவப்பாலோர், நாராயணசமயத்தோர், சமணர், புத்தர், சமணமுனிவர், சடைமுடியோர் பேர்கள்சொல்லியிருக்க, அமரத்தில் பிரமவர்க்கத்தில், வம்சத்தின்பேர், நாலுவர்ணங்களின்பேர், நாலுவர்ணங்களுக்கும் பொதுவானபேர், ராஜவம்சத்தில்பிறந்தவன்பேர், எந்தவம்சத்திலாகிலும் பிறந்தவன்பேர், நற்குலத்தில் பிறந்தவன்பேர் இவர்கள்பேர்சொல்லி பிராமணர்பேர் சொல்லுவதைப்பார்க்கும்போது, திவாகரம் நிகண்டாசிரியர்களின் முறைவேறு, அமரத்தின் முறைவேறென்று எளிதில் உணர்ந்துகொள்ளலாம்.

இன்னும் வைசியருக்கெல்லாம் திவாகரத்தில் ஒரோ ஓர்பாட்டிருக்க, அமரத்தில் ஒருதொகுதி முழுதும் அவர்கள்பேர், தொழில் முதலியவற்றைக் காட்டவருகிறது. மேலும், அமரத்தில் வைசியருக்கடுக்க வர்த்தகஞ்செய்கைப்பேர், கடன்பேர், வட்டிக்குப்பேர், வைஸியவிர்த்திப்பேர், ஆகஇவைகளெல்லாங் கண்டிருக்க திவாகரம் நிகண்டு இவைகளில் இத்தொழில்கள் காட்டப்படாமையைக் கவனிக்கும்போது ஜாதிமுறைமையைச் சொல்வதில்மாத்திரம் இவர்கள் சம்பந்தப்பட்டவர்களே தவிர, வேறெந்தவிஷயத்திலும் சம்பந்தப்படவில்லை யென்பது தெளிவாயிருக்கிறது. மேலும், நிகண்டுதிவாகரங்களில் கூறப்பட்டிருக்கும் இராஜாக்களுடையபேர்கள் அமரத்திற் காணப்படவேயில்லை. ஆகையால் நாடாரவர்கள் நிகண்டு திவாகரத்தைப் பற்றி சான்றுாைச் சத்திரியரென மொழிந்தது யுக்திக்கும் புத்திக்கும் சுருதிக்கும் பொருந்தியதென்றும், இவர் அமரத்தைக் கைப்பிடித்து நாடாரவர்களை எதிர்க்கத்துணிந்து இவர்வரைந்த உவமை இவரின் விவேகக்குறைவையே உணர்த்திற்றென்றும், புத்திமான்களெல்லாரும் கண்டுணர்வர். மேலும், "அறிஞர்" பேரானது மறையவரைச் சேர்ந்த துரோணுசாரியின் பேருக்கும், ஆசாரியன், மாணக்கன், சீடன் என்னும் இவர்களின்பேருக்கு முன்னும் காணப்படுகின்ற

தென்கிறுர். (செ. பு. பக். 25.). தமிழ்வாசிக்கத்தெரிந்தவர்களெல்லாரும் நிகண்டு மக்கட்பேர்த்தொகுதி 6-ம், 7-ம் பாட்டுகளை வாசித்துப்பார்த்தால், செந்திநாதையர் சொல்லுகிறபடியல்ல "அறிஞர்" என்ற சான்றவர்பேர், துரோணாச்சாரியின் பேருக்குப்பிந்தியும், ஆசாரியன் மாணாக்கன் இவர்கள் பேருக்கு முந்தியும், வருகிறதெனக்கண்டுகொள்ளுவார். சான்றவர் என்ற அறிஞர்பேர் காரணம்பற்றிச் சொல்லினும் பிராமணருக் குரியவைகளென்கிறுர்- (செ. பு. பக். 25.). இப்படியிருக்க, இவர்முன்பக்கங்களில் சான்றுர் என்பது அறிவுடையார் எல்லாருக்குஞ் செல்லுமென மொழிந்தது என்னமதி? பிராமணருக்குச் சான்றவர், சான்றோர், சான்றுர் என்னும்பேர்களுண்டென்று இன்றுதான் செந்திநாதையர் சொல்லக்கேட்டோம். சான்றுர் என்பது உவின்ஸ்லோ, ராட்லர், யாழ்ப்பாணம் அகராதிகளின்படி சாணுராகநிற்குமாதலின், (செந்திநாதையர் ஒப்புகிறபடி) செந்திநாதையருக்குச் சாணுரென்ற பேருமுண்டோ? இப்படிச் செந்திநாதையர் சான்றுரைப் பிராமணராக்க இவரைக்கேட்டுக்கொண்டவரார்? மேலுஞ் செந்திநாதையர் சொல்லுகிறபடி, திவாகரம் 11-ம் சூத்திரத்தில் சான்றோர் என்று வருவது பிராமணரைக்குறித்ததென வைத்துக்கொண்டால், கூறியது கூறல் என்னுங்குற்றமாகிறது. எப்படியெனில், 8-ம், 9-ம், 10-ம் சூத்திரங்களில் பார்ப்பாருக்கு மிக்கவர், உயர்ந்தோர், கவிஞர் எனப்பேர்வந்திருக்க, அதற்கடுத்தாப்போல் 11-ம், 12-ம் சூத்திரங்களில் அக்குலத்தவருக்குத்தானே மிக்கோரென்றும், உயர்ந்தோரென்றும், கவிஞரென்றும், பேர்வர அவசியமில்லை. ஆதலின், திவாகரம் மக்கட்பேர்த்தொகுதி 8-ம், 9-ம், 10-ம் சூத்திரங்கள் பார்ப்பாரைக் குறித்தனவென்றும், 11-ம், 12-ம் சூத்திரங்கள் அதற்கடுத்த ஜாதியைக் குறித்ததென்பதும் நன்றாய்விளங்குகிறது. இப்படியிருக்க, தாம்எழுதிய புஸ்தகம் 22-ம் பக்கத்தில், அரசனுக்குரிய சிறப்புத் தர்மமொன்று மில்லாத அறிஞர்பேரைச்

சத்திரியரென்று நாடாரவர்கள் பொய்மொழிந்தது எங்ஙனம்? அரசனுக்குரிய சிறப்புத்தர்மமொன்று மில்லையென்றார். அறிஞர் என்ற அறிவுடையார் என்னும் பதம் பாண்டியனுக்கில்லை யென்றால், தொல்காப்பியர் கூறியபடி பாண்டியன்தேயத்துக்கு "அறிவன்தேயம்" எனவும் பாண்டியன்பாஷைக்கு "அறிவன்பாஷை" எனவும், வழங்கிவருவதுமேனோ? கல்வியறிவு அரசனுக்கில்லையென்றால், வேறு எச்சாதிக்குப் பொருந்தும்? திருவள்ளுவர் குறளுக்குரையெழுதிய பரிமேலழகர், நாலடியாருக்குரையெழுதிய பதுமனார், இவர்கள் "கல்வி"யை அரசியலுள் அதாவது இராஜஇலட்சணங்கள் கூறப்படும் அத்தியாயங்களினுள் வைத்ததுமேனோ? குறளில் "கல்வி" அதாவது "அவ்வரசன் தான்கற்கவேண்டிய கல்வி" என்றும், நாலடியாரில் "கல்விகற்றல்" அதாவது "அவ்வரசன் தான்கற்கவேண்டிய நூல்களைக்கற்றல் எனவும் காட்டியிருப்பதுமேனோ? இவர்மேற்கண்ட உரையாசிரியர்களிலும் நாயனாரிலும் வித்துவானென்று உலகமொப்புமோ?நாலடியாரில் பதுமனார்செய்த அதிகாரமுறையில், அரசியலுள் வரும் "குடிப்பிறந்தார்" "மேன்மக்கள்" முதலிய அதிகாரங்களில் சான்றோர், சான்றவர், சான்றார் என்பவை அரசர்போாக வருவதுமேனோ? இப்படித் தமது அற்பத்தமிழுணர்ச்சியை வெளிப்படுத்துவரோ செந்திநாதையர்! நாடாரவர்களுடைய புஸ்தகத்தை வாசித்தால் இவ்வளவுந்தெளிவாக விளங்கியிருக்குமே! அதுவும் பொருள்படவில்லையோ? இனி இவர்தாம் மக்கட்பேர்த்தொகுதி 19-வது சூத்திரத்தில் வருவது கிரீடாதிபதியின்பேர் என்றுகவனித்தறியட்டும். அதுகுலப்பேரல்ல; எவ்வரசனுக்கும் பொருந்தும். இதைத்தான் அமரம் சத்திரியவர்க்கத்தில் 2-ம் சுலோகத்தில், பிரஜைகளை இரட்சிக்கிற இராசாக்களுக்கும், அந்தக்காரியத்தைச் செய்கிற மற்றெவ்வொருவருக்கும்பேரென்றது. 1-ம் சுலோகமோ ராஜாக்களுக்கும், அவ்வம்ஸத்தில் பிறந்தவருக்கும் பேரெனக்காட்டியிருக்கிறது. ஒத்துப்பார், திவாக

ரம் 2-வது 11-ம் சூத்திரம். ஆதலின், திவாகரம் மக்கட் பேர்த்தொகுதியில் சத்திரியதமிழரச குலத்தவருக்கு சான்றோர் எனப்பேர்வந்திருப்பதால், நாளதில் சான்றார் எனப்பேர் புனைந்திருப்பவரோ அக்குலத்தவர் என்பதும், ஷை தொகுதி 21-ம், 22-ம், 23-ம் சூத்திரங்களில் சேர, சோழ, பாண்டியராஜாக்களுக்கு "நாட்டன்" என்றபேர்வருவதால், எக்குலத்தவர் நாளதில் "நாடான்" எனப்பேர் புனைந்து நிற்கிறாரோ அவரே மேற்கண்ட அரசகுலத்தவரொன்பதும் கரதலாமலகம்போல் தெளிவாயிருக்கிறது. செந்திநாதையர் சொல்லுகிறபடி, 11-ம் சூத்திரம் பிராமணரைச்சார்ந்ததென்றால், பிராமணரில் எக்குலத்தவராவது வாய்கூசாமல் நாம்சான்றார், நாடாரொன்று சொல்லட்டும். அப்படிச் சொன்னாலல்லவோ செந்திநாதையருடைய அனுபவம் சரியாகும். பாதிரியார் குருட்டுத்தமிழுணர்வினால் பொய்முடைகிறாரொன்று நாடாரவர்கள் சொன்னது அபத்தமென்று சொல்லப்புகுந்த இவர், முன்னேதானே நாம்காட்டியபடி அப்பிஷப்பு சொல்வதை ஒப்பாமல் வேறு அர்த்தங்கொள்ளுகிறார். பிஷப்புக்கு இது ஸ்துத்தியமாகும்போலும். இதைவிட்டு சான்றோர் குலத்தவர் தமிழரசகுலத்தவரான சத்திரியரொன்பது தெளிவாயிருக்கிறதென்று, நாடாரவர்களுக்கெழுதிய பிராமணரைக் குருட்டுச் சமஸ்கிருத உணர்ச்சியுடையரொனத் தூஷிப்பது வீண்தொழிலல்லவா? (செ.பு.பக்.34.).

10 "இனித்தொல்காப்பியம், சீவகசிந்தாமணி,கம்பராமாயணம், தஞ்சைவாணன்கோவை முதலியநூல்களில் சான்றோர் என்றமொழி, ஜாதிநோக்காது, கல்வி அறிவொழுக்கங்களை யுடையவரை யுணர்த்தி நின்றது; முன்னர்க்கூறிய பிராமணர் சுபகருமங்களுக்கு ஆவசிய மாக வேண்டிய பிராமணரையும் பின்னர்க்கூறிய சான்றோர் என்பது சுபகருமங்களுக்கும் பெருமை பாலிக்கும்படி வந்த பிறரையும் என அறிக" என்கிறார். (செ. பு. பக். 26, 27.). மேற்கண்ட நூல்களில் சான்றோர் என்றது ஜாதிநோக்காதென்றார். பின்னை யிவர் இதற்கடுக்கச் சற்

றுமுந்தி, "காரணம்பற்றிச் சொல்லினும், பிராமணருகுரியவைகளாம்" என்று சொல்வானேன்? இங்ஙனம் முன்கூறியதை மறந்துவிட்டனரோ? நிகண்டு 27-ம் கவியில் "இந்தமுக்குலத்தோர்" என்றுவருவதால், அதற்குமுந்தி மூன்றுகுலஞ்சொல்லியிருக்கிறதென்றும், "அறிஞரை"க்குறித்த இந்த 7-ம் கவி, பிராமணருக்கும் வைசியருக்கும் இடையில் வருவதால், பிராமணரையாவது, சத்திரியரையாவது, குறிக்கவேண்டுமென்றும் தெளிவாயிருக்கிறது. இதை உணராமல் "ஜாதிநோக்காது" என்றால் நூலாதாரமென்ன? மேலும், நாம் முன்னைசொல்லியபடி, "சான்றோர்" என்பது ஜாதிப்பேராக வழங்கிவருகிறது பலவிடங்களில் அறிவுடையோரையும் உணர்த்திநிற்கும்.

சான்றாண்மை என்றலட்சணம் "உயர்குலத்தவரை"ப் பொருந்தியதென்றும், "தம்குலநலத்தாலாகுவர் சான்றோர்" என்று மேலே நாம்காட்டியிருப்பதில், சான்றோர் என்பது உயர்ந்தஜாதிக்கு வழங்கியபேர் என்றும் பிரத்தியட்சமாயிருக்கிறது. நாலடியார், குறள் என்னும் நூல்களில், "சான்றாண்மை" "குடிப்பிறப்பு" "மேன்மக்கள்" முதலிய அதிகாரங்களில் வரும்சான்றோர் என்னும்பதம் "அறிவுடையார்" என்றர்த்தம்பண்ணுவது மதியீனமல்லவா? ஆதலின், தமிழ்நூல்களில் பார்ப்பார் சான்றார் என்றுவந்தால், சான்றார் என்னும்பதம், முன்னைநாம்காட்டியபடி, பிராமணரையாவது, சத்திரியரையாவது குறிக்கவேண்டும். பிராமணர்பேர் முந்தி பார்ப்பார் என்று சொல்லியானதினால், சான்றார் என்னும்பதம் அரசகுலத்தவரைக் குறித்ததென்பது சொந்தப்புத்தியுள்ளயாவருக்கும் விளங்காமற் போகாது. ஆகையால், நிகண்டு திவாகரங்களில் சான்றோர் சான்றவர் என்னும்பதங்கள், இராசகுலத்தவரையே குறித்ததென்பது, இலக்கியப்பிரகாரமாகவும் ருசுவாகிறது. இனிநாடாரவர்கள் எடுத்துக்கூறிய பாடல்களைத் தனித்தனியே கவனிப்போம். தொல்காப்பியத்தில், பொருளதிகாரம்,

கற்பியலில், "அந்தணர்திறத்துஞ்சான்றோர்தேஎத்தும்" எனவருவதில், செந்திநாதையர் சொல்லுகிறபடி, அந்தணர் என்றது சுபகருமங்களுக்கு வேண்டி பிராமணரையும், சான்றோர் என்றது சுபகருமங்களுக்குப் பெருமை பாவிக்கும்படி வந்தபிறரையுமோ?

சீவகசிந்தாமணியில், பார்ப்பார் சான்றோர் உள்ளிட்டோருங்கூடி இராஜகுழந்தைக்குப் பேரிட்டாரென்பதில், சான்றோர்என்பது, சீவகனுடைய இனத்தாரென, உரையாசிரியர் சொல்ல, இவர் என்னமதியால், பிறர் எனச்சொன்னார். சீவகனுடைய இனத்தார் கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்த பிறரோ? அப்படிப் பிறர்குலத்தவர் அச்சமயத்தில் அங்கிருந்தாரென யாராவது கூறினால், செந்திநாதையருடைய திருவடிதீட்சை எப்பக்கம் பெறப்படுமோ?

தஞ்சைவாணன்கோவையில் அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு இராஜாவின் கலியாணம்நடந்ததென்றால், பிராமணரையும், அரசகுலத்தவரையும் என்பது பொருளாகுமே தவிர்த்து, பிராமணரையும், கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்தோரையு மென்றர்த்தம் பண்ணி, கல்வியில்த் தேர்ந்த புலையனொருவனை யவ்விடம் செந்திநாதையர் கொண்டுபோய் நிறுத்தியிருப்பாரானால், இவருக்கெவ்வித மரியாதை செய்யப்படுமென்பது வாசிப்போருக்கு விளங்காமற்போகாது.

குலோத்துங்கன்கோவையில், சோழஇராஜன் கலியாணத்தில், "சான்றோரும் அந்தணரும் புறஞ்சூழ" என்று வருவதில், பிராமணரும், அரசகுலத்தவரும் ஒழிந்தயாவர், இராஜாவின்கலியாணத்தில் புடைசூழ்ந்துவர யோக்கியராவார்? கல்விகற்றதினால் சூத்திரனொருவன் இராஜாவின் கலியாணசபைக்குவர யோக்கியனாவானோ?

திருவள்ளுவர்குறள், 12-ம் அதிகாரம் 8-ம் பாடலில், சான்றோர் என்று வருவதுக்கு, உரையாசிரியர், 10-ம் பாடலில், அவையத்தாரையென்று தாற்பரியம்

பண்ணுகிறார். கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்தவனாயினும், ஈனஜாதியான், இராஜாவின் சட்டநிருபணச் சபைக்கு அவையவமாக யோக்கியனாவானோ? இராஜாவின் சபையில் பிராமணரும், சத்திரியருந்தவிர மற்றவர் வரவுங்கூடாது என்பது, இவருடைய மிஞ்சிய சமஸ்கிருத உணர்ச்சியில் வந்தெட்டவுமில்லையோ?

கம்பராமாயணத்தில், நாலுவர்ணங்களின் பேரும் கிரமமாய்ச் சொல்லியவிடத்து, அந்தணர், சான்றோர், வணிகர், வெள்ளாளரென்று வருவதில், சான்றோர் என்றது ஜாதிப்பேர் என்றுசொல்ல சமுசயமும்வேண்டுமோ?

இவைகளை யெல்லாம் சற்றெண்கிலும், யோசியாது, "சான்றோர்" என்றது "ஜாதிநோக்காது." சுபகருமங்களுக்குப் பெருமைபாவிக்கும்படி வந்தபிறரை, "கல்வியறிவொழுக்கங்க ளுடையாரை" என்றது மூடத்தனமென்று உலகமுடனே கூறாது விடுமோ?

நாவிதரும் பண்டிதரென்றபேரால் சத்திரியராவராம். (செ. பு. பக். 27, 28.). அப்படியாகில், ஆசாரிஎன்றபேரால் கம்மாளர் பிராமணராவாரோ? நாவிதர் பண்டிதர் என்றுவருவதுக்கு நூலாதாரமென்ன? அப்படி நாவிதர் சொல்லமுயலுவாரானால், சான்றோர்குலத்தவர் நும்பேர் நிகண்டு மக்கட்பேர்த்தொகுதி 33-ம் சூத்திரத்திருப்பதால், நீர் சூத்திரகுலத்தவரென நூலாதாரங்கொண்டு சொல்லுவார். செந்திநாதையரைப்போல் நூலாதாரமில்லாது வாயில்வந்தபடி கூறுவரோ சான்றோர்? இடையர் முதலாயினவரைப்பற்றி நாமுந்தியே 17-ம் பக்கம்முதல் 19-ம் பக்கம்வரை சொல்லியானதினால், செந்திநாதையர் திரும்பத்திரும்பக்கூறினுரென்று நாமுஞ்சொல்வதுயோக்கியதையன்று. பாண்டியன் என்றுபேர்தரிக்கவும் யோக்கியரல்லாத சிலஜாதிகள் தங்களைப்பாண்டியன் வம்ஸமென்று யாதொரு நூலாதாரமில்லாமல் நாளதுஞ் சொல்லிக்கொண்டுவரச்சே பூர்வம் பாண்டியகுலத்தவர், தம்முன்னோரெழுதிய நூல்களையாதாரமாகக்

கொண்டு, தம்முன்னோர் சான்றோர் என்றும், நாடாரெ ன்னும் பேர்படைத்தவரென்றும், ஆனது பற்றித்தாம் அவ்வரசகுலத்தவரென்றுஞ் சொல்வதால் வெட்கம் எங் ஙனம்நேர்ந்ததோ? (செ. பு. பக்: 28.). செந்திநாதையர் தமிழ் நூல்களுக்கு விரோதமாய்த் தமக்கு நாடாக்கள், நாடார்ப்பட்டம்வேண்டுமென்றும், சான்றார் சான்றோர் எனும்பேர்கள் வேண்டுமென்றும் சொல்வதுக்கு கொஞ் சமாவது வெட்கமில்லாது போயிற்றோ? தமிழரசர்கள் இராச்சியபரிபாலனம் பண்ணிய இடங்களில், இப்படிச் செந்திநாதையர் சான்றோர் குலத்தவரைக்குறித்துப் புன் மொழிகூறியவரென்றால், செட்டிதோளேறும் பெருமா ட்களாகிய இந்நாடாட்கள் இவருக்கு இவர்சொல்லிய இந்திரப்பட்டம் சூட்ட இரண்டுதினமுஞ் செல்லுமா? "சாணான்காசு என்பதனால் சாணார் முன்னமே அரசராகி யும், அதனால் சத்திரியரெனவும் சற்குணர் ஸ்தாபிக்கத் துணிவார் போலும்" என்கிறார். (செ. பு. பக். 28.).

சாணான்காசென்ற வார்த்தை நாளதும் எல்லார் வா யிலும் ராட்லர், உவின்ஸ்லோ அகராதிகளிலுமிருக்க, சாணார் அரசாளவில்லையென்பது எப்படி யேற்படும். அ வர்கள் அரசாண்டது, கி. மு. 700 வருடங்களுக்குமுந்தி. அரசாளவில்லை யென்றால் காசு எப்படி யுண்டாயிற்று? காசிலேயே சான்றோரொருவர் முருக்குத்தடி, தண்டம், கள்ளுக்குடுவைமுதலிய சின்னங்களோடு எழுந்தருளியி ருந்தாரானால், அம்மது உற்பத்திசெய்யும் தொழில் ஈன த்தொழிலெனக்குளறுவது பைத்தியமல்லவோ? இதை விட்டு, "அவர் அரசராய் வீற்றிருந்து உலகபரிபாலனஞ் செய்தாரென்பது ஊமைகண்ட கனவுபோலாகிவிடும்" எனக்குளறுவது அறிவுடையார் செய்கையா? நாளதும் சி லகாசுகளில் பனை, தெங்கு, ஈந்துமுதலிய விருட்சங்கள் மங்கலவிருட்சங்களாகப் பதிப்பித்திருப்பதை யாம் பார் த்திருக்கிறோம். இந்த மதுஉற்பத்தி செய்வதை ஏதோ ஈனமான தொழிலாகக்கூற இவருக்குண்டான நியாயம்

என்னவோ? தேவர்களுக்குச் * [a] சுரர் என்றபேரும், இந்திரனுக்குச் [b] சுரகிராமணி என்றபேரும் வருவது ஈனமா? [c] சேரன். பேர் [a] சுராவிலிருந்து பிறப்பானேன்? [d] காஷ்மீரம், [e] பெண்ணையாறு, [f] ஆலிநாடு, [g] கொங்குநாடு, [h] ஈழநாடு, [i] மதுரை, [j] தொண்டியூர், [k] பாலிநதி, காவிநாடு இவ்வார்த்தைகளின் தாற்பரியமென்ன? (கீழேபார் தாற்பரியம்). மதுச்செய்வது ஈனத்தொழி லென்றால்; இம்மாநகரங்களுக்கும் நாடுகளுக்கும் இப்பேர் வருவானேன்? சிவபிரானுக்குத் † [a] தாலாங்கன் என்றும், பனங்காய்க்குக் [b] காளி என்றும், [c] மதுவுக்குக் குந்தி என்றபேருமேனோ? சூரியவம்சப்பிதாவாகிய [d] காசிபருக்கு அப்பேர்வருவானேன்? அவர்மகன் [e] ஆதித்தனுடைய புத்திரரிருவருக்கும் [f] ஈழன், [g] இச்சுவாகு என்றபேர் வருவதேதுக்காக? (கீழேபார் தாற்பரியம்). (ஈழன்=Sans. Aila). அவ்வீழச்சக்கிரவர்த்தி வம்சமானதால், நாளதும் சான்றோர்குலத்தவருக்கு "ஈழக்குலச்சான்றோன்" என்றபேர் வருகிறது. Todds' Rajahstan (டாட்ஸ் இராஜஸ்ரு) னில் சொல்லி யிருக்கின்ற ஆதித்தமகாராஜாவின் கோத்திரத்தார், ஆதித்தகுலமெனச் சான்றோர்கு

---

* [a] சுரம்=கள், சுரர்=கள். [b] கிராமணி=கிராமமுற்றோன், சாணுருட்பெரியவன். [c] சேரா=கள். [d] காஷ்மீரம்=மதுக்கடல்; காஸ்=மது; மீரா=கடல். [e] பெண்ணை=பனை. [f] ஆலி=அமுதம், கள். [g] கொங்கு=கள். [h] ஈழம்=கள். [i] மதுரை=கள்; மது=கள், அமுதம். [j] தொண்டி=கள். [k] பாலி=கள், காலி=கள்.

† [a] தாலம்=பனை; அங்கம்=உடம்பு. [b] காளி=ஒருக்காளி, இருக்காளி, மூக்காளி. [c] குந்தி=கள், பாண்டவர்மூவரின்தாய். [d] காசிபர்=மதுக்காப்போன்; காஸ்=மது. [e] ஆதித்தன்=சூரியன்; காசிபருக்கு அதிதியால் பிறந்தவர். [f] ஈழன்=கள்ளிறக்குவோன். [g] இச்சுவாகு=சற்கரைக்கையன்; இச்சு=சற்கரை, அல்லது கரும்பு; வாகு=தோள், அல்லது புயம், (தாலகி=கள்).

லத்தவருக்குள்ளும் நாம் ஓர்கோத்திரத்தாரிருப்பது யார் அறியார்? இப்படிப்பூர்வமுதல் எல்லாராலும் நன்குமதிக்கப்பட்ட இம்மதுவை, செந்திநாதையர் ஈனமென்றவுடன் ஈனம்வந்துவிடுமோ? இதைநோக்கியல்லவா காசின் ரூபம் அத்தொழிலைக்குறிப்பதாக வரைந்தது. நாளதும் அங்கிலேயருக்குள் Allsopp (ஆல்சாப்பு), Bass (பாஸ்), Guinness (கின்னிஸ்) முதலியவர்கள் மதுஉற்பத்தி செய்து கீர்த்திபெற்று மகிமையாய் எண்ணப்பட்டிருக்கின்றதை யாரும் அறிவார். மேலும், ஓர்தொழில் ஈனமென்றால், சாஸ்திரம்நோக்கியல்லவா அப்படிச்சொல்லல்வேண்டும். செந்திநாதையருடைய எச்சுருதியுக்தி அனுபவத்தில், இத்தொழில் ஈனமானதாகக்காட்டியிருக்கிறது. மேலே நாமெடுத்துக்கூறிய திருவிளையாடல் புராணம், இராமாயணம், தாலவிலாசம் என்றநூல்களில், மதுவைப்பற்றிச் சொல்லியிருப்பதைச் செந்திநாதையர் கண்ணைத்திறந்து தெளிந்தபுத்தியோடு வாசித்தால் புலப்படும். இதைவிட்டு, நீசத்துவமின்மையை நீசமெனக்கூறுவதால் பயனென்னை? மேற்படிகுலத்தவரில் கள்ளச்சாணார் என்றுபேர்புனைந்திருக்கின்றவர் மேற்படி அரசகுலத்தைச் சேர்ந்தவராய், போர்ச்சேவகத்தொழிலையே சிரமேல்கொண்டு இராஜாக்களுக்குதவியாயிருந்தபடியால், அவர்நாளதும் "சேர்வைகாரர்" என்ற பேராலறியப்படுகின்றனர். "மேல் நாட்டார்" என்று சொல்லப்படுகின்றவரும் அவரிலிருக்கின்றனர். "கள்ளம்"+"சாணான்" என்ற இரண்டுவார்த்தைகளில் "கள்ளம்" என்பதில் மகரம்கெட்டு, வரும்மொழிமுதல் எழுத்துச்சகரம் இரட்டிக்க "கள்ளச்சாணான்" எனவந்தது. "கள்ளன்" அல்லது "கள்ளச்சாதி" என்று பேர்புனைந்திருக்கின்ற ஓர் ஜாதியார் சோழவளநாட்டில் "சேர்வைகாரர்" "நாடார்" என்றபேர்களால் நாளதும் அழைக்கப்படுகின்றனர். "கள்ளம்" என்ற வார்த்தையிலிருந்து "கள்ளன்" என்பது பிறந்தது. விபரம் பாரதவிலாசம்பார்க்க. சோழ இராஜனின் பட்டணத்தில் செட்டி

ப்பெண் ஒருபெண் ருதுவாகி வெளியில்வைக்கப்பட்டுப் போர்ச்சேவகரால் காவல்பண்ணப்பட்டபோது, அவ ளைச் சல்லியம்பண்ண எத்தனித்து, அவள் "கள்ளன்", "கள்ளன்" என்று சத்தமிட்டவார்த்தைகள் இராஜசமு கம்மட்டும் எட்டி, அவ்வார்த்தைகள் நிலைநின்றுபோன தால் இப்பிரிவினர் இப்பேரால் அழைக்கப்பட்டனர். கொடிக்கால் சாணார் என்று பேர்புனைந்திருக்கின்றவர் மேற்படி அரசகுலத்தைச் சேர்ந்தவராய், இராணுவங்க ளிலும், இராஜ அரண்மனைகளிலும் வெற்றிக்கொடிகள் பிடிக்கும் தொழிலை விசேஷமாகக்கொண்டிருந்தனர். சேரனுக்குப் பனைமாலையும், சோழனுக்கு ஆத்திமாலையும் உண்டென்று யாரும் அறிவார். நாளதும் சான்றோர்குல த்தவரான நட்டாத்திநாடார் ஆத்திமாலை புனைந்துவருகி ன்றனர். வேறெச்சாதிக்கும் ஆத்திமாலை கிடையாது. ஆத லின்; அவர் சோழவம்மிசத்தவரொன்பதும், சத்திரியரொ ன்பதும் ஆட்சேபனையன்றி ருசுவாகிறது. சோழனுக்கு அர்த்தம் சூரியன், connected with Solus, and solsun The tamil root சாலு from which சான்றோர் is derived is another form of Solus. c f Heb Shalel= to rule. "நாட்டார்" என்பது இனத்தார் என்றும், உற வாடினவரொன்றும், "ஆத்தியார்" என்பது ஆத்திமாலை புனைவோரொன்றும், ஆதலின் "நட்டாத்தியார்" என்பது உறவாடினவரான ஆத்திமாலை புனைகின்றவர் என்பதும் தாற்பரியம். "நட்டார்" + "ஆத்தியார்" என்றவார்த்தை கள் "நட்டாராத்தியார்" என்று இருபேரொட்டுப் பண் புப்பேராகி, பின்வழக்கில் அதுமருவி, "நட்டாத்தியார்" எனவந்தது. ஆத்திமாலை புனையும் சோழகுலத்தவன் பாண்டியகுலப்பெண்ணை விவாகஞ்செய்து இனம்பண் ணிக்கொண்டமையால், பெண்ணின் பிதா தன் இனத் தவரான பாண்டியராஜனைக் கேட்டு, வாங்கிச் சீதனநா டுகொடுத்து, அவனைத் தன்தேசத்திடம் போகவிடாமல் தன்வீட்டில் அமைத்துக்கொண்டனர். நளவெண்பா முகவுரைபார்க்க.

12. நாடாரவர்கள்புத்தி முன்னும்பின்னும் யோசியாது எழுதியதால் சாண்புத்தியாயிற்றாம். (செ.பு.பக்.29). சகலநூலாதாரங்களோடும், யோக்கியர்கள் ஒப்பத்தக்க விதமாகவும், நாடாரவர்கள் எழுதியநூல் அவர்களுடைய சாண்புத்தியை விளக்கிற்றாம். பின் புத்தியெதுவோ? அறிகிலேம். சான்றோர் சத்திரியர் என்றுசொல்வதுக்கு மறுத்து நியாயஞ்சொல்லமாட்டாமல், விளக்கிருக்கத் தீத்தேடும் அறிவிலிகள்போல் யோக்கியமாய் நடிக்கிறார். முன்னூல் இடங்கொடுக்கவேண்டாமா? இவ்வளவுக்கு இவர் ஏற்படுவாரென்று நாமெண்ணவில்லை.

13. இனி 29ம் 30ம். பக்கங்களில், ஏனாதிநாதநாயனாரென்ற சான்றோர் குலத்தவரான திருத்தொண்டரைப் பற்றி சற்குணநாடாரவர்களெழுதியதைக் கண்டனஞ் செய்யப்போகிறாராம். ஏனாதிநாயனார் வில்வித்தையிற் சிறந்தவரென்றும், அத்தொழிலை இராஜாக்களுக்குக் கற்றுக்கொடுத்தவரென்றும், அவரினத்தவரும், அப்படியே ஆயுதபரிட்சை செய்பவர்களென்றும் பெரியபுராணத்தில் சொல்லியிருப்பதைக்கொண்டு அவர் சத்திரியகுலத்தவரென்று சொன்னாலுங்குற்றம் பொருந்தாது. ஆனால் நாடாரவர்கள் அப்ப்டிச்சொல்லவில்லை. தங்குலத்தவர் சத்திரியரென்று ரூபித்த பின்னர், சத்திரியகுலத்தவரான தமிழரசர்பேர் பலர் பெரியபுராணத்தில் காட்டியிருப்பினும், சான்றார் என்று தமிழரசர் குலப்பேர் புனைந்தவர் ஒருவர்தாமாயின், அவர் தொழிலென்னென்று விசாரிக்கப்புகுந்தவர், அவரும் சத்திரியகருமத்தையே மேல்கொண்டிருந்தாரெனக் கண்டிருக்கிறதென்று சொன்னார். அவர் சத்திரியத்தொழிலை நடத்தினமையால் சத்திரியரன்று. சத்திரியராயிருந்தமையால் சத்திரியத்தொழில் நடத்திவந்தாரென்ற நியாயமாத்திரமேற்படுகிறது. இங்கும் இன்னொன்று கவனிக்கவேண்டியது. ஏனாதிநாயனாரைப்பற்றிச்சொல்லுமிடத்து, “மன்னருக்குவென்றி வடிவாட்படைபயிற்றுந் தன்மைத்தொ

ழில் விஞ்சையிற்றலமை சார்ந்துளார்'' எனப்பெரியபு ராணத்தில் வருகிறது. இவரோ தாம் எழுதியபுஸ்தகம் 3-ம். பக்கத்தில் "உயர்குலத்தானொருவன் ஒத்தடா சாணூரப்பயலே என்றால், வெகுதூரத்தில் பதுங்கிநின்று வாய்புதைத்து எசமானே என்று கதறுகின்றவர்'' என்றது என்னமதியாலோ? இராஜாக்கள் வில்வித்தைகற்றுக்கொள்ளவேண்டியதும், ஆயுதப்பயிற்சி பெறவேண்டியதும் தம்மினுயர்ந்த பிராமணரிடத்திருந்தாவது, தங்குலத்தவரான சத்திரியரிடத்திருந்தாவதென்பது இவர் கேட்டுமிலரோ? இதுதானோ மிஞ்சிய சமஸ்கிருத உணர்ச்சி. "பயல்'' என்பதை எச்சாதியோடு கூட்டிச்சேர்த்துப்பார்த்தாலும் பொருள்படும். அப்படியே, ஒவ்வொரு ஜாதியாரும் மற்றையஜாதியாரிடத்தில்க் கேட்கிறவழக்கமுமிருக்கின்றது. செந்திநாதையருக்கிது தெரியாதோ? இதுநிற்க. ஆறுமுகநாவலர் பிரசுரஞ்செய்த திருத்தொண்டர் புராணத்தில், ஏனாதிநாயனாரை சான்றாரென்று ஒப்புக்கொண்டவர் உடனே திவாகரம் நிகண்டு என்ற நூல்களைக் கவனியாதபடி, தமதிஷ்டப்படி ஜாதிமுறையை ஒழுங்குபண்ணி யிருந்தவரொன்றால், அதனால் ஜாதிமுறை அதுதானென்பது ஏற்படுமோ?உவின்ஸ்லோ, இராட்லர்முதலிய அகராதி ஆசிரியர்களுடைய கண்களை, எப்படி அவருக்குதவிசெய்த சூத்திரர்மறைத்து,தம்மை வைசியரென நிறுத்த முயன்றனரோ, அப்படியே நாவலரும் செய்தனரென்று தான் சொல்லவேண்டியது. முதனூலுக்கும் முன்னூலுக்கும் எவ்வளவுதூரம் இவர் ஒத்துவருகின்றனரோ, அவ்வளவுதூரம் தான் நாமவரை யங்கிகாரஞ் செய்வோமேயன்றி, அதுக்குத்தவறினால் இவர் சங்கப்புலவரோ நாமவரை யொப்புக்கொள்ள. நெற்றிக்கண்ணைக்காட்டினும் குற்றம் குற்றமே என்ற முதுமொழியை இவர் கேட்டவரல்லவோ? மேலும், திவாகரமுறைக்கும், நாவலர் ஜாதிமுறைக்கும் வெகுபேதமிருக்கிறது. எங்ஙனமெனில், குயவருக்கடுக்கப்

பாணரையும், பிறகு ஏகாலியரையும், பிறகு புலையரை யும் வைத்தனர். திவாகர ஆசிரியரோ, குயவருக்குப்பி றகு ஏகாலியரையும், பிறகு பறையரொன்றும் சண்டாள ரொன்றும் பேரொய்திய புலையரையும், பிறகு பாணரை யும் வைத்தார். இவர்களில் திவாகர ஆசிரியரை நாம் ஒப்பவேண்டியதே யல்லாது சமீபகாலத்தில் இப்போ திருந்த நாவலரைத் திவாகரருக்குமேலாக வைப்பது எங் ஙனம்! ஆகையால், நாவலரும் தற்கால ஜாதிப்பிரட்சியி னுல் மயங்கிவிட்டனரென்ற நியாயமுண்டாகுமே தவி ர்த்து, அவர் வைத்தவொழுங்கு சரியென்பது நியாயம ன்று. இப்படி நியாயமெடுத்துணராது, சற்குணர் உட னிருந்திலரோ, மறந்தனரோ, பிறந்திலரோ அறியேம் என்று கூறுவதில் நியாயமெங்ஙனமுண்டாகும்?

14. இனி 31. வது பக்கத்தில் "சாணூர் மாடுதின்பதி ல்லை, புநர்விவாகஞ் செய்வதில்லை, ஆடையாபரணதார ணவிதிகளுண்மை" என்னும் நாலுலட்சணங்களுமிருப் பதால்சாணூர் சத்திரியரென்று நாடாரவர்கள் சொன் னுலல்லவர் செந்திநாதையர் அதிவியாப்தியென்னுங் கு ற்றம் நேர்ந்ததென்னலாம். இதைக்கொண்டு நாடா ரவர்கள் தம்புஸ்தகத்தில் ஒன்றுஞ் சாதிக்கமுயலாமல், இது சான்றோர் குலத்தவர்கொண்ட குன்றுவொழுக்க மெனமாத்திரங் காட்டியதால், நாமிப்போது அதைப்ப ற்றியெழுத அவசியமில்லை. பார்ப்பனகுலத்தவனுகிய சமதக்கினிபகவான் குமாரன்பரசுராமனென்பான், தன் தாய்க்குச் சூரியவம்சகார்த்தவீரியார்ச்சுனன் என்னும் அரசனுல் நேரிட்டகொலைக்குப் பழிவாங்கும்படி சூரிய வம்சச்சத்திரியரை யெல்லாம் நாசப்படுத்தினபோது, சத்திரியரில் அனேகர் தங்கள் உயிர்தப்பும்படி, தங்கள் சத்திரியக்கருமங்களை மறைத்துப் பூணூலைத்தள்ளித்தங் களை அந்நியராகப்பாவித்து எப்படித்தம்தொழில் தவறி யிருந்தனரோ; அப்படியே தெலுங்கர் சூத்திரர்முதலி யோருடைய கொடுமைக்குள்ளகப்பட நேரிட்ட சான்

ரேரெனப் பேர்படைத்த தமிழரசகுலத்தவரில், நாளதில் தங்கருமம் தவறவொண்ணதென் றெண்ணுபவர், மறுபடியும் பூணூலணிந்து வருகின்றனர். இன்னமும் பிராமணருடைய சரித்திரத்தை ஆராய்பவருக்கும் இது நூதனமென்த் தோன்ருது. பல அசுரருடைய கொடுமைக்குப்பயந்தும், துஷ்ட அசுரருடைய கொடுமைக்குப்பயந்தும் அவர்கள் பலகாலங்களில் தம்தொழில் தவறியிருந்தனரென்பது பாரதம், இராமாயணம், திருவிளையாடல்புராணம்முதலிய நூல்களை வாசிப்போருக்குத் தெரியாமல்போகாது. மேலும், ஓர் இராஜன் இன்னேர் அரசனைச்செயிக்க நேரிடுமென்ருல், அத்தேசத்திலிருக்கப்பட்ட குடிகளுக்கும், குருக்களுக்கும் நேரிடக்கூடிய இடுக்கண்களிலும் அவ்வரசகுலத்தவருக்குவரும் ஆபத்து அதிகமென்பது இந்துதேச சீனதேசச்சரித்திரம் வாசித்தவர்க ளெல்லாருக்கும் விளங்காமற் போகாது. இதை உற்றுணர்ந்தயாவருக்கும் தமிழரசகுலத்தவர் பூணூலிழக்கநேரிட்ட முகாந்தரமெளிதில் விளங்கும். (செ. பு. பக். 33.). அங்கிலேயர்முதலாய் கி. பி. 1066-ம் வருஷத்தில் Senlac (சென்லாக்) என்ற இடத்தில் நார்மன்னியருடன் யுத்தஞ்செய்து தோற்று அவர்கள் வசப்பட்டபின், அவர்களும் அவர்கள் பாஷையும் ஈனமடைந்து, சுமார் முந்நூறுவருஷங்களுக்குள், "நானும் அங்கிலேயன் என்று நினைத்தாயா" என்பதாய் நார்மன்னியர் சபதஞ்செய்யும்படி யாயிற்றே.

"பனையேறிவருந்தர்து ஊட்டுப் புரைகளில் புகுந்து மூக்குமுட்டயிடலாமே" என்கிருர் (செ. பு. பக். 32.) ஒழுக்கமுயர்குலம் ஒடுக்கமுயர்குலம் எனப்பெரியோர் சொல்லக்கேட்டோம். செந்திநாதையர் யாசகமுயர் குலமெனச் செப்புகிருர். நாளதில் சான்ருேர்குலத்தவர் பாடுபட்டுக் கைவருந்திச் சாப்பிடுபவராஞல், அவர் தம்ஜாதிப்பேருக்கு யோக்கியர்களாக விருக்கிருர்களென்பதுக்கு ஆட்சேபனை யென்ன? மேலும், ஊட்டுப்புரைகள் செந்திநாதையருக்கு உரித்தேயொழியத் தமிழர

சர்குலத்தவருக்கென்று யாவர் சொன்னார்? "பிராமண போசனம்" என்றவார்த்தை தமிழிலேயிருக்கிறதே யல்லாது, வேறு ஜாதிக்கவ்வேற்பாடு எங்குண்டு? "ஏற்றல்" பிராமணருடைய அறுதொழிலிலொன்றென்று நூல்களிலிருக்கிறதே யல்லாது, அரசருடைய அறுதொழிலிலும் வருமோ? மானங்கெட்ட யாசகத்தொழில் செய்து சாப்பிடப்பிரியப்படுவரோ சான்றோர் குலத்தவர்.

"கடையெல்லாங்காயப்பசியஞ்சும்" என்ற முதுமொழியையும்,

"பாவமுமேனைப்பழியும்படவருவ
சாயினும்சான்றவர்செய்கலார்"

என்றநீதிநெறியையும்,

"நரம்பெழுந்து நல்கூர்ந்தாராயினுஞ்சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கண்டோரார்"

என்ற நீதிவாக்கியத்தையும், செந்திநாதையர் கேட்டது மில்லையோ?

கடமாதொலைச்சிய கானுறைவேங்கை
யிடம்வீழ்ந்ததுண்ணா திறக்கும்—மிடமுடைய
வானகங்கையுறினும் வேண்டாவிழுமியோர்
மானமழுங்க வரின்.

சத்திரியருக்கு அங்கமாக மந்திரியும், நாடும், அரணும், பொருளும், படையும், நட்பும் வேண்டும் என்கிறார். சரிதான். (செ. பு. பக். 34. 38.). இவ்வளவங்கமும் இராஜயோக்கியம் இருக்கும்மட்டும்தான் உளதேயன்றி, ராஜாங்கம் நீங்கியபின்னருண்டென்று யாவர் சொன்னார்? அரிச்சந்திரமகாராஜா இராச்சியம் இழந்து, புலையனுக்கு ஊழியஞ்செய்தகாலத்தில், அவருக்கிவ்வாறு அங்கமுமெங்ஙனமிருந்தது? நளமகாராஜா தம் இராச்சியமிழந்து, தேஜஸிழந்து, அயோத்தி அரசனுக்குச் சுயம்பாகியாயிருந்த காலத்தில், அவருக்கிவ்விலட்சணங்களில்லாமை

யால், சத்திரியரல்லாது போய்விட்டனரோ? பஞ்சபாண்டவர் வனவாசஞ்செய்த பன்னிரண்டு வருஷங்களிலும், இவ்விலட்சணம் பொருந்தியிருந்தனரோ? பரிமேலழகர் சான்றோர் குலத்தவரல்லவென்று மறுக்க செந்திநாதையரால்க்கூடுமோ? யாரால்தான் முடியும்? நாளதும் அவர் கொடிவழியிலுதித்தவர் சான்றோர் குலத்தவருக்குக் குருமுறைகள் நடத்திவருகின்றவராயிருக்க, "உண்மையுரைத்தனர்" என்று செந்திநாதையர் சொல்லும் பிஷப்பிதை ஏகதேசமாய் தம்முடையநூலிலும் ஒப்பியிருக்க, செந்திநாதையரிதை இல்லென்று மறுப்பது மூழமதியீனமல்லவா?

15. சாணுருடைய புத்தி நிலமையைப்பற்றி நாடாரவர்கள் சொல்லுவதை, செந்திநாதைய ரில்லையென்று மறுப்பதில் இப்போது பிரயோசன மில்லை. (செ. பு. பக். 35). புத்தியில் பெலமுள்ளவரென்ற பாதிரியார் பேரைச்சொல்லாததால், பொய்யென்ற நியாயம் என்னமாயுண்டுபெட்டது? நாடாரவர்களெழுதிய புஸ்தகத்தை வாசித்துப்பார்த்து, அவர்கள்புத்தி கட்டைப்புத்தியென்று தீர்த்து, ஆகையால் சான்றோர் குலத்தவரெல்லாரும் கட்டைப்புத்திக்காரரென்று சொல்லும் நெடும் புத்தியின் நீளம் எவ்வளவு? நாடாரவர்களெழுதிய புஸ்தகத்தை வாசித்து, அதன் அங்கிலேயபாஷையின் சரியானதாற்பரியத்தைக் கண்டு பிடிக்கவுமிவராலேலாது போயிற்று! இவரோ இதைக்கட்டைப்புத்தியாலுண்டானதென்று சொல்பவர்? திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் பெனின் கிட்டன் துரையவர்க ளிப்புஸ்தகத்தை வாசித்துப்பார்த்து, "The book seems to me to be clever enough as far as I can judge", இந்தப்புஸ்தகம் நியாயங்களில் வெகுநேர்த்தியானதா யிருக்கிறதென் றெழுதினார்கள். செந்திநாதையருக்கிது கட்டைப் புத்தியாய்த் தோன்றினதாம்! நாடாரவர்கள் இப்புஸ்தகததை வெளியிட்டதால், தம்மௌட்டியத்தை வெளிப்படுத்தினார்களாம். செந்திநாதையர் புஸ்தகத்தில் மௌ

ட்டியங்களே இல்லையாம். வாசிப்போர் அறிந்துகொள்ளவிடுகிறோம்.

இடையன்குடிச்சாணரைநோக்கிவிட்டு, மற்றைத் திருநெல்வேலிச் சாணரையும், தண்டாபூபீக நியாயத்தால் நிச்சயித்தாராம்! (செ. பு. பக். 35.). என்னசொல்ல! செந்திநாதையர் இப்புஸ்தகத்தை எழுதித் தமது புன்மொழிலை வெளிப்படுத்தினரொன்றால், தண்டாபூபீக நியாயத்தால், மற்றை ஐயரெனப்பேர்கொண்டவரெல்லாரும் புன்தொழலுக்கேற்படுபவரென் றேர்ப்படுமோ?

பிஷப்பு திருநெல்வேலிச்சாணரைக்குறித்துப் புஸ்தகமெழுதினமையால், திருநெல்வேலி கிறிஸ்து சபைக்கு பெருங்கேடு விளைந்ததுபோலவும், பாதிரிமாருக்கும் சாணருக்கும் விசுவாசக்குறைவும் பகையும் நிகழ்கின்றன எனவும், ஆதலினேர் அளவற்றகெடுதியை பிஷப்பு சாணருக்குச் செய்தனராகவும், நாடாரவர்கள் சொன்னதைமறுக்க, திருநெல்வேலி கிறிஸ்துசபை நடவடிக்கை இவருக்கெங்ஙனந் தெரிந்தது? (செ. பு. பக். 36.). இது சரியோ, அல்லவோ வென்று, பிஷப்பவர்களைக்கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள். அதைவிட்டு "விவிலிய குற்சிதம்" என்றும், "சாண்சத்திரியப் பிரசண்டமாருதம்" என்றும், குதர்க்கநூல்களெழுதுவதில் வல்லவரும், திருநெல்வேலிக் கிறிஸ்துசபை நடவடிக்கைக் கன்னியருமான இவருக்கிது எங்ஙனந்தெரிந்தது? இவரிதை விசாரிக்கப் புகுந்ததும் அயோக்கியமல்லவா? பிஷப் கால்டுவேல் எழுதிய நூலின்நோக்க மின்னதென்று இவரிங்ஙனம் எழுதுகிறார். (செ. பு. பக். 36-38.). இவ்வளவையும் இங்லிஷில் தர்ஜமால்செய்து, சீர்மை சிரேஷ்டபிஷப்பவர்களுக்கும், எஸ். பி. ஜீ. ஓம் செக்கிரட்டேரியாரவர்களுக்கும், இந்தியா மெற்றிராப்பொலிற்றனவர்களுக்கும் அனுப்புவது உத்தமமெனத் தோன்றுகிறது. இப்படிச் செந்திநாதைய ரெழுதியதையே பிஷப்பும் தம்முடைய அபிப்பிராயமென்றெப்புக்கொ

ண்டால், பிஷப்புக்கு மரியாதை சீர்மையிலும் இந்தியாவிலும் ரொம்பக்கிடைக்கும்போலும். சாணரைக் கிறிஸ்து மார்க்கத்தில் அமைப்பது கூடாதென்றநோக்கமாக "திருநெல்வேலிச்சாணர்" என்ற நூல் அவராலெழுதப்பட்டதாம். செந்திநாதையர் பிஷப்புக்கு வக்கால்த்துப் பிடித்து, இப்படி அவரை மோசப்படுத்தலாமா? பிஷப்பவர்களும், இதுதான் நம்முடைய நோக்கமென்று தெளிவுறச்சொல்வார்களானால், எவ்வளவு நன்ருயிருக்கும்!! வெகுநேர்த்தி!!!

பிராமணர் சூத்திரர்முதலிய உயர்ந்த ஜாதியாரெல்லாரும், தாமே பிராமணரெனவும், தாமே சூத்திரரெனவும், புஸ்தகவாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும், வெளிப்படுத்தா திருக்கின்ருராம். (செ. பு. பக். 39.). இவரிங்ஙனமிப்படிக் கண்ணைமூடிக்கொண்டு ஒன்றும் அறியாதவர்போல் சொல்வானேன்! சூத்திரர்தம்மைச் சூத்திரரென்று சொல்லாதது மெய்தான். அவர் தாம் வைசியரென்று சொல்லிப் புஸ்தகங்களெழுதியிருப்பதை இவர் பார்த்திலரோ! "வேளாளர் இயல்பு" என்ற புஸ்தகம், அவைகளில் பிரதானமானது. மேலும் இவர் சூத்திரர் உயர்ந்தஜாதியோர் என்று சொல்ல இவருக்கு நூலாதாரமென்ன? இதுவே இவருடைய நூலுணர்ச்சி இன்னதென்பதையும், இவருஞ்சூத்திருடைய வஞ்சனைக்குட்பட்டு மோசம்போனவரென்பதையும், தெளிவுறக்காண்பிக்கிறது. சூத்திரர் குலத்தவருடைய நிலை யின்னதென்று இங்ஙனம்கூற ஆவசியகமில்லை.

இன்னும் ஒருகாரியஞ் சொல்ல வேண்டியது. 32-ம் பக்கத்தில், "இப்போது இல்லாதசத்திரியர்" என்ருர். சத்திரியர் இப்போது இல்லையென்று இவருக்குபதேசித்தவர்யார்? கி. பி. 1500-ம். வருஷம்போல் பாண்டியன்குலத்தவர் நாடிழந்தவரென்றும், அதுக்கிப்புறம் தெலுங்கர் 300 வருடமும், துலுக்கர் 70 வருடமும்,

அங்கிலேயர் ஓர் 80 வூழும் ஆண்டிருக்க, ஒரு 400 வூத்துக்கு முந்தி இப்பூமியையாண்ட இராஜவம்சத்தவரில்லையென்றும், அடியோடு போய்விட்டார்களென்றும் மொழிவது அறிவீனமல்லவா? திராவிடச்சத்திரியர், பக். 17, 18 பார்க்க.

இனி 37, 38, 39-ம். பக்கங்களிலெழுதியவைகளுக்குக் கண்டனமெழுத ஆவசியகமில்லை. அவைகள் நாம் மேலெழுதிவந்த கண்டனங்களிலடங்கி யிருக்கிறது.

தொள்ளைக்காதைப்பற்றிப் பலபேர் பலவாருகக் குழறுகின்றனர். ஆதலின், அதைப்பற்றி இரண்டோர் வார்த்தை சொல்லவேண்டியது அவசியமாகக்காணுகிறது. முற்காலத்தில் தமிழரசர் கட்டிவைத்த கோவிலிலும், சபாமண்டபங்களிலும் அமைந்திருக்குஞ் சிலைகளெல்லாம், தொள்ளைக்காதும், முடித்தலையுமுடையவைகளாக அமைத்திருப்பதை, நாளதும் பார்க்கலாம். சீனதேசத்தில் சிங்தஸாங் என்ற வூரிலமைத்திருக்கும் பிரமாண்டமான புத்தனுடையசிலை, தொள்ளைக்காதுள்ளதாக அமைத்திருக்கிறது. இவர் சத்திரியரன்றென்று யாவர் சொல்லக்கூடும். Vide C. M. S. Quarterly Token for Juvenile subscribers, April 1870. முற்காலத்து தமிழரசர்களும், வித்துவான்களும், தொள்ளைக்காதுள்ளவர்களாகவே யிருந்துவந்தனர். உவின்ஸ்லோ அகராதியைத்திருப்பி, தொள்ளைக்காதென்றவார்த்தையின் கீழ்ப்பார்த்தால், எச்சாதிகளுக்கெல்லாந் தொள்ளைக்காது அவர் நாளையிலிருந்ததென்பது விளங்கும். நைடதம் சுயவரபடலத்தில், நளச்சக்கிரவர்த்தியினுடைய குண்டலம் எங்ஙனமிருந்ததைதக் கவனித்தால், அவருக்குத் தொள்ளைக்காதிருந்ததென்று ருசுவாகும். சிவபிரானுக்குந் தொள்ளைக்காதென்று நாம்சொல்ல அவசியமில்லை. துலுக்கர், அங்கிலேயர்முதலியவர்கள், இவ்விடம் வந்ததின்மேல்த்தான், தொள்ளைக்காதுவிடும் வழக்கம் யாவருக்குள்ளும் நீங்கிவருகிறது. இவைகளைக்க

வனியாது எவவற்றையும் கூறுவது மரியாதையன்று. செந்திநாதையர் அங்கங்கே கூறிய புன்மொழிகளுக்கெல்லாம், மறுத்தும் யோக்கியமன்றென்று, நாமும் புன்மொழிகூறுதுவிடுகிறோம். ஆதலின், இனி அவர்நூலெழுதப் புறப்படுவாரொன்றால், விவேகத்தோடு யோக்கியர் அங்கிகாரஞ் செய்யத்தக்கவிதமாய் எழுதுவாராக. அல்லெனின், வில்லதுவளைந்ததென்றும், வேழமதுறங்கிற்றென்றும், வல்லியம்பதுங்கிற்றென்றும், வளர்கடாப்பிந்திற்றென்றும், புல்லர்தம்சொல்லுக்கஞ்சிப் பொருந்தினர் பெரியாரொன்றும், நல்லதென்றிருக்க வேண்டாம் நஞ்செனக்கருதலாமே.

முற்றிற்று.

அநுபந்தம்-A.

சான்றேர் குலத்தவரைப்பற்றி எப். என். அலேக்சாண்டர் பாதிரித்துரையவர்களுக்கும் சான்றேர் பிரதிநிதி ஏ. ஞானமுத்து நாடாராகிய நாம் முதலானவர்களுக்கும்நடந்த கடிதப்போக்குவரவுகள்.

திருவாங்கூர் அபிமானியிலிருந்து மொழிபெயர்த்தெழுதப்பட்டது.

1880 ம௵ எப்பிரல்௴ 20௳, மே௴ 1௳, ஜூன்௴ 1௳, பேப்பர்களிலிருந்து.

எல்லூர்ரெவரெண்டு எப். என். அலேக்சான்டரவர்களுக்கு:

கனமும் பிரியமுமுள்ள ஐயா!

பின்வரும் வரிகளைத்தாங்கள் கவனிக்கவேண்டுமென்று, மிகவும் மரியாதையாய்க் கேட்டுகொள்ளுகிறேம்.

போன நவம்பர்௴, தாங்கள் சி. எம். எஸ். ரிக்கார்ட்டில் எழுதிய சிலவரிகளால், நாங்களிக்கடிதம் தங்களுக்கெழுதும்படி நேரிட்டதென்பது, எங்களுக்குவிசனமாயிருக்கிறது.

இத்தேசக் கிறிஸ்தவர்களாகிய நாங்கள், எங்களுக்கு மிஷனரிமார்களாகிய நீங்கள், கிறிஸ்து மார்க்கத்தைப் போதிக்கவும், வெகுகாலமாக ஐரோப்பாவின் கட்டாயிருக்கிற ஜாதியொற்றுமையில் எங்களைவளர்க்கவும், இவ்விடத்தில் வந்திருக்கிறீர்களென்று உண்மையாய் நம்பியிருக்கிறேம். ஆனல், சங்கதிகள் அதுக்கு முற்றிலும்

விரோதமாயிருக்கிறதென்பது, எங்களுக்கு மகாமனவருத்தமாயிருக்கிறது. மிஷன் ரிக்கார்ட்டுகளில்மட்டுமே, மாசாமாசம்,வெவ்வேறு ஜாதிகளுடையபேரும்,எழுதினவர் தன்னிஷ்டப்படி, பலகிருதும் வேடிக்கையுமானபிரிவுகளுடன், ஒழுங்குபண்ணும் ஜாதிவரிசையுங் காணலாம். இது எக்காலத்தும் இத்தேசத்தைக் குழப்புவதுமன்றி, கிறிஸ்துமார்க்க அபிவிர்த்திக்கும் பெருந்தடையாயிருந்துவருகிறது.

இனிமேல், சாணுர் ஜாதியைப்பற்றி, நவம்பர் ரிக்கார்ட்டில் தாங்கள் சொல்லுவதைப்பற்றி, நாமெழுதுவதைப் பொருமையோடே வாசிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேம்.—

நீங்களெழுதியதில், மூன்றுகாரியங்கள், திருநெல்வேலிகாட்டு நடபடிக்கைக்குப் பொருந்தாததாகவும், தமிழ் இலக்கியங்களுக்கு அடாததாகவுமிருக்கிறது.

I. மேற்கண்ட ரிக்கார்ட்டு 296-ம் பக்கத்தில் தாங்கள் எழுதுவது:

"மணல்நிலத்தில், எவ்விடத்திலும், இந்த பனைமரம் அதிகமாய் வளருகின்றது, வேறுமரங்கள் கிடையாது. இந்தமணல் மைதானங்களில், தாங்கள்செய்கிற ஜீவாப்பனத்துக்கு ஏற்றவர்களாக, சாணுர்ஜாதியைப் பார்க்கலாம்" என்பது.

தாங்கள் இவ்வளவு ஆராய்ச்சியோடு, சாணுருடையதென்றுசொல்லும் இன்னுடுகளில், சாணுர்தவிரமற்றுஞ் ஜாதியாரில்லையா? அல்லது, இதுதவிர்ந்த மற்றுமிடங்களில் சாணுர்குடியிருப்பதில்லையா? மற்றும்ஜனங்கள் அங்கேன் குடியிருக்கவேண்டும்? தம்முடைய அற்பப்பயணத்தில், தாம்பார்த்த மிஷியோன் ஸ்தலங்கள்தான், சாணுருடைய குடியிருப்பாகுமா? சிவகாசியில் நடந்தசுவிசேஷப்பிரசங்கம் ஒன்றில் தாம் கூட இருந்ததாகவும், சிவ

காசிதளைத்தொங்கும் நகரென்றும், சொல்லுகிறீர்கள்- அந்த இடத்தில் குடியிருக்கிற ஜனங்களாரென்றெண் ணுகிறீர்கள்-அவர்கள் சாணாரல்லவா? அவர்களைப் பனந் தோப்புக்குள்ளும், மணல்மைதானத்திலுமா கண்டீர் கள்? சாணாருடையதென்று நீங்கள் சொல்லுமிடத்திலுள் ளமற்ற ஜனங்கள், பதிநீரும் வாழைப்பழமுஞ் சாப்பிடுகி றதில்லையோ? அப்படியிருக்க, சாணார் இதை ஆகாரமா கச்சாப்பிடுவார்க ளென்பது, என்னவிதமாய்? தாங்கள் பிசகாய் எழுதிப்போட்டீர்களென்பதுக்கு ஆட்சேபனை யில்லை. இரண்டுவாரம் இவ்விடமிருந்து, பல இடங்களை ச்சுற்றிப்பார்ப்பதால், ஒரு இந்து ஜாதியாருடைய குலா சாரம் தங்களுக்கெப்படி வெளிப்படும்? அச்சாதியாரில் ப லர்கிறிஸ்துமார்க்கத் தமைந்ததால் எல்லா ஜாதியாருக் குமிருக்கப்பட்ட தன்மைகளை, சாணாருடைய தெனவி சேடணம் பற்றிக்கூறினீர்களோ? இவர்கள் கிறிஸ்துமா ர்க்கத்தமைந்ததினிமித்தம், இதை ரிக்கார்ட்டுகளில் எழு தினீர்களோ?மற்றவர்கள், கிறிஸ்துமார்க்கத்துக்கு லேசா ய் ஏற்படச்சம்மதியாததால், அவர்களை உயர்ந்தஜாதியா ரெனப்பாதிரிமார்கள் நினைக்கின்றூர்களோ? இயூரோப் பியரான அந்நியர்கள் இவ்விடம்வந்ததில், சாணாரில்தா ழ்ந்தவர்களையும், மற்றை ஜாதியாரிலுயர்ந்தவர்களையும் பார்க்கும்படிநேரிட்டதில், இரண்டும்விபரீதமாக அவர்க ளுக்குத்தோன்றினமையால், அவர்கள் இச்சாணார் கீழ் ஜாதியாரெனக்கூறினூர்போலும். சாணாரில் உயர்ந்தோ ரும், ஐஸ்வரியவான்களும், பெரும்பான்மையானோரும், இன்னும் கிறிஸ்துமார்க்கத்தை யேற்றுக்கொள்ளவேயி ல்லை. மிஷனரிமாராகிய உங்கள்மனம், ஜாதிபேதகத்தா ல் கறைப்பட்டிருக்குங் காலபரியந்தம், அவர்கள் ஒரு க்காலும் கிறிஸ்துமார்க்கத் தமையவேமாட்டார்கள்.

II. சாணார் இந்துக்களாகத் தோன்றவில்லை யென்கி றீர்கள். இதுதான் தாங்கள்வெளியிடக்கூடிய நல்லகோ ட்பாடு! இவ்விடத்தில் மிஷனரியாயிருந்துவரும் கால்டு

வேல் பிஷப்பவர்கள் எழுதுவது: "சாணுரைக்குறித்து ஓர் தப்பான அபிப்பிராயமிருக்கிறது. அதை இங்குசொல்லவேண்டியது. டாக்ட்டர் மல்லன் என்பவரும்அதைக்கொண்டு நடத்தப்பட்டிருக்கிறதாகத் தெரியுது. அதேதெனில், "சாணுர் இந்துக்களல்ல"வென்பது. இந்த கோட்பாடு தப்பிதமானதாகவும், ஒப்பாததாகவுமிருப்பதினுல், இனிமேல் இப்படிச்சொல்வதை விட்டுவிடுவது நல்லது. சாணுர் இந்துதேசத்தில் பிறந்தவர்களானதாலும், இந்து மதஸ்தவரானதாலும், அங்கிகாரஞ்செய்து ஒப்புக்கொள்ளப்பட்ட இந்துஜாதிகளுக்கு அவயவமாயிருப்பதாலும், இந்துக்களே. சாணுர் இந்துக்களல்லவென்பது, இந்துக்களுக்கே தெரியாது. இது இயூரோப்பியரின் தப்பான அபிப்பிராயம். இது திருநெல்வேலியில்நடக்கிற மிஷன்வேலையின் தன்மை யின்னதென்று, சரியான அபிப்பிராயம் உண்டாகாதபடி, தடுக்கிறதாயிருக்கிறது" என்று எழுதினுர். (சி. எம். எஸ். ரிக்கார்டு 1873-ம் ஹு ஆகஸ்டுமீ 263-ம் பக்கம் 2-ம் பார்வைப்பார்க்க.)

ஆனுலிப்போ ஒரு துரையவர்க ளிருக்கிருர்கள்; பதினைந்துநாளில், மிஷன் அல்ப்ப ஸ்தானங்களைச்சுற்றிப்பார்த்து, சாணுர் இந்துக்களல்லவென்று தீர்த்துப் போட்டார்களாம்!! இந்துபுராணங்களைக் கவனியாதபடி, ஒரு ஜாதியை மேல்கீழென்று சொல்வது, நகைப்புக்கிடமாகும். பெரியபுராணமென்று பேர்பெற்ற தமிழ்நூலொன்றில், சாணுர் சிறந்தஜாதியென்றும், கீர்த்திபொருந்திய தொழிலுடையவரொன்றுங் கண்டிருக்கிறது. சிவனடியாரில் ஒருவராகிய ஏனுதிநாயனுர் சான்ருர். இராவணன் மந்திரி மகோதரன், பிஷப்கால்டுவேல் சொல்லுகிறபடி, சான்ருேர். இன்னும், சான்ருரான இந்து வித்துவான்களும், கவிராயர்களும் அநந்தம். பெரியபுராணத்திலிருந்து இவ்விடம், இரண்டு கவிகள் எடுத்துரைக்கிருேம்.

வேழக்கரும்பிஞெடு மென்கரும்புதண்வயலில்
தாழக்கதிர்சாலி தானேங்கும்தன்மையதாய்
வாழக்குடிதழைத்து மன்னியஅப்பொற்பதியில்
ஈழக்குலச்சான்ரு ரோணதிநாதனூர்.

தொன்மைதிருநீற்று தொண்டின்வழிபாட்டில்
நன்மைக்கணின்ற நலமென்றுங்குன்ருதார்
மன்னர்க்குவென்றி வாழ்ப்படைபயிற்றுந்
தன்மைத்தொழில்விஞ்சை யிற்றலமைசார்ந்துளார்.

மேற்கண்ட கவிகளினுல், சாணூருக்கு சான்ருரென்றபேர் வழங்கினதென்றும், ஆயுதப்பயிற்சி அவர்கள் தொழிலென்றும், தெளிவுறவிளங்கும். இது ஆதியான அவர்கள் தொழில். சாணூர் சுத்தஜாதியன்றென்று, அவரைப்பழுது சொன்னவர் யாருமில்லை. அவர்கள் கிறிஸ்துமாாக்கத் தமைந்ததினுல், அவர்கள் முன்னேருக்கிருந்த மரியாதை கெடவேண்டுமோ? அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது நுங்கடமையாயிருக்க அவர்களை இப்படி இகழ்வது நியாயமா? இதுவோ மிஷனரிமார், தங்கள் மார்க்கத்தமைந்தவருக்குக் காட்டும் தயவு. "பதிநீர் சாணூரால் காலைப்போஜனமாகச் சாப்பிடப்படுகிறதென்றீர்கள்". பிராமணரில் சிலர்தவிர, மற்றெல்லாஜாதியாரும், அதைச் சாதாரணமாய்த் தடையின்றிச் சாப்பிட்டு வருகிருர்கள். கம்பராமாயணம், பாலகாண்டத்தையும், உண்டாட்டுப் படலத்தையும் படித்துப்பார்ப்பீர்களானுல், ஸ்ரீராமரினத்தாரும், சிநேகிதரும் சாப்பிட்ட அமிர்தம் இதுவென விளங்கும். ஆதலின், சாணூர் நாளதில் அதைச்சாப்பிடுபவரென்ருல், அவர் முன்னேரின் வழக்கத்தை யனுசரித்துவருகிருரென்ருகும். இந்துக்கள் சாணூரை இந்துக்களென்க, மிஷனரியார் இவர்களை இந்துக்களல்லவென்பது எவ்வளவு பெரியதயவு.

III. ஆரியருக்கு முந்தி இவர்கள் தெற்கேவந்ததாகத் தோன்றுகிறதென்கிறீர்கள். தற்காலத்தில், அநேகபண்டிதர் தமிழ் ஆரியபாஷை அன்றென்றும், அது துரானியபாஷையென்றும், (சமஸ்கிர்தப்பாஷை பிராமணருக்கிருக்கின்றதால்), பிராமணர் தவிர்ந்த, மற்றைத்தமிழ்ப் பேசும் ஜாதியாரெல்லாரும், திராவிடஜாதிகள் மூன்றும், ஆரியரன்று துரானியரென்றுஞ் சொலுவார். (பார், காரொற்ஸ் இந்தியகல்வி அகராதி, அரியரில்). கால்டுவேல் பிஷப்பின் அபிப்பிராயமும் இதென்றெண்ணுகிறோம். ஆனால், கோவர்முதலிய மற்றுஞ்சிலரோ, (பார், மதுராஸ் மேயில் டேலி நீயூஸ், 1872-ம் ௵ ஜனுவரி௴ 8௳ பத்திரிகை), தமிழ் பூர்வ ஆரியமென்றும், ஆதலின் தமிழர்முதல ஆரியஅலேயென்றும் ஒப்புகின்றனர். ஆகையால், தமிழர் ஆரியரோ, அன்றோ என்பது இன்னுந்தீராதவழக்காயிருக்க, திருநெல்வேலியினிடத்து இரண்டு வாரங்காலங்கழித்த அலெக்சான்டர் ஐயரவர்களுக்கு, இச்சாணர் ஆரியரன்றெனத் தோன்றியதெங்ஙனம்? இது உங்களுக்குத் தோற்றத்தாலல்ல, எவரோ தப்பிதமாயுபதேசித்ததா லுண்டான ஞானம். இப்பேர்ப்பட்ட, கிறிஸ்தவர்களை அவதூறுசெய்யும் வசனம், உங்களைப் போலொத்த பாதிரியார் எழுதும்படி நேரிட்டதென்பது, எங்களுக்கு ரொம்பவிசனமாயிருக்கிறது.

1879-ம் ௵ டிசம்பர்௴ 2௳. பாளையங்கோட்டை.

மெட்ராஸ் சி. எம். எஸ். செக்கிரட்டேரியாரவர்களுக்கு.

சங்கைபொருந்திய ஐயா!

1. அடியில் கைஎழுத்து வைத்திருக்கும் நாங்கள், பாளையங்கோட்டை சான்றோர்குலத்தவரின் பிரதிநிதிகளாம்.

2. போனநவம்பர் சி. எம். எஸ். ரிக்கார்ட்டில், அலெக்சான்டரொன்னும் ஓர்பாதிரியார், எங்களை "இந்துக்களல்ல" வென்றும், "ஆரியரல்ல" வென்றும், சற்று மறைவாய் ஜாதியில் சேர்ந்தவரல்லவென்றும், எழுதிப் பிரஸ்தாபம் பண்ணினதைப் பார்வையிட்டோம். அது சந்தேகமன்னியில், கமிட்டியாருடைய அனுமதிபெற்றதாயிருக்கிறது. இந்த அபிப்பிராயம், கால்டுவேல் பிஷப்பு சொல்லுகிறபடி, இந்துக்களுக்குத் தெரியாததாகவும், இயூரோப்பிய தப்பபிப்பிருயமாகவு மிருக்கிறது.

3. தங்கள் சி. எம். எஸ். ரிக்கார்ட்டு 1873-ம் ஆ ஆகஸ்டு மீ த்திலிருக்கிறபடி, அப்பிஷப்பு சாணூர் இந்துக்கள்தாமெனத் தெளிவுறக் காண்பித்திருக்கிருர். இந்து புராணங்களும் அவரை இந்துக்களெனக் காண்பிக்கின்றன. ஒரு ரிக்கார்ட்டில் இவரை இந்துக்களெனவும், இன்னோர் ரிக்கார்ட்டில் இவரை இந்துக்களல்லவெனவும் எழுதினுல், ஷை ரிக்கார்ட்டுக்கு மரியாதையென்ன? பாதிரிமார்களும், பாதிரிமார்களின் ரிக்கார்ட்டுகளுமில்லாமலேயிருந்தால், ஜாதிவித்தியாசம், மற்றைஜில்லாக்களில் துரைத்தனத்தார் முயர்ச்சியால் அனேகமாய் எடுபட்டுப்போனதுபோல, திருநெல்வேலி ஜில்லாவிலும் அப்போதே முழுவதுமாய் எடுபட்டுப்போயிருக்கும்.

4. தாங்களும் எங்கள் நடுவில், அலெக்சான்டர் பாதிரித்துரையவர்களைவிட, அதிகக்கால மிருந்தீர்களே. அப்போது நீங்கள் எங்களைப்பற்றி, ஒன்றும் எழுதவில்லையென்று சந்தோஷப்படுகிரேும்.

5. எங்களுடைய அந்தஸ்து எவ்விதமானதா யிருந்தபோதிலும், நாங்களெப்பொழுதுஞ் சுயாதீனராகவேயிருந்து வருகிரேும். மற்றும் ஜாதியாரில் நடக்கிறபடி, நாங்கள் பாதிரிமார்களால் போஷிக்கப்படுகிறவர்கள

ல்ல. நாங்கள் அலெக்சான்டரையரவர்களை மனவருத் தப்படுத்தவுமில்லை. அவரெங்களுக்கு உதவிசெய்யும்ப டியாகக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவுமில்லை. இப்படி யிருக்க, சாணாரில் பலர் கிறிஸ்துமார்க்கத் தமைந்த நிமி த்தியமாக, அவர்களை அலெக்சான்டரையர் தூஷணித்தி ருக்கிறார்.

6. எங்கள்ஜாதிச்சனங்கள் அதிகமாய் கிறிஸ்தவர்க ளாகிப்போனது கமிட்டியாரான உங்களுக்கு வருத்தமா யிருந்தால், தயவுசெய்து இனிமேல் வேண்டாமென்று சொல்லிப்போடுங்கள். ஏன் எங்களை நீங்கள் மற்றை ஜாதியார் முன், உங்கள் ரிக்கார்ட்டுகளைக்கொண்டு, இவ் விதமாய் வதைத்து இகழ்ச்சி பண்ணுகிறீர்கள்?

7. நாங்கள் அவ்வலெக்சான்டரையருக்குக் கடிதம் எழுதி, இச்சங்கதிகளைக் காட்டி, அவர் ஆத்திரப்புத்தி யாய் படபடப்புடன் எழுதிப்போட்டாரென்று காட்டி யிருக்கிறோம். அதன்நகலொன்று இதினுள்ளடக்கம்.

ஆகையால், தாங்களிக்கடிதத்தையும், இதனுள்ளடக் கத்தையும், கமிட்டிக்குமுன் வைப்பதோடு, இதன் பிரி திகளை ஓம்கமிட்டிக்கும் அனுப்பும்படி கேட்டுக்கொள் ளுகிறோம்.

1879ஆ டிசம்பர் ௰௳ உ. பாளையங்கோட்டை.

அலெக்சான்டரையருக்கு இரண்டாந்தரமெழுதிய கடிதம்.

கனம்பொருந்திய ஐயா!

தாங்கள் எங்களுக்கேதும் நேராய் உத்திரவெழுதவி ல்லையென்பது, விசனமானகாரியம்.

பிஷப் சார்ஜென்றுக்குத் தாங்களெழுதிய கடிதத்தி ன் மூலமாய், நாங்கள் இரண்டுகாரியங்களை யறியலா

ளும். 1-வது, கிறிஸ்தவர்களுக்கு ஜாதிபேதமில்லை யென்றும், நாங்கள் கிறிஸ்தவர்களாயிருப்பதால், எங்களை உங்களுக்குப் பிரியசகோதரர்களாக ஒப்புக்கொள்ளுகிறீர்களென்றும். 2-வது, எங்கள் ஜனங்களை, பிஷப் கால்டுவேல் சொல்லுகிறபடி, இந்துக்கள்தானென்றும், ஆரியர் என்று ஒப்புக்கொள்ளத் திகைப்பதாகவும் கேள்விப்பட்டோம்.

முதலாவது தாங்கள் சொல்லுகிறவிஷயத்தில்; உலகத்தில் எங்களுக்கிருக்கப்பட்ட மரியாதையிலெல்லாம், கிறிஸ்தவர்க ளென்கிறபேர் எங்களுக்கிருக்கிறதென்பதையே நாங்கள் விசேஷமாக மதிக்கிறோம். ஆனால், தாங்கள் ஒருகாரியத்தை நினைவுகூறவேண்டியது. நாங்கள் இருக்கப்பட்டதேசம், ஜாதிவித்தியாசத்தால் நிறைந்தது. அச்சாதி யேற்பாட்டுக்குள், நாங்களும் அகப்பட்ட ஒருஜாதியார். மேலும், எல்லாச்சான்றோரும் கிறிஸ்தவரல்லர். இப்போ திவ்விடத்தி லிருக்கப்பட்ட சான்றோரில், ஏகதேசம் ஏழில் ஓர்பாகமாத்திரம் கிறிஸ்தவர். நாங்கள் கிறிஸ்தவர்க ளானதினிமித்தம், எங்கள் வகையறுக்களெல்லாரும் இகழப்பட நிமித்தமில்லையே. இன்னும், உயர்ந்தஜாதி, தாழ்ந்தஜாதி என்றவிஷயம், சுதேசிகளதிகமாய்ப் பேசிக் கொள்ளுகிறதில்லை. இத்தேச நடவடிக்கைக் கந்நியரோ, அதைப்பற்றி யதிகமாய்ப் பிரஸ்தாபிக்கின்றனர்.

இரண்டாவது, நாங்கள் ஆரியரோ, அன்றோ என்பதைப்பற்றி, முன்னே நாங்கள் எழுதியிருக்கிறோம். பிராமணர் தவிர்ந்த, தமிழ்ப்பேசும் மற்றைஜாதிகள் ஆரியரன்றென்பது சிலவித்துவான்களின் கோட்பாடு. காரொற்ஸ் இந்தியகல்வி அகராதி ஆரியரில், "இந்தியாவிலுள்ள பிராமணர் ஆரியவம்சத்தவர், அல்லது ஐரோப்பாமுழுவதையும் சேர்திருத்தின இந்து இயூரோப்பியவம்சத்தவர், என்பதற்கு இக்காலத்தில் யாதோரய்யமுமி

ல்லை'' எனக்கண்டிருக்கின்றது. இதனல் பிராமணர் மட்டும் ஆட்சேபனையன்றி ஆரியரென்பது தெளிவு. மற்றைஜாதியாரைப்பற்றிச் சமுசயமிருக்கின்றதாய் இதிலிருந்து அனுமானிக்கப்படுகிறது. அந்த மற்றைஜாதிகளினுள் நாங்களும் ஒருவராக அந்தச்சமுசயத்திற்குள்ப்படுகிறோம். ஆனல், சில வித்துவான்கள் இதுக்குமாருக, தமிழ்பாஷைபேசும் ஜாதிகளெல்லாம் ஆரியர்தாமென எழுதியிருக்கின்றனர். கோவர், 1872-ம்ஸு சனுவரிமீ 6உ டேலி நியூஸ் பத்திரிகையில், "தமிழ் ஆரியபாஷை, அதுசகல ஆரியபாஷைகளுக்கும் மூலபாஷையான சமஸ்கிர்தத்தாய் நாட்டிலிருந்து ஆதியாயேவந்தது'' என்று பிரசித்தஞ்செய்திருக்கின்றார். ஆதலின், மற்றைத்தமிழ் ஜாதிகள் ஆரியரெனின், நாமும் ஆரியரோ, அவரில்லெனினும், நாமாரியரன்றென்ற நியாயமுண்டுபடமாட்டாது. இப்படியிருக்க, தாங்கள் எங்களைச் சுட்டிக்காட்டி, ஆரியரன்றென்று எழுதநேரிட்ட முகாந்தரமென்ன? இந்துக்கள்ல்லவென்று ரிக்கார்ட்டில் எழுதநேரிட்டதென்ன? எங்களில்பலர் கிறிஸ்துமார்க்கத் தமைந்ததாலோ? இதைப்பற்றித் தாங்கள் தயவுசெய்து கூடியசீக்கிரத்திலெழுதியனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1879ஸு டிசம்பர்மீ 15உ பாளையங்கோட்டை.

ரைட் ரெவரண்டு பிஷப் கால்டுவேல் அவர்களுக்கு, 1880ம் ஸு ஜனுவரிமீ 14உ, மேற்கண்டவிஷயமாய் எழுதியகடிதம்.

சங்கைபொருந்திய தகப்பனே!

இதனடியில் கையெழுத்து வைத்திருக்கும் நாங்கள் பாளையங்கோட்டை கிறிஸ்தவசாணருடைய பிரதிநிதிகளாயிருக்கிறோம்.

ஜாதிவிஷயமாயிருக்கப்பட்ட நடவடிக்கைகளில், தங்களுடைய "திருநெல்வேலிச் சாணர்'' என்றபுஸ்தகத்தையே எல்லாரும் அனுசரித்து, நியாயம் எழுதுகிருர்கள். அலெக்சான்டர் ஐயரும், அதாலேயே எங்களை

அப்படி எழுதும்படி நேரிட்டது. எங்களுக்கு இவ்விஷயத்தில் தங்களால் உதவிகிடைக்க வேண்டியிருக்க, எங்களுடைய அதிர்ஷ்ட ஈனத்தால், இடையூறுநேரிடும்படியாயிற்று. டாக்டர் [illegible]வர்என்ற ஒருதுரை எங்கள் ஜாதியைப்பற்றிப் பேசும[illegible]தும், உங்களுடைய புஸ்தகத்திலிருந்தே எடுத்துரைக்கிருர். அலெக்சான்டர் ஐயரும் தம்முடைய நியாயமாக, உங்களுடைய புஸ்தகத்தையே எடுத்தெழுதுகிருர்.

எங்களுடைய ஜனத்தவரில் பலர் கிறிஸ்துமார்க்கத்தமைய, அதிலெளியவர்களில் பலரைத் தாங்கள் கண்டறியவும், அவர்களுடைய நடவடிக்கையை அறியவும் ஏதுவுண்டாயிற்று. ஆதலினிவர்கள் அல்ப்பஜாதியென்றெழுதப் புகுந்தீர்கள். மற்றுஞ் ஜாதியாரையும், இப்படியே கவனித்துப் பார்ப்பீர்களானல், அவர்களெந்தவிஷயத்திலும், சாணுருக்கொப்பாகவே யிருப்பார்களென்று, லேசாய்க்கண்டு கொள்ளலாம். திருஷ்டாந்தரமாக, தங்களுடையபுஸ்தகத்தில், பேயாராதனே சாணுருடையதெனக் கண்டிருக்கிறது. தாங்கள் 1879-ம௵ அகற்ருேபர் ௴ 31-ம௳ போட்ட மதிராஸ் மெயிலென்ற பேப்பரைப்பார்த்தால், மறவரும், கம்மாளரும் அவ்வாட்டத்தில் பேர்பெற்றிருக்கிருர்களென்று, மறக்குலத்தான் ஒருவரெழுதியிருப்பதைப் பார்க்கலாம். திருநெல்வேலிப் பட்டணத்தில், உள்ளூரில் ஆண்பேயும் பெண்பேயுமாக, 266க்கதிகமான பேய்க்கோவில்களிருக்கிறது. அவைகள் சாணுருடையவைகளா?

ஆகையால், தாங்கள் தயவுசெய்து, மேற்கண்டதீமைகளை நிவிர்த்திபண்ணும்படியாகவும், "திருநெல்வேலிச் சாணர்" என்ற புஸ்தகத்தை ரத்துச் செய்யும்படியாகவும், இப்படித்தங்களுடைய அபிப்பிராயத்தை ஓர் நியூஸ் பேப்பரில் பிரசுரஞ்செய்யும்படியாகவுங் கேட்டுக்கொள்ளுகிருேம்.

இதன்மேல், 1880-ம் ஷ பெப்புருவரிமீ ரிக்கார்ட்டு 51-ம் பக்கத்தில், மேற்கண்ட சான்றோர் குலத்தவர் கேட்டுக்கொண்டபடி, சி. எம். எஸ். செக்கிரற்றேரியாரவாகள் பிரசுரஞ்செய்[illegible]து:

அலேக்சான்டர்ஐயர் தாமெழுதிய ரிப்போர்ட்டில், கவலைத்தாட்சியாய்ச் செய்த சிலகுறிப்புகளைப்பற்றி, திருநெல்வேலியிலுள்ள சாணார் குலத்தவர் விசனப்பட்டவராய் நம்மைக்கேட்டுக்கொண்டதின்மேல், பின்வருவனவற்றை பிஷப் கால்டுவேலுடைய பேப்பர் ஒன்றிலிருந்து, பேர்த்தெழுதுகிறோம் என்பதாக, அலெக்சான்டர் ஐயரவர்களுக்கெழுதிய லெட்டரிலிருக்கிற, பிஷப் கால்டுவேலின் ரிப்போர்ட்டை பிரசுரஞ்செய்திருக்கின்றனர். அந்த ரிப்போர்ட்டை இந்த அநுபந்த A 52-ம் பக்கத்தில் காண்க.

This settled the original point of dispute. இதோடு விவாதம் நின்றது.

அநுபந்தம்-B.

சாயற்புரம் காலேஜ் விஷயமாய், சான்றோர் பிரதிநிதி ஏ. ஞானமுத்துநாடாராகிய நாம்செய்த கடிதப்போக்குவரவுகள்.

திருவாங்கூர் அபிமானி, நேற்றிவ் ஒப்பினியன் முதலான பேப்பர்களிலிருந்து மொழிபேர்த் தெழுதப்பட்டது.

நேற்றிவ் ஒப்பினியன், 1880-ம்ஸு பெப்புருவரிமீ 18உ, பேப்பரிலிருந்து.

எஸ். பி. ஜி. மிஷன் உயர்தரக்காலேஜ் ஒன்று, சென்னைபட்டணம், திருச்சிநுப்பள்ளி, தஞ்சாவூர், சாயற்புரம்முதலிய இடங்களிலொன்றில், நியமிக்கும்படி உத்திரவுசெய்திருக்கின்றனர். எவ்விடத்திலென்பதும், எப்போதென்பதும், டாக்ற்றர்ஸ் திரான் எம். டீ; ரெவரண்டு சி. உவார்லோ பி. ஏ; பிஷப் கால்டுவேல் டீ. டீ; இவர்களடங்கிய சப்க்கமிட்டியொன்றில் தீர்மானமாகவேண்டியது. பட்டணம் தகுதியான இடமல்ல. அங்கே, அநேகம் காலேஜ்கள் ஏற்கனவே இருக்கின்றன. பிஷப் கால்டுவேல் தம்முடைய சொந்தச்சரகமாகிய சாயற்புரத்திலிருக்கவேணுமென்று விரும்புவார். தற்சமயத்தில், சாயற்புரத்தில் மெற்றிரிக்கிலேஷன்வரை படிப்பிக்கப்படுகின்றதினால், அதை உடனே பி. ஏ. வரை உயர்த்துவது கூடாதகாரியம். மேலும், அச்செமினரியில் வாசிக்கிறவர்களில் மிச்சமானவர் சாணூர். அவர்கள் தாழ்ந்தஜாதி யாதலின், அவர்கள்விஷயமாய்ச் செலவுசெய்யப்படும் பணமும், வேலையும், விருதாவென்

று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி என்றவைகளிரண்டும் ஏற்றஸ்தானமாகும். அவையிரண்டிலும், பிராமணர் அதிகமிருக்கின்றனர். சுற்றுப்பட்டணங்களில் அநேகம் பள்ளிக்கூடங்களுமிருக்கின்றன. ஆகையால், அவ்விடங்களில் அதுசித்திபெறக்கூடியதென்பது உறுதி. இவற்றுள் தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளியைவிட சிரேஷ்டமானது. ஏனென்றால், அங்கே, 1874ஷு முதல் 1878ஷுவரை, பி. ஏ. வகுப்பு இருந்தது.

இதுக்கு உத்தாரம்.

திருவாங்கூர் அபிமானி, 1880-ம்ஷு மார்ச்சுமீ 10உ, பேப்பரிலிருந்து.

திருவாங்கூர் டைம்ஸ் எடிட்றரவர்களுக்கு:

ஐயா!

பின்வருவனவற்றைத் தங்கள் பேப்பர் ஒன்றில் அச்சிடக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

போனமீ 18-ம்உ நேற்றிவ் ஒப்பினியன்பேப்பரில், ஒருவர், புதியமுதல்தர எஸ். பி. ஜி. காலேஜைப்பற்றி, தம் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர். அவ்விடம் சாயற்புரமாயிருக்கக்கூடாதென்பதுக்கு, அவர்சொல்லும் நியாயங்களிலொன்று, மேற்கண்ட வித்தியாசாலையில் வாசிக்கும் மாணாக்கரில் பலர் சாணாராம். அவர்கள் தாழ்ந்தஜாதி யாதலின், அவர்கள் விஷயமாய்ச் சிலவுசெய்யப்படும் முதலும், வேலையும்வியர்த்தமாம் என்பதொன்று. பிறகு, திருச்சினாப்பள்ளி தஞ்சாவூர் முதலியவைகள் ஏற்ற இடமென்றும், அதில் பிராமணர் அநேகர் குடியிருப்பவொன்றும் சொல்லினார். இச்சொல்லை நேற்றிவ் ஒப்பினியன் எடிட்றர் கவனியாதுவிட்டதென்ன! பிராமணரை முன்னுக்குக்

கொண்டுவருவது, இந்து அரசர்களுடைய முறையேய ன்றி, இயூரோப்பியரும், தேசாபிமானமுள்ள இந்துக்க ளும், அப்படிச்செய்ய ஒருபோதும் ஏற்படார். சாயற் புரம், வருஷாவருஷம், அநேகம்தொகை மாணுக்கர் கள், மெற்றிரிக்கிலேஷன் பரிக்ஷையில் தேறுகிற இட மென்று, நமக்குத் தெரியும். அதில் மிச்சமான மாணு க்கர்கள் சான்ருேர்குலத்தவர்தான். ஆனால், இவர்கள் விஷயமாய்ச் சிலவுசெய்யப்படும் முதலும், பிரயாசமும் விருதாவென்று சொல்லுபவர் யாரையும், கேட்டதி ல்லை. அவர்கள் புத்திக்கூர்மையில் பிராமணருக்கொப் பானவராகவும், முந்தினராகவு மிருக்கின்றனர். சான் ருேர் குலத்தவர் தாழ்ந்த ஸ்திதியிலிருப்பவரொன்ரு ல், அவர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்படவேண்டி யதுக்கு வேறுமுகாந்தரம் வேண்டுமா? ஆனல், சான் ருேர்குலத்தவர் தாழ்ந்தவரொன்பதுக்கு நியாயமென்ன? நேற்றிவ் ஒப்பினியன் எடிற்றர், இதுக்குச்சற்றுமுந்தி, தவசிமுத்துநாடாரவர்களுடைய தயாளத்தைப் பற்றிப் பேசியிருக்கின்றனர். அவர் சற்காருக்கு வருஷத்துக் கொருதரம், பன்னிரண்டு லட்சம் ரூபாய் கிஸ்திசெலு த்தி வருகின்றனர். அவர் கீழானஸ்திதியிலிருப்பவரா? அவர் சான்ருேர் அல்லரோ? வருஷாவருஷம் மிகுதியா ன கிராட்யூயேற்றுகளும்,அண்டர் கிராட்யூயேற்றுகளும், இச்சாதியிலிருந்து புறப்படுகின்றனர். ஆனாலும், இவ ர்கள்விஷயமாய் எடுத்துக்கொண்ட பிரயாசம், பலனற் றதென்று சொன்னவர் யாருமில்லை. தஞ்சாவூர், திருச் சினுப்பள்ளி தகுந்த இடமென்ருேரோ! அங்கிருக்கப்பட் ட உதவி உபாத்திமார் எக்குலத்தவர்? அவர்கள் சான் ருேர் அல்லவா? சான்ருேர் குலத்தவருதவியைக்கொ ண்டு காலேஜ் ஸ்தாபிக்கப்புகுந்த இம்மகாப்பிரபு, சான் ருேர்குலத்தவருக்கு உயர்தரக்கல்வி உபதேசிக்கக்கூடா தெனப்புகுந்த தென்னவிதம்? சான்ருேர் குலத்தவர் அதிகமாய் வாசஞ்செய்வதால், அக்காலேஜ் அங்கே

ஸ்தாபிக்கக்கூடாதென்பது நியாயமன்று. அது கிறிஸ்தவர்கள் மிகுந்திருக்கப்பெற்ற இடமாதலாலும், சிரிவைகுண்டம், ஆள்வார் திருநகரி, தென்திருப்பதி, பெருங்குளம், ஆறுமுகமங்கலம், திருச்சந்தூர், காயல்பட்டணம், குலசேகரன்பட்டணம், தூத்துகுடிமுதலிய இடங்களிலிருக்கும் பிராமணர், மகமதியர் முதலியோருக்குச் சமீபமான இடமாயிருப்பதாலும், அப்படியல்லவென்று மற்றோர் காட்டும்பரியந்தம், சாயற்புரம்தான் அக்காலேஜ் இருக்கவேண்டிய ஸ்தானமென்பது, நம் அபிப்பிராயம். ஏனெனில், கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துமார்க்கத்துக்கடுத்தவிதமாய்க் கல்விபுகட்டுவது, எஸ். பி. ஜி. சங்கத்தாரவர்களின் கடமையுளொன்றென்பதுக்கு ஆட்சேபனையென்ன?

பாளையங்கோட்டை,
1880-ம௵ மார்ச்சு௴ 4௳. } ஏ. ஞானமுத்துநாடார்,

கிராட்யூயேற்று, எஸ். ஜி. சி.,
சான்றோர் பிரதிநிதி.
திருநெல்வேலி ஜில்லாக்கோடு.

இதின்பேரில், அப்பேப்பருக்கு, ஓல் உஷர் என்று கையொப்பமிட்ட ஒருவர் எழுதுவது.

1880-ம௵ மார்ச்சு௴ 20௳ பேப்பரிலிருந்து.

ஐயா!

நேற்றிவ் ஒப்பினியன் என்றபேப்பரில், எஸ். பி. ஜி. புதுக்காலேஜைப்பற்றி, புத்தியீனமாய்ப் பேசியிருந்தவற்றைக் கண்டிக்கமுயன்று, உமக்கெழுதிப் பிரசுரஞ்செய்திருந்த இரண்டுகடிதத்தையும், நான் சந்தோஷத்துடன் பார்வையிட்டேன். மேற்படி சங்கத்தின் கிரீடமெனத்தகும், திருநெல்வேலிச் சுதேசசபையின் நன்மைக்காக கிறிஸ்துமார்க்கத்துக்கடுத்தவிஷயமாய் கல்வி பயிற்றவேண்டிய இடம், சாயற்புரமென்று அவர்களெழுதினது, ரொம்பப்புகழப்படத்தக்க காரியம்.

காரியமும் அப்படியே முடிந்திருக்கிறதென்று, அவர்களுக்குச் சந்தோஷத்துடன் வாழ்த்துதல் சொல்லுகிறேன். அவர்கள் தாங்கள்கோரிய நோக்கத்தை அடைந்து வெற்றிகொண்டார்களே. ஆதலின், மெட்ராஸ் ஸ்றருண்டாட் நாளதுமீ 10வ போட்ட பேப்பரிலிருந்து, பின்வருவனவற்றை அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

"புது எஸ். பி. ஜி. காலேஜைப்பற்றிய விஷயம், கடைசியாகச் சாயற்புரமென்று தீர்க்கப்பட்டது. அதுக்குத் தஞ்சாவூர், திருச்சிநுப்பள்ளி, பட்டணம என்ற மூவிடங்களைப் பார்க்கிலும், உயர்தரப்பாத்தியமுண்டாயிருப்பதால்தான். பன்னிரண்டு பிள்ளைகள் அடங்கிய ஒரு எப். ஏ. வகுப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பலர் வந்து சேருவாரென்று உத்தேசம். ரெவரண்டு ஜே. ஏ, சாராக்கு பி. ஏ. என்றவர் காலேஜின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆடம்ஸன் ஐயரவர்களுக்கு வேறுவிஷயமான அநேகவேலைகளிருப்பதால், அவரிடத்திலிருந்து மேல்கண்ட அலுவலை ஒப்புக்கொள்ள, அடுத்த அக்றோபர்மீ வருவார்" என்று கண்டிருக்கிறது. சாயற்புரம் புதுகாலேஜ்க்கு, கடவுளாருடைய கிருபையால், சுகவாழ்வும், சித்தியும் பெருக உண்டாகவேண்டுமென்று விரும்புகிறேன்.

ஒல்உஷர்.

இதுவிஷயத்தைப்பற்றி, சிநேகிதர் பலரும் சந்தோஷத்துடன் நம்மைவாழ்த்திக் கடிதங்களெழுதி யிருக்கிறார்கள்.

அநுபந்தம்-C.

சௌந்தரநாயகம்பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்களுக்கும் சான்றோர் பிரதிநிதி ஏ. ஞானமுத்துநாடாராகிய நாம் &c. வுக்கும் சான்றோர்ஜாதி விஷயமாய்நடந்த கடிதப்போக்கு வரவுகள்.

திருநெல்வேலி திருவாங்கூர் எக்சாமினர் என்ற பேப்பரிலிருந்தும், திருவாங்கூர் அபிமானி என்ற பேப்பரிவிருந்தும், தமிழ்திருத்திப் பேர்த்தெழுதியது.

சௌந்தரநாயகம் பிள்ளையவர்கள், தி. தி. எக்சாமினர், 1880-ம்ஸு ஜூன்மீ 21உ, பேப்பரிவிருந்து.

தி. தி. எக்சாமினர் எடிட்றரவர்களுக்கு:

ஐயா!

திருவாங்கூர் அபிமானிஎன்ற பேப்பரில், ஒருவர் "சாணார்" என்றவார்த்தை சான்றோர் என்றவார்த்தையின் மரூஉ எனக்காட்ட முயலுகின்றார். அவரொப்படி அவ்வார்த்தையை "சான்றோர்" என்றவார்த்தையிலிருந்து பிறப்பித்தாரொன்றும், அதுக்கு முகாந்தரமின்னதென்றும், அறிய ஆசையாயிருக்கிறேன். சாணார் என்றபதத்துக்குத் தெளிவானமூலம் வேறிருக்கிறது. அது சௌண்டிகர் என்றவார்த்தை சாண்டார் என்றாகி, அதன்மரூஉவா யிருக்கவேண்டியது. (சௌண்டிகர்=கள்ளிறக்குவோர், கள்விற்போர்.) அவர்களைச் சான்றோர் என்றுசொல்லுவது, எந்தவிஷயத்திலுங்கூடாது.

பாளையங்கோட்டை,
1880-ம்ஸு ஜூன்மீ 4உ. } இன்குயரர்.

இதுக்கு உத்தாரம்.

திருவாங்கூர் அபிமானி, 1880-ம் ஷ ஜுலாய்மீ 20ௗ, பேப்பரிலிருந்து.

திருவாங்கூர் அபிமானி எடிற்றரவர்களுக்கு:

ஐயா!

பின்வருவனவற்றைத் தங்கள் ஜர்ணலொன்றில் அச்சிடக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தி. தி. எக்சாமினர் ஜுன்மீ 21-ம்ௗ போட்டபேப்பரில், இன்குயரார் என்ஞெருவர், சாணார் என்றவார்த்தையைச் சான்ருேர் என்றவார்த்தையிலிருந்து பிறப்பிப்பது கூடாதென்றும், சௌண்டிகர் என்றவார்த்தையிலிருந்து பிறந்ததெனவுங் கூறுகின்ருர். இதைப்பற்றி, நாமிப்போது அதிகமாய்ச்சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. இது தமிழிலக்கியத்துக்கு ஒத்ததுமல்ல. சான்ருேர்தான் சரியானவார்த்தையென்று, அநேகம்புஸ்தகங்கள் இதுவரையி லெழுதப்பட்டிருக்கின்றன.

ஆனுலும், சௌண்டிகரென்ற வார்த்தையிலிருந்து, சாணார் பிறக்கவில்லையென்பதுக்கு, இரண்டு நியாயம் தருவோம். இன்குயரார் நேரானவராயிருந்தால் அவைகள் போதுமானதா யிருக்கும்.

முதலாவது, "சாணார்திருமேனி" என்றழைக்கப்படுகின்றவரும், அறுபத்துமூவரி லொருவருமான ஏனுதிநாயனுரை, ராட்லர் அகராதியில், "ஈழ்க்குலச்சான்ருேன்" எனச் சொல்லியிருக்கிறது. உவின்ஸ்லோ இவரை, "ஈழ்க்குலச்சான்ருன்" எனச்சொன்னுர். நன்னூல்விதிப்படி, ஆ, ஓ, வாக மாறுவது செய்யுள்வழக்கு. "பெயர்வினையிடத்து ன, ர, ள, ய, ஈற்றயல் ஆ, ஓ, ஆகலும் செய்யுளுரித்தே". நன்னூல், பொதுவியல் 2-ம் சூத்திரம். இன்குயரார் சௌண்டிகர் சரியான பதமென்ருர். இது அசல் சமஸ்கிருதப்பதம். நல்லது,

உபமன்னிய மகாரிஷி, சமஸ்கிருதத்தில் செய்த பக்தமா காத்மியத்தில், ஏனாதிநாதநாயனாரை எக்குலமெனக்க ண்டிருக்கிறது. சௌண்டிகர்குலமென்றுவிருக்கிறது. “சாக்ஷிகுலோத்பவ” என்றுகண்டிருக்கிறது. பெரிய புராணத்தில் சான்றோர்குலமெனப் பெயர்வருவதுக்கு, சமஸ்கிருதத்தில், சாக்ஷிகுலமெனக் கண்டிருக்கிறது, ஆதலின், சாக்ஷிகுலமும் சான்றோர்குலமும் ஒன்றே. சாணார்குலம் சௌண்டிகர்குலமாயின், சௌண்டிகர் குலோத்பவ என்று ஏன்சொல்லவில்லை. சாக்ஷி என்பது சூரியனுக்கோர் பேராதலினும், சான்றோன் என்பதும் சூரியனுக்குப்பேராதலினும், சான்றோர்குலமென்பது, சமஸ்கிருதத்தில் சாக்ஷிகுலமெனவருவது நியாயமே. மேலும், பெரியபுராணத்தில், சான்றோர்குலம் என, ஓர் ஜாதி கண்டிருக்கிறது. சாணார் அக்குலமில்லெனின், வேறையார் அக்குலத்தவராவார்? வேறெக்குலம் சான்றோர்குலமென மாறும்? ஆதலின், இன்குயரார் புத்தி நேராயிருக்குமானால், சான்றோரும், சாணாரும் ஒன்றென அவர் கண்டறிய வருத்தமிராது.

இரண்டாவது, சௌண்டிகவொன்பதுக்கு கள்ளிறக்குவோர், கள்விற்போரொன்பது தாற்பரியமெனக் கூறுகின்றார். தமிழ் அகராதிகளில் இவ்வர்த்தத்தைக்காணோம். அங்கே “கள்விலைஞர்” என்றுமட்டுங் கண்டிருக்கிறது. (நிகண்டைப்பார்க்க). இவ்வார்த்தை திவாகரத்திலில்லை. நிகண்டெழுதியகாலம், அதாவது நாயக்கமார்காலத்தில், இவ்வார்த்தை தமிழில்வந்து வழங்கியிருக்கிறதாகத் தோன்றுகிறது. தமிழிலக்கியங்களை இன்குயரார் வாசித்துப் பார்ப்பாரானால், மதுவிற்குந்தொழில்வேறு கள்விற்குந் தொழில்வேறென்றும், மதுச்செய்வோர்வேறு கள்விற்போர் வேறென்றும், எளிதில் கண்டுகொள்வார். சௌண்டிகருக்கு பழையர், துவசர், படுவர் என்றும் பேருண்டு. (நிகண்டு மக்கட்பேர்த்தொகுதி 36-ம் கவிபார்.)

இப்பேருடையோராய் ஓர் ஜாதியார், பட்டணத்துக்கடுத்த படுவூரிலும், பொன்னேறி கிராமம் கொக்குமேடு, பம்பலூர் என்ற இடங்களிலும், சிரிபெரும்புத்தூரென்ற கிராமத்திலு மிருக்கிருர்கள். இன்னும்பல இடங்களிலும், நீலகிரியிலுமிருக்கின்றனர். திருநெல்வேலியிலும், கள்விற்போராகிய கள்குத்தகைக்காரர், பலஜாதிக்காரராகவிருக்கிருர்கள்.

ஆதலின், சான்ருேர் என்ற சாணூர் சௌண்டிகரல்லவென்பது தெளிவாயிருக்கிறது.

ஆதி இந்துப்பிரபுக்களும், அதிகாரிகளும், பனைமரத்தையும், அதன்சாற்றையும், மகாமகிமையாயெண்ணிவந்தனர். தேவர்களுக்குச் சுரரென்றபேரும், அவரெதிரிகளுக்கு அசுரர் என்றபேரும் வருவதாலும், சேரனென்றவார்த்தை சுரா . என்றவார்த்தையிலிருந்து பிறப்பதாலும், அவனுக்கு பனந்தாரன் a என்றபேரிருப்பதாலும், இது விளங்கும். சிவனுக்குத் தாலாங்கன் b என்றும், பலராமனுக்குத் தாலகேதனன் c என்றும் பேர்வருவதேன்? மதுரைக்கு மது என்றும், பெண்ணையாற்றுக்குப் பனையாறென்றும், கொங்குநாட்டுக்கு மதுநாடு என்றும், காஸ்மீரத்துக்கு மதுக்கடல்என்றும் தாற்பரியம்வந்ததென்ன? இதெல்லாம் மது எவ்வளவுபுனிதமாகக் கொள்ளப்பட்டதென்பதைக் குறிக்கவில்லையோ?

பாளையங்கோட்டை,
1880-ம்ஞ சூலாய்மீ 3உ. } ஏ. ஞானமுத்துநாடார்,
கிராட்யூயேற்று, எஸ். ஜி. சி.,
சான்ருேர் பிரதிநிதி.
திருநெல்வேலி ஜில்லாக்கோடு.

---

a பனந்தாரன்=பனைமாலையுடையோன். தார்=மாலை. b தாலாங்கன்=பனைஉடம்பன். c தாலகேதனன்=பனைக்கொடியோன்.

சௌந்தரநாயகம் பிள்ளையவர்கள், தி. தி. எக்சாமி னர், 1880-ம் ஞ் ஜுலாய்மீ 20-ம்வ, பேப்பரிலிருந்து.

சாணுர் ஜாதியைப்பற்றி.

இதுவிஷயமாய் அடுத்தாப்போல் ஒருவரொழுதிய காகிதத்தைப் பிரசுரஞ்செய்கிறோம். அதையும் ஒருவகையாய் ஒப்புக்கொள்ளலாம். நம்முடைய அபிப்பிராயம், சாணுர் என்றவார்த்தை சௌண்டிகரென்பதிலிருந்து பிறந்ததென்பதே. (சௌண்டிகர்=கள்ளிறக்குவோர், விற்போர்.) மேலும், சுண்டி என்பதுக்குத் தமிழில் "கள்" என்றர்த்தம். இதுவும், மேற்கண்டதை ரூபிக்கும். சாணுர் சான்றோர்தானென்று, நமக்கெழுதிய நாடார் ஒருவருடைய கடிதம்வந்தது. ஆனால், அவருடைய நியாயங்கள் பெலனுள்ளதல்ல. நிகண்டிலும், இலக்கியத்திலும், சூரியனுக்கு சான்றோர் என்றபேர்வருவதாலும், சான்றோர் என்பதுக்கு சூரியகுலத்தோர் என்பது தாற்பரியமாதலாலும், சாணுர் சூரியகுலத்தவரென்றும், ஆதலால், சான்றோர் என்பது சரியானபதமென்றும், சொல்லுகிறார். சூரியனுக்கு சான்றோன் என்று இலக்கியத்தில்வருவது சரியே. இதனாலே சான்றோர் என்பதுக்கு சூரியகுலத்தோர் என்றேற்படுமோ? ஏனென்றால், சான்றோர் என்பதுக்கு சூரியர்கள் என்றர்த்தமேயொழிய, சூரியகுலத்தோரென்றர்த்தமாகமாட்டாது. சூரியகுலத்தவருக்குச் சான்றோர் என்றபேர் ஒருநாளுமிருந்ததில்லை. மேலும், ஜாதிபேர் அவர்கள் செய்யுந்தொழிலைப்பற்றி வரவேண்டியது. மறவருக்கு, அப்பேர் முன்னாளில் அவர்கள் வேடராயிருந்ததினிமித்தமும், வேளாளருக்கு, அப்பேர் முன்னே பயிர்செய்தவர்களானபடியாலும், கரையாருக்கு, அவர் கரையடுத்திருப்பவரானதாலும், பரபருக்கு, அவருக்குக் கடலில் யாத்திரைசெய்பவரானதாலும், (பரவை=கடல்), வண்ணருக்கு, அவர்வஸ்திரம் வெளுப்பவரானதாலும்,

அப்பேர்வந்தது. சான்ருேர் என்றது ஒருதொழிலையுங் காட்டவில்லையே. சாணருடையதொழில் கள்ளிறக்குதல். இது சான்ருேரிலிருக்குதா? நாடார், ஏனுதிநாதநாயனுர் சான்ருேர் என்று சொல்லப்படுவதால், தம் ஜாதி சான்ருேர் என்று சொல்லுவதுகூடாது. நாயனுர் சாணார்தான். சிவனடியார், மிகவும் மகிமைபெற்றவர். ரொம்பப் படித்தவரா யிருந்ததினிமித்தம், அவர் சான்ருேர், சான்ருர் என்றழைக்கப்பட்டது சரியே. இதனல், சாணர் சான்ருேர் என்ற நியாயம் உண்டாகவே மாட்டாது.

எந்தஜாதியும் மரியாதையாய் தம்தொழிலை ஒப்புக்கொள்ளுவது நல்லது. சாணர் கள்ளிறக்குவதாலும், அதை விற்பதாலும், சீவாப்பனம் பண்ணுகிறவர்கள். அவர்ஜாதிப்பேர் அத்தொழிலிலிருந்துதான் வந்திருக்கவேண்டியது. ஆதலின், சாணர் என்றவார்த்தை சாண்டானென்பதிலிருந்து மருவினது. சாண்டானென்பது சௌண்டிகனென்பதிலிருந்து பிறந்துவரும். சான்ருேரிலிருந்து மேற்படிவார்த்தை வரவேண்டுமானுல், சான்ருேர் என்பதுக்கும், கள்ளிறக்குதலுக்கும், சம்பந்தமுண்டெனக் காட்டல்வேண்டும். நியாயமிதுதான். வார்த்தையிலிருந்து தொழிலைக் காட்டுக. சௌண்டிகனென்றவார்த்தை அதைக்காட்டும். சான்ருர் காட்டமாட்டாது.

இதோடு மேற்படி சௌந்தரநாயகம்பிள்ளையவர்கள் பேப்பரில்சேர்ந்து வருவது.

தி. தி. எக்சாமினர் எடிற்றரவர்களுக்கு:

ஐயா!

உமதுபேப்பரில் ஒருவர் சாணனென்றவார்த்தையைச்சௌண்டிகர் என்றவார்த்தையிலிருந்து வந்ததென்கிருர். இது நமக்கு நூதனமாயிருக்கிறது. இதனுல்,

திருவாங்கூர் அபிமானியிற் சொல்வது உண்மை என்றேனே? அல்லவே அல்ல. சாணுறென்றவார்த்தை சான்றோரிலிருந்து பிறந்ததென்பது கூடாதென்றுமாத்திரமல்ல, துணிகரமானதாயுமிருக்கிறது. நானறிந்ததைச் சொல்லுகிறேன். சாணூர், சாண் + நார், இரண்டுவார்த்தைகள் சேர்ந்துண்டானது. (நார், பனையேறும்போது காலில்மாட்டிக்கொள்ளும் நார்). இது ஒருவிதமான ஆகுபெயர். 1879-ம்ஞ ஜனுவரிமீ கொச்சின் ஆர்கஸ் என்ற பேப்பரைப்பார்க்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருவனந்தபுரம், 1880-ம்ஞ சூலாய்மீ 2உ. } எஸ்.

இவை இரண்டிற்கும் உத்தாரம்.

திருவாங்கூர் அபிமானி, 1880-ம்ஞ செப்டம்பர்மீ 20உ, பேப்பரிலிருந்து.

திருவாங்கூர் அபிமானி எடிற்றரவர்களுக்கு:

ஐயா!

சாணூர்விஷயத்தில் சௌந்தரநாயகம்பிள்ளை பிரவேசிக்க அவசியமின்னதென்று, நமக்கு விளங்கவில்லை. சாணுறென்ற பதத்தை சான்றோரிலிருந்தொருவர் பிறப்பித்தனறென்றால், சௌந்தரநாயகம்பிள்ளைக்கு விசனம் வருவானேன். மேலும், சௌந்தரநாயகம்பிள்ளை நியாயத்தைவிட முன் பதிலெழுதியவருடைய நியாயம் தெளிவாயும், சரியான ஆதாரமுள்ளதாயுமிருக்கிறது. எப்படியெனில், இரண்டுவார்த்தைகள் ஒன்றற்கொன்று சம்பந்தம்போல் தோன்றுவதால், சாணூரைச் சௌண்டிகரென்னலாமா? கொஞ்சமாவது மூளையிருக்கப்பெற்ற யாவருக்குமிது அபத்தமெனத்தோன்றும். "நாயகம்", "நாய்", இரண்டுவார்த்தைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதெனவும், "நாயகம்" என்றவார்த்தையி

விருந்து "நாய்" மருவியதென்றுஞ் சொல்லலாமா? கூடாதே. அப்படியாயின் சாணார் எப்படிச் சௌண்டிக ராவார்கள்? சான்றார் என்றோர்ஜாதி இல்லவேயில்லை யென்கிறார். ரொம்பநேர்த்தி. தமிழ் அகராதி எதையும் எடுத்துப்பார்க்கட்டும். சான்றார் என்பது ஜாதிப்பேரொன்றும், அறிவாளிகள்பேரொன்றும், தெளிவாய் விளங்கும். மதிராஸ் கல்விச்சங்கத்தைச்சார்ந்த வேலாயுத முதலியார் பெரியபுராணமென்ற நூலில், "சான்றார்குலம்" எனக்கண்டிருக்கிறது. சௌந்தரநாயகம்பிள்ளை இவ்வளவு பிரத்தியக்ஷமான உண்மையை மறுக்கப்பார்க்கிறார். உவின்ஸ்லோ அகராதியில் பின்வரும்வார்த்தைகளிருக்கின்றன. சான்றார்=சாணார்; சாணார்=சான்றார்; வேலைப்பெயர் சான்றார் = A. class of சான்றார், சான்றாரில் ஓர்பிரிவார்; ஈழக்குலச்சான்றார் = A superior class of toddy drawers, மதுவிறக்குவோரில் உயர்ந்தபிரிவார் என்றுவருகிறது. சௌண்டிகரோ = Toddy sellers, கள் விலைஞர் என்று கண்டிருக்கிறது. யாழ்ப்பாணம் பேரகராதியில், சாணான் = சான்றான்; சான்றார் = ஒருஜாதியார் என்றிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நாளதும் இச்சாதியாருக்கு சான்றாரென்ற பேரேயல்லாது சாணாரென்றில்லை. ஜூலாய்மீ 20உ போட்டுத் தங்களுக்கெழுதிய கடிதக்காரர், சமஸ்கிருதம், தமிழ்முதலிய நூல்களிலிருந்து ஆதாரம் எடுத்துக்கூறி, சான்றார்குலம் சௌண்டிகர்குலமன்றெனத் தெளிவுற ரூபித்திருக்கிறார். ஏனெனில், சௌண்டிகரென்றவேறோர்குலம் நாளதும் பிரத்தியேகமா யிருக்கிறதே.

இரண்டாவது, தொழிலாலேயே ஜாதிக்குப்பேர் வரவேண்டுமென்பது அவசியமில்லை. பிராமணருக்குத் தமிழில் அந்தணரென்றும், பார்ப்பாரென்றும், வருவது தொழிலாலன்று. வேதியரென்பது அதைக்குறிக்கும். இடையர், குசவர், எத்தொழிலினால் தம்பேர்பெற்றார்?

நாவிதர் என்று பேர்வருவதால், "மயிர்" அதில் அடங்கவேண்டியது அவசியமா? ஆதலின் சான்றோர் என்பது, தொழிலினுல்வந்ததன்று. தொழிலினுல் அவருக்குக் கருக்குப்பட்டையர் எனப்பேர்வரும். (பெரியபுராணம், ஏனுதிநாதநாயனுர் புராணம் 3-ம் கவிபார்க்க). சூரியகுலத்தவரோ சந்திரகுலத்தவரோ என்பது, இப்போது கவனிக்கவேண்டியதில்லை.

மூன்ருவது, மூடத்தனமும் வீணத்தனமுங் காட்டப்படுவது இனிமேல். "எஸ்" என்ெருருவர் சாணுரென்ற வார்த்தையை சாண் + நார் என்ற வார்த்தைகளிலிருந்து பிறப்பித்தாராம். சௌந்திர நாயகம் பிள்ளை பீ. ஏ, பீ. எல் அவர்கள் புத்திக்கு இது ஒத்திருக்கிறதாம். இப்பேர்ப்பட்ட பேப்பருக்கு என்னமரியாதையுண்டு. ஒரு வார்த்தையைப் பதச்சேதம் பண்ணும்போது ஒருமை பன்மை கவனித்து அப்படிச்செய்யவேணும். சாணுர் என்பதுக்கு ஒருமை சாணுனல்லவா? இனிமேல் நாருக்கு என்ன செய்வார்? கன்னுர் என்றவார்த்தையை கல் + நார்=கல்லானநார் என்றும், வண்ணுர் என்ற வார்த்தையை வண் + நார்=வெண்மையான நார் என்றும் வருவதாய்ப் பதச்சேதஞ்செய்யப் படித்துக்கொடுக்கிருர் சௌந்திரநாயகம் பிள்ளை பீ. ஏ, பீ. எல். இதன் யோக்கியதையை உலகம் தெரிந்துகொள்ளட்டும்.

பாளையங்கோட்டை
1880ம்ஹு ஆகஸ்டுமீ 2ம்வ } லௌவர் ஆப் ஜஸ்றிஸ்.

சௌந்திர நாயகம்பிள்ளை அவர்கள், தி. தி. எக்சாமினர், 1880ம் ஹு அக்ற்ருேபர் மீ 1ம்வ பேப்பரிலிருந்து.

தி-தி-எக்சாமினர் எடிற்றரவர்களுக்கு:

ஐயா,

திருவாங்கூர் அபிமானியில், இச்ராதியாரைப்பற்றி, திரும்பவும் ஒருவரெழுதி யிருக்கின்றனர். சாணுர்தங்கள் ஜாதிப்பேரைப்பற்றி மற்ற இந்துக்கள் கொள்ளும்

அபிப்பிராயத்துக்கு மாறாக எண்ணுவானேன்! சாணார் சாண்டாரென்றவார்த்தையின் மரூவு. அது சௌண்டிகரென்றவார்த்தையின் திரிபு. (சௌண்டிகர் = கள் விற்போர்.) யாழ்ப்பாணத்தில் சாணார் சான்றாரென்னப்படுகிறாரென்கிறார். யாழ்ப்பாணத்தானைக்கேட்போம். அவன் சாண்டாரென்று சொல்லுவான். அது சௌண்டிகரென்ற வார்த்தைக் கடுத்ததாயிருக்கிறது. சாணார் கள்ளிறக்குவோரேன்பதுக்கும், கள்விற்போரென்பதுக்கும், ஆட்சேபனை யில்லையே. அப்படியிருக்க, அவர் தம் தொழிலை மறைக்க முயலுவானேன். கள்ளிறக்கி விற்பவர் சௌண்டிகர், சௌண்டிகர் சாண்டார், சாண்டார் சாணார். இப்படியிருக்க, உம்பேரைப்பற்றி முறையிடுவானேன்?

நாகர் கோவில்,
1880ம் ௵, செப்டம்பர் ௴ 10ம் ௳ } நோக்காஸ்றம் பக்கு

இப்படிச்சொன்னதையே திரும்பவும் கூறுவதற்குக் கடைசியாக உத்தாரம்.

திருவாங்கூர் அபிமானி 1880ம் ௵ டிசம்பர் ௴ 10ம் ௳ பேப்பரிலிருந்து.

திருவாங்கூர் அபிமானி எடிற்றரவர்களுக்கு:

ஐயா!

தி. தி. எக்சாமினர் சான்றோர் ஜாதியைப் பற்றி இன்னும் தப்பிதமான கொள்கையுடையவரா யிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது.

நாம் சொல்லிய எத்தனையோ நியாயங்களும் புத்தியுள்ளவர்களுக் கறிவுறுத்தப்போதுமான தாயிருக்கிறதே. ஒருகாரியத்தை நம்ப மனமில்லாவிட்டால், அந்த ரூபகாரம் எவ்வளவுதெளிவாயிருந்தபோதிலும், நம்புவது வருத்தந்தான்.

இவ்விடத்தில் முதலாவது, தொழில் பொதுவாயிருப்பதால் ஜாதியொன்றாக மாட்டாதென்றுகாட்டுவோம்.

நெசவுத்தொழிலை எடுத்துக்கொள்ளுவோம். சில செட்டிகள் நெசவுகாரர். கைக்கொளவர் நிசவுகாரர். ஈழுவர் நிசவுக்காரர். கோலியப்பளளர் நிசவுக்காரர்-ஒருவகைப்பறையர் நிசவுகாரர். ஆதலின், இவரெல்லாம் ஏகஜாதிக்காரரென்னலாமா? பேரின் சப்தம் ஒன்றுபோலிப்பதால் ஏகஜாதியாகமாட்டார். பறையரும், பறவரும் ஒன்றோ? பள்ளர்குலமும் பள்ளிகுலமும் ஒன்றோ? அங்ஙனமிருக்க, பிரத்தியேகமான குலங்களாகிய சாணாரும், சௌண்டிகருமெப்படி ஒன்றுவார்?

இரண்டாவதாக, சாண்டாரென்பது சாணாரென்பதின் ஆதிவார்த்தையென இந்துக்க ளொப்புக்கொண்டதுபோல கூறுகிறார். அப்படியானால், இலக்கிய ஆதாரமுண்டா? அசல் இந்துவாகிய வேலாயுத முதலியார் சான்றார் என்பது அவ்வார்த்தை யெனச்சொல்லுகிறார். இதை இயூனிவெர்சிற்றியாரும் அங்கி கரித்திருக்கின்றனர். ஆதலினிது விஷயமாய் அவரை விடச்சிறந்த இந்துப்பெருமான் ஒருவருடைய அபிப்பிராயம் நமக்கு வேண்டியதில்லை. சாண்டார் என்பது யாழ்ப்பாணத்தில் வழங்குவதெனச்சொன்னால், யாழ்ப்பாண அகராதியில் சான்றாரெனக்கண்டிருப்பதேன்? ஆதலின், யாழ்ப்பாண அகராதியைவிடச் சிறந்தயாழ்ப்பாண ஆதாரம் நமக்குத்தேவையில்லை. சாண்டாரென்பது நூதனமாய்ச் சிருஷ்டித்தபதம். இப்படி நூதனபதம் சிருஷ்டிக்க வேண்டுமெனில் நாம் அவருக்கு இளைத்தவரல்லர். ஆனால், நாம் வசைகூறப் புறப்படாததால், ஏசாதுவிடுகிறோம். ஆதலின், சாணாரென்பது சான்றரென்னும் பதத்தின்திரிபேயாம். "சாண்டார்" "சௌண்டிகர்" முதலியபதங்களின் திரிபென்பது அபத்தம். இவ்விதமாக, மூன்று = மூணென்றும், மூன்றான் = மூணானென்றும், தோன்றான் = தோணானென்றும், ஒன்றாது = ஒணாது என்றும் வழக்கில் வழங்கிவருகிறது.

கடைசியாக சான்றர் தம் ஜாதியைப்பற்றி முறையிடுவதாகச்சொல்லுகின்ருர். சான்றர் முறையிட்டவரல்லர். தி. தி. எக்சாமினர் எடிற்றரும், அதுக்கு கடிதங்க ளெழுதியவர்களுமே தெளிவும், லேசாயிருக்கப்பட்டதுமான ஓர் வார்த்தையைக்குறித்து முறைப்பாடு செய்தவர். இக்காரியத்தில் பிரவேசிக்க இவருக்கு நியாயம் யாதுமில்லாதிருக்க, இவரிப்படிச்செய்வது நியாயமன்று. அவதூறுமொழிவது நம்தொழிலன்று.

பாளையங்கோட்டை 1880 ம் ஞு அக்ற்ரோபர்மீ 10வ	ஏ. ஞானமுத்துநாடார், கிராட்யூ யேற்று, எஸ். ஜீ. சி, சான்ருேர் பிரதிநிதி. திருநெல்வேலி ஜில்லாக்கோடு.

இதுக்கு சௌந்திரநாயகம்பிள்ளை அவர்கள் பேப்பரில் பதிலில்லை. ஆதலின் பின்வரும்கடிதம் திருவாங்கூர் அபிமானியில்1881ஞு பெப்புருவரிமீ 10வ அச்சிடப்பட்டது.

திருவாங்கூர் அபிமானி எடிற்ற ரவர்களுக்கு:

ஐயா!

சிறிது தினங்களுக்கு முன்னதாகப் பலசிறந்த புஸ்தகங்களடங்கிய சி. எம். எஸ். லைபிரேரி என்ற பிஷப்பு சார்ஜென்றவர்கள் லைபிரேரியைப்பார்க்கும்படி நேரிட்டது. அதைப்போலொத்த ஒன்று திருநெல்வேலி நாடெங்கேனு மிருக்குமென்று நாமெண்ணவில்லை. வெவ்வேருன வித்து வான்களா லெழுதப்பட்ட பல நூல்களங்கே யிருக்கிறது. இவை எல்லாவற்றிலும் விசேஷமாக நமக்குத்தோன்றினது ஏதெனில், பழைய ஓலையேட்டுப்பிரிதி கம்பராமாயணம் ஒன்று அங்கிருந்தது. இதைக்கண்டவுடன் மிகவுஞ் சந்தோஷப்பட்டு, பல ஏடுகளைத்திரும்பி சிராமருடைய பட்டாபிஷேகத்தைப்பற்றிச் சொல்லுகிற திருவபிஷேகப்படலத்தைப்பார்வையிட்டோம். இப்படலத்தில் ஓர்விர்த்தத்தில்

நாலு ஜாதிப்பேரும் காட்டியிருக்கிறதென்றும், அச்சுப் பிரதிகளில் அவைகளை விட்டுவிட்டனரென்றும் கேள்விப்பட்டிருந்தோம். இதைநாம் அங்கேகண்டோம். மேற்படி ஏட்டின் 194-ம் பக்கத்தில் 15-ம் கவியாக அது நிற்கிறது. இதைமிகவும் வருத்தப்பட்டுப் பிரயாசத்தோடு வாசித்தோம். அந்தப்புஸ்தகத்தைக்கொஞ்சம் குறையப் பூச்சி யறித்துப்போட்டது. இந்த விர்த்தத்திலும் இரண்டொரு எழுத்துகளில்லை.

அக்கவி வருமாறு.—

"அந்தணர்வணிகர் வெள்ளாண் மரபினராவிநாட்டு
சந்தணிபுயத்துவள்ளல் சங்கரனனையசான்றே
ருந்தனமடியமே × × × முவகையருவரிநாண
வந்தனரிராமன்கோயில் மங்கலத் துரிமைமாக்கள்."

இதில் ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகத்துக்கு அந்தணரென்ற பிராமணரும், சங்கரனனைய சான்றேரென்றசத்திரியரும், வணிகரென்றவைசியரும், வெள்ளாண் மரபினரென்ற சூத்திரரும் வந்திருந்ததாகச் சொல்லியிருக்கிறது.

இதனால் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன.

முதலாவது.—தமிழருள் நாலு சுத்தசாதிகளுக்கும் அந்தணரென்றும், சான்றேரென்றும், வணிகரென்றும், வெள்ளாளரென்றும் பேர். ஆதலின் செய்யுள் தமிழ் அகராதியாகிய திவாகரப்படிக்கு அந்தணர், வணிகர், வெள்ளாளர் என்ற தமிழ்வார்த்தைகள் சமஸ்கிருதப்பதங்களாகிய பிராமணர், வைசியர், சூத்திரரென்றவைகளுக்குப்பதிலாக முறையே இப்பாட்டில் அமைந்திருக்கிறபடியால், சான்றோரென்ற தமிழ்வார்த்தையும் சமஸ்கிருதப் பதமாகிய சத்திரியரென்றவார்த்தையின் அர்த்தமாகவே யிருக்கிறதென்று ருசுவாகிறது. இராமாயணத்திலும், வேறுபலதமிழ் நூல்களிலும் இது போலொத்ததாய் வருகிற அநேககவிகளால் இதுஸ்தாபிக்

கப்படுகிறது. சாமியல் சர்க்குணர் நாடாரவர்களியற்றிய "திராவிடச்சத்திரியர்" என்னும் நூலைப்பார்க்க.

கவனிப்பு:—இக்கவியில் நூலாசிறியர் சான்றோரைச்சிவபிரானுக்கு ஒப்பிட்டு ஓர் அடைவாசகத்தைக்கொண்டு பேசுவதால், மேற்படி திவாகரத்திலே வணிகரும், வெள்ளாளரும், 3-வது 4-வது ஜாதியாய் நிற்கிறார்களென்றவரறிந்துகொண்டு, அடைகள் தேவையிராத மற்ற மூன்று ஜாதிப்பேர்களுக்கும் கடைசியில் சான்றோர் ஜாதிப்பேரை அமைத்திருக்கின்றனர்.

இரண்டாவது:—நாம், &c மூன்னே திருவாங்கூர் அபிமானி 1880ம் ௵ மார்ச்சு௴ 10ம்வ, ஏப்பிரல் ௴ 20ம்வ, மே௴ 1ம்வ, சூன்௴ 1ம்வ, சூலை௴ 20வ, செப்டெம்பர்௴ 10ம்வ, டிசம்பர் ௴ 10ம்வ, போட்டபேபர்களில் சாஸ்திரப்பிரகாரமாக ரூபித்திருக்கிறபடி, சாணார், சான்றோர் என்னும் வார்த்தைகளின்திரிபு. ஆதலின், இக்காலத்தில்யாவர் சாணரென்றபேராலழைக்கக்கப்படுகின்றனரோ அவரே அச்சத்திரிய குலத்தவரென்பது ஆட்சேபனையின்றிருசுவாகிறது. ஏனென்றால், மேலே நாம் காட்டியபடி "சத்திரியர்" என்ற சமஸ்கிருத வார்த்தைக்கு தமிழ்வார்த்தை "சானறார்", அல்லது "சான்றோர்".

மூன்றாவது:—இதை எல்லா இயூரோப்பியரும், முக்கியமாய் பிஷப் கால்டுவேலவர்களுங் கவனிக்கவேண்டியது. ஏனெனில், அவர்கள் சான்றோர் குலத்தவரில் பலர் கிறிஸ்துமார்க்கத்திலமைந்தநிமித்தியம் தம்மிஷ்டப்பிரகாரம் அவரைத் தாழ்ந்த ஜாதியென, தம் லைபிரேரியிலிருக்கிற நூலையும் கவனியாது கூறியிருக்கின்றனர்.

நாலாவது:—இப்போது சென்சஸ் என்ற குடிமதிப்புக்கணக்கு எடுக்கிறவர்களு மிதைக் கவனிக்கவேண்டியது. அவர்கள் இந்துக்களான சாணர் தம்பேரைத்த

மிழ் சத்திரியரென்ருவது, சான்ருரென்ருவது எழுத இடங்கொடுக்கவேண்டியது. சான்ருரென்பது இச் சாதிப்பேரென மதிராஸ் இயூனிவெர் சிற்றியார் ஒப்புக் கொண் டிருக்கின்றனர்.

ஐந்தாவது:—திருநெல்வேலி ஜில்லா வின்கண் ஜாதி நடபடிக்கையின்னதென்று அறியவிரும்புவரெல்லாரும், தமிழர் நூல்களில் நாலுவர்ணத்தவருக்கு முரிய சமஸ்கிருதப்பேர்கள் கிடையாதென்றும், அவைகளில் அவரவர் குணங்களுக்கிசைய தமிழ்பேர்களுற் பத்தி செய்திருக்கின்றனரெனவும், ஜாதியைப் பற்றி யறிய வேண்டுபவர் தமிழ் நூல்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமெனவும், இவைகளிலும் ஆதிகாலத்து ஓலைப் பிரதிகள் சிரேஷ்டம் எனவும், நும்பத்திரிகை மூலமா யறிவித்துக்கொள்ளுகிருேம்.

பாளையங்கோட்டை
1881 ம் ஷ
பிப்ரவரிமீ
2உ.

ஏ. ஞானமுத்துநாடார்,
கிராட்யூயேற்று, எஸ். ஜீ. சீ,
சான்ருேர் பிரதிநிதி.
திருநெல்வேலி ஜில்லாக்கோடு.

அநுபந்தம்-D.

சான்றோர்பிரதிநிதி ஏ. ஞானமுத்து நாடாராகிய நாமும், சான்றோர் குலத்தவரும் பிஷப் கால்டுவேலுக்குவிரோதமாகச் சீமையிலுள்ள அதிகாரிகளுக்கும் பிரபுக்களுக்கும் எழுதியபிராது முதலியவற்றின் நடபடிக்கை.

லண்டன் எஸ். பி.ஜி ஓம் கமிட்டிச் செகிரட்டேரியாரவர்களாகிய H. W. டக்கர் M. A. ஐயரவர்களுக்கு:— மெட்ராஸ் பிஷப்பைச்சார்ந்த சர்ச்சு ஆப் இங்கிலாந்துக்குட்பட்ட சான்றோர்குலக்கிறிஸ்தவர்கள் அடியில்கை யெழுத்து வைத்தோர் எழுதிக்கொள்ளுவ தென்னவென்றால்,

பின்வருவனவறறைத் தாங்கள் கவனத்தோடு வாசிப்பீர்களென்று தாழ்மையாய்க்கேட்டுக் கொள்ளுகிறோம்.

1 கிறிஸ்துமார்க்கம் முதலாவது இத்தேசத்தில்வந்தபோது, சான்றோர் ஒருவரும் அம்மார்க்கத்தை யேற்றுக்கொள்ள எற்படவில்லை. முதலாவது, கிறிஸ்துமார்க்கத்தமைந்தவர்கள் பல ஜாதிக்காரராகிய பன்னிரண்டுபேர்.

2. அப்புறம் எறக்குறைய 80 வருஷங்களுக்கு முந்தி, நாசரேதூரிலிருந்து தாவீது என்று பேர்கொண்ட சான்றோர் ஒருவர் தரங்கம்பாடியிலுள்ள சிலகிறிஸ்தவர்களைச் சந்தித்தமையால், கிறிஸ்தவனுகிதம்மினத்தாரிடம் வந்து சேர, அவர்களிவரை நிந்தித்துத்துன்பப்படுத்தித் துரத்தினார்கள். ஆனாலும், அவர் அம்மார்க்கத்தில் உறுதியாய் நிலைத்திருந்து, இப்போது தெற்கு முதலூராகியிருக்கிற இடத்தில் தனிமையாய்க் குடியேறி, தேவ கிருபையால், அதிசயமான வகையாய் ஆசீர்வதிக்கப் பட்டுவருகிறசான்றோர் குலத்தவ ரமைந்திருக்கிற, திருச்சபைக்கு மூலபுருஷனானார்.

3. சாணர் கிறிஸ்து மார்க்கத்தமைந்தது, சிலர் சொல்லுகிறபடி, அவர்களுக்குவேறு மார்க்கமில்லாத தினலல்ல, அல்லது பாதிரிமார் அவர்களுக்கு அன்ன வஸ்திரங் கொடுத்துக்காப்பாற்றுவார்களென்ற நோக்க கத்தினுலுமல்ல; (அவர்கள் சாப்பாட்டுக்குப் போதுமா ன ஸ்திதியுள்ளவர்களும், மற்றவர்களிடத்தில் யாசகம் வாங்கும் வழக்கத்தை வெறுக்கிறவர்களுமாயிருக்கிறார் கள்); ஆனல் அவர்கள் ஜாதியேற்பாட்டின் தன்மையா ல் அப்படி நடந்தது. எப்படியெனில், தங்கிராமத் தின் நாட்டாண்மைக்காரன் கிறிஸ்துமார்க்கத்தின் சத் தியத்தை உண்மையெனவறிந்து ஏற்றுக்கொண்டவனு னல், அவ்வூரார் முழுமையும் அம்மார்க்கத்தையேற்று க்கொள்ளத்தடை யிருக்கமாட்டாது. மேலும், அவர் கள் அங்கிலேயர் இவ்விடத்திற்குவந்தபோது, துலுக் கர் நாயக்கர் முதலிய மற்றும் ஜாதிகளுடைய ஒடு க்குதலிலிருந்து தங்களுக்கு உதவிபுரிய வந்தவர்களெ ன்றெண்ணினபடியால், அவர்கள் மார்க்கத்தையும் இக் குலத்தவரில் பலர் அனுசரிக்கும்படி நேரிட்டது.

4. பிஷப்கால்டுவேல் இந்தியாவுக்கு வந்தபோது, அவர்தாமே தம்புஸ்தகத்தி லொப்புக்கொள்ளுகிறபடி, சற்று கீழ்த்தரமாகக் காணப்பட்ட சான்றோர் குலத்தவ ருள் வந்து குடியிருந்தனர். ஆதலின், தனக்குச்சமீப த்திலிருக்கும் சான்றோருடைய நிலையே இக்குலத்தவ ரெல்லாருடைய நிலையுமென உத்தேசித்து, சான்றோ ர் குலத்தவருடைய பூர்வோத்திரம் உற்பத்தி, இன்ன தென்று தமக்குத்தெரியாதென ஒப்புக்கொண்டும், "தி ருநெல்வேலிச்சாணர்" என ஒரு புஸ்தகத்தை வரை ந்து அக்குலத்தவரெல்லாரையும் ஒருங்கே நிந்தித்திரு க்கின்றனர்.

5. இப்புஸ்தகம் இங்கிலாந்தில் பிரபல்யமாயிருப்ப தால், திருநெல்வேலியில் "கிறிஸ்து மார்க்கத்தை யனு சரித்தவர்களைக்குறித்து, அத்தேசத்திலுள்ளோர் மிகவு

ம் கேவலமாயெண்ணும்படி நேரிட்டதுமன்றி, அப்புஸ்தகத்தை வாசித்தவரெவரும், சான்றோர்குலத்தவரைப்பாராதிருப்பினும், அவர்களின்னாரென்று அறியாதிருப்பினும், அவர்கள் ஆரியரன்றென்றும், இந்துக்களன்றென்றும் எழுதப்புகுந்தனர். பிஷப்கால்டுவேலும் தாமிப்போது இச்சனங்களுக்குச்செய்த அநியாயம் பெரிதெனக் காண்கிறார். ஆனால், அது இப்போது அவரால் தடுக்கக்கூடியதாயில்லை. ஆதலின், அவர் அப்புஸ்தகத்தை ரத்துச்செய்யவேண்டியதுகடமை.

6. பிஷப்கால்டுவேல் எழுதிய இப்புஸ்தகம் திருநெல்வேலியில் இப்போதிருக்கிற சபைப்பிரிவினைக்கு ஒருயேதுவாயிருந்தது. பிஷப்பு இதை அங்கீகரிக்கவருத்தப்படுவார்போலும். இந்து மதத்தவராகிய சாணார் கிறிஸ்து மார்க்கத்தை யனுசரிக்க இது பெரிய தடையாயிருக்கிறது. அவர்களை அனவசியமாய் இப்பிஷப் குற்றங்கூறியிருக்கின்றனர். இப்பிஷப்பைப் பார்த்து அக்குலத்தவரை பின்னும் பலருங் குறை கூறுகின்றனர். டாக்டர் W. W. அண்டர், டாக்டர் மல்லென்ஸ், இவர்களிக்குலத்தவரைக்கண்ணாற் பார்த்தவர்களுமல்லர். பிஷப்கால்டுவேல் எழுதிய புஸ்தகத்தை வைத்துக்கொண்டே இப்படிக்குறைகூற ஏற்பட்டார்.

7. பிஷப்பெழுதிய இப்புஸ்தகத்தால் எக்குலத்தவர்களுக்குள்ளும் ஜாதி வித்தியாசம் அதிக மாய்ப் பெலன்கொண்டது. இயூரோப்பியப்பாதிரிமாரே ஜாதிவித்தியாசத்துக்குக்கைகொடுக்கும்போது, நாமப்படிச்செய்வது தப்பிதமோ என்கின்றனர்.

8. இங்கிலாந்திலுள்ள இயூரோப்பியர் இக்குலத்தவர் கிறிஸ்து மார்க்கத்துக்கு வருவது விரும்பாரெனின், அதைத்தெளிவாய்ச்சொல்லலாமே. ஆனாலிப்படி அ

வரைத் தூஷிப்பது அங்கிலேய ஜாதிப்பெருமைக்கடு த்ததல்ல.

9. பிஷப்கால்டுவேல் கிறிஸ்துமார்க்கக்குருவாதலின், எங்கள்மார்க்கத்துக்கடுத்த புஸ்தகங்களையும், பக்தி விருத்திக் கடுத்தவைகளையும், எழுதித்தருவாரென்றெண்ணியிருந்தோம். ஆனால், எங்களை ஆதரிக்கவேண்டியவரே எங்களைத்தூஷிக்கப்புறப்பட்டதும், எங்களினத்தவரான மற்றவரும் எங்களை தூஷிக்க இடம்பண்ணினதும், எங்களுக்கு மகாமனவருத்தமாயிருக்கிறது.

10. நாங்கள் முதலாவது கிறிஸ்து மார்க்கத்தமைந்தபோது, ஜாதி வித்தியாசத்தைவிட்டவர்களாய், எங்களுக்கு கீழ்ஜாதியென்னப்படுகின்றவர்களையும் எங்கள் சகோதரராகப் பாவித்தோம். ஆனால், பிஷப்பு முதலியவர்க ளிப்படி எழுதுவதால், நாங்கள் எங்கள் ஜாதியேற்பாட்டைத் திரும்பவும் எடுத்துக்கட்டவேண்டியதாகிறது.

ஆகையால், அடியில் கையெழுத்து வைத்திருக்கும் சான்றோர்க்கிறிஸ்தவக் கூட்டத்தார், பிஷப்புக்கால்டுவேல் தாஞ்செய்த தீமைகளையெல்லாம் நிவிர்த்திசெய்யும்படி அவரைக்கண்டிப்பாயுத்திரவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறும். அவர் அப்படிச்செய்யாது எங்கள் நடுவில் வருவாரென்றால், மதபேதகங்களும், சபைக்குழப்பங்களும், நேரில் சண்டையும், இங்கிலாந்துச்சபையைவிட்டு வேறு சபையில் சேருவதும் உண்டாகும்.

1883ஞு மேய்மீ 19உ பாளையங்கோட்டை.

ரெவரண்டு H. W. டக்கர் M. A. ஐயரவர்களுக்கு:—
அடியில் கையெழுத்துவைத்திருக்கும் இந்து மதச்சான்றோர் குலத்தவர் எழுதிக்கொள்ளுகிற தென்னவென்றால்,

வெறும் மங்கலாயும், அது குறிப்பற்றதாயுமிருக்கும். ஆனால் அதை ஓர்இழந்துபோன ராஜ்யசம்பந்தமாகவும் திரும்பப்பெற்றுக் கொள்ளயிருக்கிற ராஜ்யசம்பந்தமாகவும் கவனித்தால், சாத்தானுடைய சோதனையிலிருக்கிற அர்த்தமும், சோதனையின் கொடூரமுந்தோன்றும். சாத்தான் இவ்வுலகத்துக்கு அநுபவ (De'facto') ப்படிகர்த்தா. கிறிஸ்து இவ்வுலகத்துக்கு நீதி (De'jure') ப்படி கர்த்தா. கிறிஸ்து அவ்விராஜ்யத்தை எந்தவிதமாய்த் திரும்பப் பெற்றுக்கொள்ளயிருக்கிறா ரென்பதைச்சாத்தான்திட்டமாயறிந் திருந்தான். அதாவது, மானபங்கத்தினாலும் மாணத்தினாலும். சாத்தான்கிறிஸ்து விடத்தில்சொல்லுகிறான்: நீர் ராஜ்யத்தைத் திரும்பப்பெற்றுக் கொள்ளும்படிமானபங்கத்தையும் மரணத்தையும் அடையவேண்டியதில்லை; நீர்மாத்திரம் என்னைக்கீழே விழுந்து ஒருகும்பிடுபோடும்; நான் இவ்விராஜ்யமுழுவதையும் விட்டுவிடுகிறேன்; நீர் அதைப்பெற்றுக்கொள்ளும்என்கிறான். இதுமகாகொடிதானசோதனை. ஏனென்றால், நாமறிவோம்: கிறிஸ்து மெய்யானமனிதனாயிருந்தார். அவர்மனிதனாக, தாமடையவேண்டிய மரணபாடுகளின் வேதனைகளையும், மானபங்கத்தின் வருத்தத்தையும் சகிக்கக்கூடாமலிருந்தார். திருஷ்டாந்தமாய் அவர் கெத்சேமநேத்தோட்டத்தில், "என்ஆத்துமாமரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" (மத். 26: 38) என்றும், "என்பிதாவே, இந்தப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படிசெய்யும்" (மத். 26: 30) என்று சொன்னார்.

(2) அடியில்வரும் வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம். அவைகள் இவ்விராஜ்யசம்பந்தமாய்க் கவனித்தால்மட்டுமே அவைகளின் உள்ளபடியான கருத்தும் அவைகளின் அலங்கிர்தமும் நமக்குத்தெரிகிறது. "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின, அவர்

சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார்'' வெளி 11: 15. அதன் பிந்திய வாக்கியங்களும், வெளிப்படுதல் 20ம் அதிகாரமும் பார்க்க. "அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தரிருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்''. சக. 14: 9. அதன் 7—11 வரை வாக்கியங்களும் பார்க்க. இவ்வாக்கியங்களைச் சாதாரணமாய் ஞானக்கருத்துள்ளவையென் றெண்ணிக்கொண்டு, கிறிஸ்து உலகத்தில் வந்தாரென்றும், அவர் தமது பாடுகளினால் நியாயப் பிரமாணத்திற்குத் திருப்தி செய்தாரென்றும், ஆனதினால் அவர் கனத்திற்குப் பாத்திரராயிருக்கிறாரென்றும் அர்த்தம்பண்ணக்கூடாது. அவர் தமது சிலுவையின்மூலமாய் தமது கிரீடத்தைச்சம்பாதித்தார். அவருடைய பாடுகளும், மானபங்கமும் மரணமும் நடந்த இடம் பூமியாயிருந்ததுபோல, அதிலும் விசேஷமாய் எருசலேமாயிருந்ததுபோல, அவருடைய ஜெயமும், மகிமையும் பூமியிலேயே, அதிலும் விசேஷமாய் எருசலேமிலேயே உண்டாகும். அவர் சிலுவையில் அறையுண்ட இடமான எருசலேமே, அவர் சிங்காசனம் வைக்கப்படும் இடமாயிருக்கவேண்டும். "அக்காலத்திலே எருசலேமை கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்; சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள்''. எரே. 3: 17. அதன் 14—17 வரை வாக்கியங்களும் பார்க்க. "நான் என்னுடைய பருவதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணிவைத்தேன் என்றார்'' என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். சங். 2: 6.

(3) புதிய ஏற்பாட்டின் அநேக உவமைகளை எடுத்துக்கொள்வோம். அவைகள் ஓர் ராஜ்யசம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதை நாம் மனதில்வைத்துக்கொண்டு அவைகளைத் தாற்பரியம்பண்ணுதபட்ச

...யில், அவைகளின்சரியான கருத்தை நாம் அறிந்து கொள்ளமாட்டோம். திருஷ்டாந்தமாய்: பிரபுவின் உவமையைக் கவனிப்போம். லூக். 19: 12-28. அவன் ஓர் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வரும்படி ஓர் தூரமான தேசத்திற்குப் போனான். அக்காலத்தில் சிற்றரசர்கள் ரோமாபுரிக்குப் போய், அவ்விடத்தில் ரோமராயனிடமிருந்து, தங்கள் ராஜரீகப்பட்டத்தையும் அதன் அதிகாரத்தையும் பெற்றுவருவது வழக்கமாயிருந்தது. திருஷ்டாந்தமாய்: ஏரோதேரோமாபுரிக்குப்போய், அவ்விடத்தில் சீஸர் ராயனிடமிருந்து, தன் ராஜரீகப்பட்டத்தையும், அதன் அதிகாரத்தையும் பெற்றுவந்து யூதேயாவில் அரசாண்டான். கிறிஸ்து இவ்வுவமையைத் தமக்குக் கருதி அதை உருமாற்றிச் சொன்னார். அவர் தாம் பிதாவினிடமிருந்து தமது ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி, பூமியிலிருந்து தூரமான வானலோகத்திற்குப்போயிருக்கிறார். அவர் திரும்ப இவ்விடம் வந்து அதைக்கொண்டு அரசாள்வார். இவ்விராஜ்யம் ரண்டுபெங்குகள் உள்ளது. 1. இப்போதிருக்கிற கிருபையின் ராஜ்யம். அது நாளதில் நமதிருதயத்தில் நடந்துவருகிறது. 2. இனிமேல் வரும் மகிமையின் ராஜ்யம். இவைகள் ரண்டும் பிரத்தியேகமான ராஜ்யங்களல்ல. ஒன்று ஆரம்பம், மற்றது முடிவு. கிருபையின் ராஜ்யம் மொட்டுப்பூவிலிருக்கிற மகிமையாயும், மகிமையின் ராஜ்யம் விரிந்த பூவிலிருக்கிற கிருபையாயுமிருக்கிறது. கிருபையின் ராஜ்யம் "நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரம்," அதாவது மகிமையின் ராஜ்யத்துக்கு ஈடும் முன்னுணர்ச்சியுமாயிருக்கிறதென்று வேதம் விளம்புகிறது. எபே. 1: 14. 2 கொ. 1: 22. ஆதலின் அது மனிதனுடைய பூராவான பரிசுத்த நிலமைக்கும், அவனுடைய பூராவான பாக்கிய நிலமைக்கும், அவன் பூராவாய்த் தேவ சமுகத்தைப்பெற்றிருக்கும் நிலமைக்கும் வருவதாகமட்டுமிருக்கிறது. மனிதன் பூமியிலிருக்கும்போது, இனித் தான் பெற்றுக்கொண்

ளப்போகிற மகிமையின் நிலமைக்குநிச்சயமாக, அவனி ந்தப் பாக்கியமான நிலமைகளை அட்வான்ஸாகப் பெற் றுக்கொள்ளுகிறான். ஆதலின் அவன் இங்கிருக்கையி லேயே பாக்கியமும் பரிசுத்தமுமுள்ளவனாகிறான். இது அடியில் வரும் வாக்கியங்கள்போலொத்தவைகளின் தாற்பரியத்தைத் தெரிவிக்கிறது. "நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" எபே. 4: 30. "பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறுஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" ரோ. 8: 17. ஆம் திருச்சபை ஓர் ராஜ்யம்: கிறிஸ்து அதன் ராஜா: அவருடைய பிரமாணங்கள் அவர் கொடுக்குஞ் சட்டங்களாயிருக்கின்றன.

III. பிரிவு.

இரக்ஷிப்பின் பிளான் வெளிப்படுத்தப்படல்.

இரக்ஷிப்பின் பிளான், அதாவது கிருபை உடன்படிக்கையைத் தேவன் படிப்படியாய், அநேகமான வெளிப்படுத்தல்களால், பழைய ஏற்பாட்டின்காலத்தில் வெளிப்படுத்திவந்தார். அவைகளில்,

1. முதலாவது வெளிப்படுத்தல் நமது ஆதித்தாய் தந்தையர்க்குண்டானது. ஆதி 3: 15. ஒத்துப்பார்.

2. அடுத்தவெளிப்படுத்தல் முதலாவது ஏற்படுத்தப்பட்டபலியில் உண்டானது. ஆதி. 3: 21. சங். 32: 1. ஒத்துப்பார், "மூடப்படுதல்" கிறிஸ்துவின்மரண புண்ணியத்தினால், அல்லது கிறிஸ்துவின் நீதியின்வஸ்திரத்தினால் மூடப்படுதல்.

3. அடுத்தவெளிப்படுத்தல் ஏனோக்கின் தீர்க்கதரிசனத்தில் உண்டானது. யூதா. வா. 14-15. ஆதி. 5: 22. ஒத்துப்பார்.

4. அடுத்த வெளிப்படுத்தல் நோவாவுக்கு உண்டானது. 1 பே. 3: 19-21. ஆதி. 9: 8-17. ஒத்துப்பார்.

5. அடுத்தவெளிப்படுத்தல் ஆபிரகாமுக்கு உண்டானது. அது அவனுக்குநாலுதடவை உண்டானது. (1) ஆதி. 12: 13. கலா. 3: 7, 8, 16. (2) ஆதி. 15: 3-5, 18. (3) ஆதி 17 ம் அதிகாரம். (4) ஆதி. 22. 12-18. எபி. 6: 13-14. ரோ. 4: 2-3, 12. ஒத்துப்பார்.

6. அடுத்தவெளிப்படுத்தல் ஈசாக்குக்கு உண்டானது.

7. அடுத்தவெளிப்படுத்தல் யாக்கோபுக்கு உண்டானது. அதுஅவனுக்கு மூன்றுதடவை உண்டானது.(1) ஆதி. 28: 12-15. யோ. 1: 51. (2) ஆதி. 32: 26. (3) 49: 10. ஒத்துப்பார்.

8. அடுத்தவெளிப்படுத்தல்யோசப்பில் உண்டானது. இது உபமானமானது (Allegorical one).

9. அடுத்தவெளிப்படுத்தல் மோசேக்கு உண்டானது. உபா. 18: 18. அப். 3: 22. ஒத்துப்பார். அவனுக்குஅது நியாயப்பிரமாணத்திலும்உண்டானது. (1) துரைத்தனப் பிரமாணத்தில். (2) சன்மார்க்கப் பிரமாணத்தில். (3) சடங்குப்பிரமாணத்தில்.

சடங்குப்பிரமாணத்தினுள்:—

1-வது. சடங்குகள்நடத்தப்பட்ட இடத்தில், அதாவது தெய்வாலயக்கூடாரத்தில், அல்லது தெய்வாலயத்தில். அவைகளின் பிரகாரங்களான (1) பரிசுத்தத்திற்குப் பரிசுத்தஸ்தலத்தில், (2) பரிசுத்தஸ்தலத்தில், (3) ஆசாரியர் பிரகாரத்தில், (4) ஜனங்களின் பிரகாரத்தில்.

2-வது. சடங்குகள் நடத்தப்பட்ட ஜாமான்களில். அதாவது (1) பரிசுத்தத்திற்குப்பரிசுத்தஸ்தலத்திலுள்ள (a) உடன்படிக்கைப் பெட்டியில், (b) மன்னுவின்பானையில், (c) உடன்படிக்கையின் ரண்டு கற்பலகைகளிலு, (d) கிருபாசனத்தில், (e) சேராபீன்களின்ரண்டு

சிலைகளில், (f) செக்கைனுவில். (2) பரிஸ்தஸ்தலத்தி லுள்ள (a) தூபப்பீடத்தில், (b) பரிசுத்த அப்பங்களின் மேசையில், (c) குத்துவிளக்கில். (3) ஆசாரியர் பிரகா ரத்திலுள்ள (a) வெண்கலத்தகனப் பலிப்பீடத்தில், (b) தொட்டியில்.

3-வது. சடங்குகளை நடத்தின பரிசுத்தமனிதரில்: அதாவது (1) பிரதான ஆசாரியனில், (2) ஆசாரியனில், (3) லேவியரில் (4) பிரதான ஆசாரியனின் உடைகளி ல். அதாவது, (a) பாகையில், (b) மார்ப்பதக்கத்தில், (c) ஏபோத்தில், (d) அங்கியில், (e) உள்சட்டையில், (f) இடைக்கச்சையில், (g) இரண்டுதோள்களின் பேரி லும் வைக்கப்பட்டிருந்தரண்டுகெற்களில், (h) மார்ப்பத க்கத்தில் வைக்கப்பட்டிருந்த பன்னிரண்டு கற்களில், (i) மார்ப்பதக்கத்திலிருந்த யூரீம்தம்மீம் என்ற ரண்டுகெற் களில், (j) பாகையின் முகப்பிலிருந்த பொன்பட்ட த்தில்.

4-வது. சடங்குமுறைகளில் செலுத்தப்பட்டபலிக ளில்: அதாவது (1) ஆட்டில், (2) காளையில், (3) புறு வில். இவைகளின் ஞான அர்த்தம் நமதுபுஸ்தகம்பார்.

10. அடுத்த வெளிப்படுதல் தாவீதுக்குண்டானது. (1) சரித்திர ஆகமத்தில்:—2 சாமு. 7ம் அதிகாரம். 23; 1-7. 89ம், 110ம், 13 8ம் சங்கீதங்கள். (2) தீர்க்கத்தரி சன ஆகமத்தில்:—எசா 11: 1-10. எரே. 23 : 5-6. லூக். 1: 32. 23: 42. மத். 22: 42. 2: 2-6. அப். 1: 6. மத். 20: 20-23. லூக். 24: 21. எசா. 55ம் அதிகாரம். சக. 9: 9. 6: 3. ஒத்துப்பார்.

11. அடுத்த வெளிப்படுத்தல் சாலோமோனுக்கு உண்டானது. உன்னதப்பாட்டாகமம். எபே. 5: 25,32. வெளி. 19: 7. 45ம், 6ம், 8ம் சங்கீதங்கள். ஒத்துப்பார்.

12. அடுத்த வெளிப்படுத்தல் தீர்க்கதரிசிகளுக்கு உண்டானது. கிறிஸ்துவேதீர்க்கத்தரிசனத்தின் ஆவியா

னவர். கிறிஸ்துவைப்பற்றியே அவர்கள் தீர்க்கத்தரிச
னங்கள் சொன்னாலும் அவைகளின் அர்த்தத்தை அவர்
கள் அறிந்துகொள்ளாதிருந்தார்கள். 1 பேது. 1: 10,12.
ஒத்துப்பார்.

13. அடுத்ததும் கடைசியுமானவெளிப்படுத்தல் கிறி
துவால் நேராக உண்டானது. எபி 1: 1, 2. யோ. 1:
17-18. ஒத்துப்பார். கிறிஸ்துவாலுண்டான வெளிப்
படுத்தல்கள் தீர்க்கத்தரிசனத்தின் ஆவியாகவேயிருக்கி
ன்றன. அதாவது அதன்பொருளாகவேயிருக்கின்றன.
அதாவது அவரைப்பற்றித் தீர்க்கத்தரிசிகள் முன்னறிவி
த்த பொருளாகவேயிருக்கின்றன.

1-வது. தீர்க்கத்தரிசிகள் கிறிஸ்துவை வெவ்வேறான
நாமங்களினால் வெளிப்படுத்தினார்கள். (1) இம்மானு
வேல். எசா. 7: 14. (2) அதிசயமானவர். 9: 6. (3) ஆ
லோசனைக் கர்த்தர். 9: 6. (4) வல்லமையுள்ள தேவன்.
9: 6. (5) நித்தியபிதா. 9: 6. (6) சமாதானப்பிரபு. 9:6.
(7) ஈசாயின்வேர், 11: 10. (8) எகோவா. 26: 4. 40: 3
(9) மூலைக்கல். 28: 16. (10) நியாயாதிபதி. 33: 22.
(11) நியாயப்பிரமாணிகர். 33: 22. (12) இராஜா.
33: 22. சக. 9: 9. (13) கர்த்தரின் மகிமை. எசா. 40: 5.
(14) இஸ்ரவேலரின் பரிசுத்தம். 41: 14. (15) தாசன்.
42: 1. சக. 3: 8. (16) தேவன் தெரிந்துகொண்டவர்.
எசா. 42: 1. (17) கர்த்தரின் புயம். 51: 9. 53: 1. (18)
சாட்சி. 55: 4.(19)தலைவர். 55: 4. (20) அதிபதி. 55:4.
(21) மீட்பர். 59: 20. 60: 16. (22) இயாக்கோபின்
வல்லவர். 60: 16. (23) தேவ சமுகத்தின் தூதன். 63:9.
(24) தாவீதின் கிளை. எரே. 23: 5. (25) நமது நீதியா
யிருக்கிற கர்த்தர். 23: 6. 33: 16. (26) தாவீது. 30: 9.
எசே. 34: 23. ஓசி. 3: 5. (27) மேய்ப்பன். எசே. 34:
23. 37: 24. சக. 11: 16. 13: 17. (28) கீர்த்திபொருந்
திய நாற்று. எசே. 34: 29.(29) மேசியா. தானி. 9: 25.
(30) தடைகளை நீக்கிப்போடுகிறவர். மீகா. 2: 13. (31)

இஸ்ரவேலரின் நியாயாதிபதி. 5: 1. (32) இஸ்ரவேலை ஆளப்போகிறவர். 5: 2. (33) சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர். ஆகா. 2: 7. (34) கிளை. சக. 3: 8. 6: 12. (35) ஊற்று. 13: 1. (36) தேவனுடைய தோழன்.3: 7. (37) உடன்படிக்கையின் தூதன். மல். 3: 1. (38) நீதியின் சூரியன். 4: 2. ஒத்துப்பார்.

2-வது. அவர் வருகையை வெளிப்படுத்தினார்கள். தானி. 9: 24-25. ஆகா. 2: 6-9.

3-வது. அவர் வரும் இடத்தை வெளிப்படுத்தினார்கள். மீகா. 5: 2.

4-வது. அவர் வரும்விதத்தை. ஏசா. 7: 14. எரே. 31: 32.

5-வது. அவர் மனித அவதாரமாவதை. ஏசா. 11: 1.

6-வது. அவர் வருகைஸ்நானகனால் அறிவிக்கப்படுவதை. ஏசா. 40: 3-4. மல். 3: 1-4. 5: 6.

7-வது. அவர் பிரசங்க உத்தியோகத்தை. ஏசா. 61: 1-2.

8-வது. அவர் பிரசங்க உத்தியோகம் புறக்கணிக்கப்படுவதை. ஏசா. 6: 9-12.

9-வது. அவர் செய்யும் அற்புதங்களை. ஏசா.35: 5-6.

10-வது. அவர் பாடுகளை. ஏசா. 50: 6. 53: 4-11.

11-வது. அவர் ரண்டு கள்ளர் நடுவில் மரிப்பதை. ஏசா. 53: 9, 12.

12-வது. அவர் மரணத்தையும் அடக்கத்தையும். ஏசா. 53: 9-12.

13-வது. கல்லறையின்பேரில் அவருக்குண்டாயிருந்த ஜெயத்தை. ஏசா. 53: 10-12.

14-வது. யூதர்கள் புறக்கணிக்கப் படுவதை. ஏசா. 65: 2-7.

15-வது. புறஜாதியார் அழைக்கப்படுவதை. ஏசா. 49: 5-12. 65: 1.

16-வது. அவர் ராஜ்யம் விர்த்தி அடைவதையும் பூரணப்படுவதையும். ஏசா. 9: 7. 11: 4-10.

17-வது. அவர் தீர்க்கதரிசன உத்தியோகத்தை. உபா. 18: 15, 18. ஏசா. 42: 1, 6, 7. 49: 1. 55: 4, 5.

18-வது. அவர்ஆசாரியஉத்தியோகத்தை. சங் 110:4. ஏசா. 53: 12. சக. 6: 13.

19-வது. அவர்ராஜரீகஉத்தியோகத்தை. எண், 24:17. சங், 2: 6. ஏசா. 9: 6, 7. எரே 23: 5, 6. தானி, 7: 9. 13: 14. ஓசி. 3: 5. சக. 9: 9. 14: 9.

20-வது. அவர்மத்தியஸ்த வேலையை. ஏசா. 53-ம் அதிகாரம்.

21-வது. விசுவாசத்தினாலுண்டாகும்ரக்ஷிப்பின்பிளானை. ஏசா 8: 14, 15. 28: 16. ஆபகூ. 2: 4. ஒத்துப்பார்.

IV. பிரிவு.

இரட்சிப்புக்கிறிஸ்துவால் நிறைவேற்றப்படுதல்.

இதில்நாலு காரியங்கள் கவனிக்கப்படவேண்டியது. 4-வது காரியமே இப்பிரிவுக்குச் சம்பந்தப்பட்டது. முதல்மூன்றும் 4-வதுக்கு அடைகளாகவந்தது. 1. கிறிஸ்துவின் பர்சன். 2. அவர் வந்த காலம். 3. அவர் வந்த விதம் 4. அவர் உத்தியோகம்.

1. கிறிஸ்துவின் பர்சன். இதில்,

1-வது கிறிஸ்துதேவன். (1) அவரை நேராகத் தேவனென்றழைக்கிற வாக்கியங்களால்: (a) ஏசா. 9: 6. (b) ஓசி. 1: 7. (c) ரோ. 9: 5. (d) யோ. 1: 1. (e)

ஏசா. 7: 14. (f) வெளி 19: 16. (g) 1 கொ. 15: 47. (h) அப். 10: 36. (i) அப். 20: 28. (j) 1 தீமோ. 1: 16. ஒத்துப்பார். (2) அவரைத்தேவனென்று குறிப்பிக்கிற, அதாவது அர்த்தங் கொள்ளுகிற வாக்கியங்களால்: (a) ஏசா. 6:1. இதை யோ. 12: 41. ஒடு ஒத்துப்பார். (b) ஏசா, 44: 6. இதை வெளி. 1: 17 கொளோ. 1: 17 களோடு ஒத்துப்பார். (c) ஏசா. 48: 12-16. இதை வெளி. 22: 13 ஒடு ஒத்துப்பார். (d) சக 13: 7. இதை பிலி. 2: 6. மத். 26: 63-67களோடு, ஒத்தும்பார். (3) தேவனுக்கே உரிய நாமங்கள் அவருக்கு வழங்கப்படுவதால்: (a) எகோவா. ஏசா. 40: 3. மத் 3: 3. (b) மகிமையின் எகோவா. சங். 24: 7-10. (c) நமது நீதியாயிருக்கிற எகோவா. எரே. 23: 6. (d) எல்லாரிலும் மேலான எகோவா. சங். 97: 9. யோ, 3: 31. (e) ஆதியாயும் அந்தமாயுமிருக்கிற எகோவா. ஏசா. 44: 6. (f) சேனைகளின் எகோவா. ஏசா. 6: 1-3. சங். 24: 10. (g) இராஜாக்களின்ராஜாவும் கர்த்தாக்களின் கர்த்தாவுமானவர். தானி. 10: 17. வெளி. 17: 14. 19: 14. (h) பரிசுத்தமுள்ளவர். 1 சாமு. 2: 2. அப். 3: 14. (i) ஓய்வுநாளின் ஆண்டவர். ஆதி. 2: 3. மத். 12: 8. (j) எல்லாருக்கும் கர்த்தர். அப். 10: 36. ஒத்துப்பார். (4) தெய்வீகலக்ஷணங்கள் அவருக்குச் சொல்லப்படுவதால்: (a) நித்தியர். ஏசா. 9: 6. (b) சர்வவல்லவர். சங். 45. 3. (c) எங்கும் நிறைந்தவர். மத். 18. 20. (d) எல்லாவற்றையும் அறிந்தவர். யோ. 16: 30. (e) இருதயத்தின் சிந்தனைகளை அறிகிறவர். இரா. 8: 39. (f) மாறுதவர். மல். 3: 6. (g) பாவங்களை மன்னிக்கும் அதிகாரமுடையவர். கொளோ. 3: 13. (5) தேவனுக்கே உரிய வேலைகள் அவருடையவைகளாகச் சொல்லப்படுவதால்: (a) சிருஷ்டிப்பு. சங். 102: 24-27. (b) காப்பாற்றி ஆதரிக்குதல். நெகே. 9: 6. (c) மரித்தோரை உயிரோடெழுப்புதல். யோ. 5: 21. (d) தம்மைத்தாமே மரணத்திலிருந்து உயிரோடெழுப்பிக்கொள்ளுதல். யோ. 2: 19,

21 (e) நியாதிபதியாயிருக்குதல். பிர. 12: 14. (f) திருச்சபையை மீட்டுக்கொள்ளுதல். வெளி. 5: 9. ஒத்துப் பார். (6) தேவனுக்கே யுரியகனம் அவருக்குக் கொடுக்கப்படுவதால்: (a) பிதாவுக்குரிய கனம் அவருக்குச் சரிசமானமாய்க் கொடுக்கப்பட்டது. யோ. 5: 23. (b) தெய்வீக வணக்கங்கள் அவருக்குச்செலுத்தப்பட்டன. வெளி. 4: 10, 11. ஒத்துப்பார்: (7) அவர் தாமுரைத்த சொந்த வார்த்தைகளால். (a) யோ. 5: 17, 18. (b) 5: 23. (c) 10: 30, 38. (d) 12: 45. (e) 14: 7-10. (f) 14: 16 ஒடு. 15: 26. (g) 16: 15. (h) 17: 10. ஒத்துப்பார்.

2-வது. அவர்மனிதன் (1) கன்னிமரியாளின் கற்பத்தில் உற்பவித்ததால்: மத். 1: 18. லூக். 1: 31. (2) பிறந்ததால்: மத். 1: 16, 22, 25. லூக். 2: 7-11. (3) மாமிஷமும் ரத்தமுமுடையவராயிருந்ததால்: யோ. 1: 14. எபி. 2: 14. (4) மனித ஆத்துமாவை உடையவராயிருந்ததால்: மத். 26:38. லூ. 23: 46. அப். 2: 31. (5) சுன்னத்தடைந்ததால்: லூ. 2: 21. (6) ஞானத்திலும் வளர்த்தியிலும் விர்த்தி அடைந்ததால்: லூ. 2: 52. (7) கண்ணீர் விட்டதால்: லூ. 19: 44. யோ. 11 : 35. (8) பசியாயிருந்ததால்: மத். 4: 2. 21: 18. (9) தாகமாயிருந்ததால்: யோ. 4: 8. 19: 28. (10) தூங்கினதால்: மத். 8: 24: மா. 4: 38. (11) இளைத்துப்போனதால்: யோ. 4: 6. (12) துக்கப்பட்டதால்: எசா. 53: 3, 4. லூ. 22: 44. யோ. 11: 33; 12: 27. (13) குட்டுப்பட்டதால்: மத். 26: 67. லூ. 22: 64. (14) இகழ்ச்சியடைந்ததால்: லூ. 23: 11. (15) வாரால் அடிக்கப்பட்டதால். மத். 27: 26. யோ. 19: 1. (16) சிலுவையில் ஆணிகளால் கடாவப்பட்டதால்: சங். 22: 16 ஒடு லூ. 23: 33. (17) மரணமடைந்ததால்: யோ. 19: 30. (18) விலாவில் குத்துப்பட்டதால்: யோ. 19: 34. (19) அடக்கம் பண்ணப்பட்டதால்: மத். 27: 59, 60. மா. 15: 46. (20) உயிரோடெழுந்ததால: அப். 3: 15. 2 தீமோ. 2: 8. (21) பாவந்தவிர மற்றெல்லாவற்

றிலும் நம்மைப்போலிருந்ததால்: அப். 3: 22. பிலி. 2: 7, 8. எபி. 2: 17. (22) ஐம்புலன்களாலும் அறியப்பட்டவராயிருந்ததால்: லூ. 24: 39. யோ. 20: 27. 1 யோ, 1: 2.

3-வது அவர் தேவமனிதன்.—அவருடைய தெய்வ தன்மையும் மனித தன்மையும் பிரத்தியேகமான ரண்டு வஸ்துக்களாகப் பிரிந்திருந்ததில்லை. இரண்டு தன்மைகளும் ஒன்று சேர்ந்து ஒரே ஆளாகவேயிருந்தது. இந்தச் சேர்க்கைக்கு ஹைப்பாஸ்றறேற் யூனியன் (Hypostate Union) என்பது சாஸ்திரப்பேர். தேவதன்மையும் மனிததன்மையும் ஒன்றோடொன்று கலந்துபோயிருந்தாலும், அவைகள் கலந்து குழம்பிப்போகக்கூடியவைகளாயிருந்ததில்லை யென்பது அதன்பொருள். இந்தச்சேர்க்கை அவர் மனித அவதாரத்தைத் தம்மேல் எடுத்துக்கொண்டபோது, மனித பழுதுகள் அதில் சற்றேனும் கலந்திராதவண்ணமாய் அவரில் உண்டானது. அவர் ஓர் கன்னிகையின் வயிற்றிலிருந்து தோன்றினதினால், நிச்சயமாகவே, அவர் தன்தாயின் சத்திலிருந்து பாவமில்லாத மனுஷீக தேகத்தைப் பெற்றுக்கொண்டார். எபி. 4: 15. இதன் திட்டமான விபரம் அவனசியஸ்விசுவாசப் பிரமாணத்தில் கண்டிருக்கிறது. இதன்விஷயமாய் நாலுவித தப்பறைகள் உண்டு அவைகளினிமித்தம் கூடின நாலு பூர்வீக சங்கங்களுமுண்டு. (1) நிசேயாவின் சங்கம், கி. பி. 325. விரோதி ஆரியர். கூடினது கொனஸ்த்தந்தீன் ராயனால், (2) கொனஸ்த்தந்திபுரியின் சங்கம். கி. பி. 381. விரோதி அப்பாதிநேரியர். கூடினது தியோடிசியஸ்ராயனால். (3) எபேசுவின் சங்கம். கி. பி. 431. விரோதி நெஸ்தோரியர். கூடினது சின்னத்யோடிசியஸ்ராயனால். (4) கால்சிதோன் சங்கம். கி. பி. 451. விரோதி ஐத்திக்கர். கூடினது மார்சியானஸ்ராயனால். அவைகளில், மேலே நாம் கண்ட நாலு விரோதிகளின் நாலு தப்பறைகளை

யும் கண்டிக்கும்படி, நாலு கிரேக்கை வார்த்தைகள் அதனதன் எதிராய் நிறுத்தப்பட்டன. (1) அலீதோஸ் Aleethōs தேவன். = மெய்யானபடி தேவன் (Truly God) - அலீதோஸ் = மெய்யானபடி. தெலெயோஸ் (Teleiōs)மனிதன்.=பூரணமானபடிமனிதன்(Perfectly Man). தெலெயோஸ்=பூரணமானபடி (3) அடியேயி ரற்ரோஸ் (Adiairetōs) ரண்டு தன்மைகள்.=பகுக்கப் படக்கூடாதபடி ரண்டு தன்மைகள் (Indivisibly both natures.) அடியேயிரற்ரோஸ்=பகுக்கப்படக்கூடாதபடி. (4) அசுயின்கியூற்ரோஸ் (Asunchutōs) ஒன் றிலிருதன்மைகள்.=பிரத்தியேகமானபடி ஒன்றிலிருதன் மைகள் (Distinctly one both.) அசுயின்கியூற்ரோஸ்= பிரத்தியேகமானபடி.

2. அவர்வந்தகாலம். கலா. 4: 5. (1) அநாதிஆலோ சனையில்தீர்மானிக்கப்பட்டகாலம். (2) முன் குறிக்கப்ப ட்டகாலம். ஆதி. 40: 10. தானி. 9: 24. (3) தகு தியானகாலம். அதாவது, (a) அவர்வரும்படி எதிர்ப் பார்க்கப்பட்டிருந்தகாலம். (b) உலகம் எங்கும் சமா தான முண்டாயிருந்தகாலம். (c) பூமிஎங்கும் நாகரீக முண்டாயிருந்தகாலம். (d) பூமிஎங்கும் ரோமர் துரைத் னத்தனத்தால் அரசாளப்பட்டிருந்தகாலம்.

3. அவர்வந்தவிதம்.(1)இஸ்திரியினிடத்தில்பிறந்து. கலா. 4: 5. ஆதி. 3: 15. எபி. 7: 27, 28.(2) நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவராய். கலா. 4: 5. நியாயப் பிரமாணத்தின்படி நடந்து கொண்டார். (3) நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள் ளுகிறவராய். கலா. 4: 4, 5. அதாவது, அவர் மனி தனைத் தண்டனைக்குத் தப்புவித்துக்கொள்வதிலிருந்து மட்டும் மீட்டுக்கொள்ளாமல், புத்திர சுவிகாரத்தை அவனுக்குச் சம்பாதித்துக் கொடுக்கவென்றும் அவனை மீட்டுக்கொண்டார். அதாவது, அதன் பலன் ரண்டுவி தமானது. (i) மீட்பு: அவர் சாபமாக்கப்பட்டதி னால்

(ii) புத்திரசுவிகாரம்: அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினதினால். புத்திசுவிகாரம் ஆதாம் "தேவனுடைய குமாரன்" யிருந்திழந்துபோய்விட்ட நிலைமையில் மனிதனைத் திரும்பக் கொண்டுபோய் வைப்பது. லூக்காவிலிருக்கிற கிறிஸ்துவின் கொடிவழி ஜாபிதாவைப்பார்க்க. ஆதலின் நம்மை ஏற்றுக்கொள்ளுகிற நீதி, பரிசுத்தாவியினால் கொடுக்கப்படுகிற (Imparted) பரிசுத்தவானாகுதலிலிருந்து வித்தியாசப்படுத்தப்பட்டு, அது, கிறிஸ்துவுடையதாயிருக்கிற அல்லது கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற நீதி, மனிதனுக்குச் சாட்டப்படுகிற (Imputed) நீதிமானாகுதல் என்று பரிசுத்தபவுல் சொல்லுகிறார். நீதிமானாகிறதினால், நாம் வான ராஜ்யத்திற்குப் பாத்தியதை (Title) ஐப்பெற்றுக்கொள்ளுகிறோம். பரிசுத்தவானாகிறதினால், நாம் வானராஜ்யத்திற்குத்தகுதி (Meetness) உள்ளவர்களாகிறோம்.

4. அவர் உத்தியோகம். அவர் உத்தியோகத்திலேயே ரக்ஷிப்பு அவரால் நிறைவேற்றப்படுதல் காணப்படுகின்றது.

1வது தீர்க்கதரிசன உத்தியோகம். அவர் தேவனுடைய சித்தத்தை (a) தமது நேரான தோற்றத்தினாலும், 2 கொ. 3: 18. யோ. 15: 9. 2 கொ. 4: 6. எபி. 1: 3, (b) தமது பிரசங்கத்தினாலும்—யோ. 4; 24—வெளிப்படுத்தினார். அவர் (1) தேவனுடைய தன்மையையும், யோ. 4: 24. லூ. 1: 37, (2) தேவனுடைய பராமரிப்பையும், மத். 10: 29, 30, (3) அவருடைய பார்சனையும் உத்தியோகத்தையும், மத். 27: 43. 26: 24, (4) அவருடைய அன்பையும், யோ. 3: 16, (5) தேவனுடைய ஒருமையையும் அவர் சம்பந்தத்தையும்—யோ. 10: 30. 14: 6-பற்றிப் பிரசங்கம் செய்தார்.

2வது. ஆசாரிய உத்தியோகம். இதில் மூன்றுகாரியங்களை நாம் கவனிக்கவேண்டும். I. பொதுவான ஆசாரிய உத்தியோகம். II. கிறிஸ்துவின் ஆசாரிய உத்தியோகம். III. அது நிறைவேறினவிதம்.

I. பொதுவான ஆசாரிய உத்தியோகம்:—

(1) அதன்கருத்து (Notion). எபி. 5: 1.

(2) அதன்மூலம் (Origin). ஆசாரியன் (Priest) என்றவார்த்தை ஹைரியூஸ் (Hiereus) என்ற கிரேக்கை வார்த்தையின் தமிழ்வார்த்தை. ஹைரியூஸ் என்றால், ஓர் பலியிடும் ஊழியக்காரன், அல்லது ஓர்பரிசுத்தமனிதன் என்றர்த்தம். நாம் அவ்வாசாரியன் என்றவார்த்தையை பிரஸ்ப்பியூற்றரூஸ் (Presbuteros) என்ற கிரேக்கை வார்த்தையின் தமிழ் வார்த்தையாகவும் வழங்குகிறோம். பிரஸ்ப்பியூற்றரூஸ் என்றால், ஓர் பிரசங்க ஊழியக்காரன் என்றர்த்தம். இது நமக்குள் ஓர் குழப்பத்தை உண்டாக்குகிறது. அப்போஸ்தலர் ஹைரியூஸ் என்ற பேரால் அழைக்கப்படவில்லை. ஏனென்றால், அப்போஸ்தலர் பலிசெலுத்தினதில்லை. ஆனால் ரோமானித்தவர், தாங்கள் மாஸ்ப் பலி (The Sacrifice of Mass) ஐச்செலுத்தி வருவதினால், தங்கள் பிரஸ்ப்பியூற்றர்களுக்குப் பலி செலுத்துங் கருத்தை வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஜெபப்புஸ்தகத்தில் குரு (Priest) என்றவார்த்தை உதவிக்குருவி (Deacon) லிருந்து பிரித்துக்காண்பிக்கும்படி வழங்கப்படுகிற ஓர் இலக்கணவார்த்தையாகமட்டு மிருக்கின்றது. ஆனால் அது வேதசாஸ்திரக் கருத்துப்படி அவ்விடத்தில் பலியிடும் ஊழியக்காரன் என்றே நிற்கிறது. சகல குழப்பங்களையும் நிவர்த்தி பண்ணும்படி நாம் ஆசாரியன் (Priest) என்ற வார்த்தையை ஒரே பெரியபிரதான ஆசாரியருக்குமுன் குறிப்பாயிருந்த பலியிடும் ஊழியக்காரன் (Sacrificing Minister) என்றே அர்த்தம் பண்ணுவோம்.

(3) அதன்தன்மை (Nature). பொதுவான ஆசாரிய உத்தியோகம் ரண்டுபிரிவுகளுள்ளது. (a) காணிக்கை செலுத்துதல் (Making Oblations). (b) பரிந்துபேசுதல் (Making Intercession).

(4) அதன் அவசியம் (Necessity). (a) விழுதலுக்குச் சம்பந்தமாயும், (b) பலிக்குச் சம்பந்தமாயும், அது அவசியம்.

II. கிறிஸ்துவின் ஆசாரிய உத்தியோகம் நியாயப்பிரமாணத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்டு அதில் ஏற்படுத்தப்பட்டிருந்தவிதம்:—இதில்,

(1) சடங்குகள் நடத்தப்பட்ட இடத்தையும்,

(2) சடங்குகளை நடத்தின ஆளையும்விசேஷித்துக் கவனிக்கவேண்டும்.

III. நியாயப்பிரமாணத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்து, அதில் ஏற்படுத்தப்பட்டிருந்த கிறிஸ்துவின் ஆசாரிய உத்தியோகம், கிறிஸ்துவின் ஆசாரிய உத்தியோகமாய், அவரில் நிறைவேறினவிதம்:—

(1) அவர் காணிக்கை (The Oblation) ஐச் செலுத்தினார். அதாவது, (a) பாடுபடுதல் காணிக்கையையும் (The Oblation of Suffering), (b) கீழ்படிதல் காணிக்கையையும் (The Oblation of Obedience) செலுத்தினார்.

(2) அவர் பரிந்துபேசுகிறார் (Intercedes). (a) பரிந்துபேசுகிற இடம். அது பரலோகம். (b) பரிந்துபேசுதல். (aa) அதன்பலிதம், (bb) அதன்மை.

3வது. இராஜரீக உத்தியோகம். அதுரண்டுபிரிவுகளுள்ளது.

(1) இப்போதிருக்கிற அவருடைய கிருபையின் ராஜ்யம். அதுவும் ரண்டு பிரிவுகளுள்ளது. (a) விசுவாசிகளின் இருதயங்களில் நடக்கும் அவருடைய ஆவியின் (Spiritual) ராஜ்யம். (b) விசுவாசிகளின்பேரில் நடக்கும் அவருடைய தெய்வச்செயலான (Providential) ராஜ்யம். முந்தினதில் (aa) கிறிஸ்து விசுவாசிகளின் இருதயங்களில் தமது ராஜ்யத்தைப்பெற்றுக்கொ

ண்டவிதத்தையும், (bb) அவர்களிருதயங்களில் தமது ஆளுகையை நடப்பிக்கிறவிதத்தையும், (cc) அவர்கள் அவருடைய குடிகளாய் அநுபவிக்கிற சலாக்கியத்தை யும்; பிந்தினதில் (aa) கிறிஸ்து தமது சபையை அவர் கள் பகைஞரிடமிருந்து மொத்தமாய்ப் பாதுகாக்கிறதை யும், (bb) அவர் அவர்களை அவர்களிடமிருந்து தனித்த னியாய்ப் பாதுகாக்கிறதையும் கவனிக்கவேண்டும்.

(2) இனிமேல் வரும் அவருடைய மகிமையின் ராஜ் யம். இது ஆயிரவருஷ அரசாட்சி. இது இதன்முன்னால் விபரிக்கப்பட்டதன்றி இனிமேல் இதன்பின்னாலும் விப ரிக்கப்படும்.

The Plan of Salvation.

இரக்ஷிப்பின் பிளான்.

———:o:o:o:———

Part—II.

இரண்டாம்பாகம்.

இரக்ஷிப்புமனிதனில் பரிசுத்தாவியானவரால் பலிதமாவதைப்பற்றியது.

இதுவரையும் இரக்ஷிப்பின் பிளான், அதாவது கிருபை உடன்படிக்கை, தேவனால் ஏற்படுத்தப்பட்டதையும், அது கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்டதையும் பார்வையிட்டோம். இப்போது நாம் அது என்னமாய் மனிதனில் பலிதமாகிறதென்பதைக் கவனிக்கவேண்டும். இப்பெரிதான பாகத்தைக்கொண்டு செலுத்த பரிசுத்தாவியானவரே பிரதான ஏஜெண்டாயிருப்பதால், அதை அறியும்படி நாம் அவரைப்பற்றி ரண்டு காரியங்களை அறிந்துகொள்ளவேண்டும். 1. அவருடைய தன்மை. 2. அவருடைய உத்தியோகம்.

1. அவருடையதன்மை. இதில் ரண்டு காரியங்களை நாம் கவனிக்கவேண்டும்.

(i) அவர் ஓர் ஆள். (1) பிரத்தியேகமான ஆட்களாயிருக்கிற பிதாவோடுங் குமாரனோடும் இவர்பேர் கண்டிருப்பதால்: (a) ஞானஸ்நானமுறையில். மத். 28:19. (b) ஆசீர்வாதமுறையில். 1. கொ. 13: 13. (c) எபே. 2: 18. (2) அவர் உண்டாகியிருக்கிறவிதத்தால்: குமாரன் பிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்டவரா யிருப்பதுபோல, பரிசுத்தாவியானவர் பிதாவிலிருந்தும் குமாரனிலிருந்தும் புறப்படுகிறவராயிருக்கிறார். யோ. 15: 26.

(3) ஓர் ஆளுக்குரிய குணங்கள் அவருக்குச் சாட்டப்படுவதால்: (a) துக்கப்படுத்தப்படுதல். எபே. 4: 30. (b) வேண்டிக்கொள்ளுதல். ரோ. 8: 26.

(II) அவர்தேவன். (1) அவர் தேவனென்று வேதாகமத்தில் கண்டிருக்கிறதால்: அப். 5: 3, 4. 28: 25-28. 1. கொ. 13: 13. மத். 12: 32. (2) தேவனுக்குரிய லக்ஷணங்கள் அவருக்குரியவைகளாய்ச் சொல்லப்படுகிறதால்: (a) சர்வவியாபகம். சங். 139: 7. (b) தெய்வமாய் விசுவாசிகளின் இருதயங்களில் தங்குதல். 1 கொ. 6: 19. ஐ 3: 16. ஓடு ஒத்துப்பார். (c) சர்வஞானம். 1-கொ. 2: 10. (3) தேவனுக்குரிய வேலைகள் அவர் வேலைகளாகச் சொல்லப்படுவதால்: (a) சிருஷ்டிப்பு. ஆதி. 1: 2. யோபு. 26: 13. (b) வேதாகமத்தை எழுதினவர்களின் இருதயங்களிலிருந்து அவர்களை ஊதி ஏவுதல். 1-பே. 1:21. (c) மறுபிறப்பையும் புதுப்பித்தலையும் உண்டாக்குதல்; தீத். 3: 5. (d) பரிசுத்தவாளுகுதலை உண்டுபண்ணுதல். 1 கொ. 6: 11.

அன்றியும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பேர்களால் அவருடைய தன்மை அறியப்படும். (1) தைலம். சங். 45:7. (2) தேற்றரவாளன். யோ. 14: 16, 26. (3) முத்திரை. வெளி. 5: 8, 9. எபே. 4: 30. (4) காற்று. உன். 4: 16. (5) எரிதல். லூ. 12: 35. (6) பட்டயம். எபே. 6: 17. (7) அக்கினி. மத். 3: 11. (8) தண்ணீர். யோ. 7: 38. (9) மழை. சங். 72: 6. (10) பனி. சங். 110: 3. (11) புரு. மத். 3: 16. (12) சத்தம். ஏசா. 6:8. (13) பிரிந்தநாவுகள். அப். 2: 3.

2. அவருடைய உத்தியோகம், அல்லதுவேலை. அதாவது கிருபை உடன்படிக்கை, அதன்பலவிதமான பிரிவுகளின்படி, பரிசுத்தாவியானவரால் மனிதரிருதயங்களில் பலிதமாகுதல். இதைநாம் ரண்டுபிரிவுகளாய்ப் பிரித்துக் கவனிக்கவேண்டும்.

யாருக்குமாத்திரம் கிருபை உடன்படிக்கை, அல்லது ரக்ஷிப்பின் பிளான் பலிதமாகிறதென்பது முதல்பிரிவு.

அது தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும், முன்குறிக்கப்பட்டவர்களுக்குமாத்திரம்பலிதமாகிறது. இதிலே,

தெரிந்துகொள்ளுதல் (Election)

வருகிறது. இரக்ஷிக்கப்படும்படி ஒருவனைத் தெரிந்துகொள்ளுகிறவேலைபிதாவாகிய தேவனுடையவேலை. அது பரிசுத்தாவியின் வேலையல்ல. ஒருவன் இன்னமும் கற்பத்தில் உருவேர்ப்படுமுன் தேவன் அவனை அநாதியாய்த் தெரிந்துகொண்டு முன்குறிக்கிறார். ரோ. 9: 10-13. 2 தெச. 2: 13, 14. (1) இரக்ஷிப்புக்கான முன்குறித்தல்மட்டும் உண்டு. (2) கேட்டுக்கான முன்குறித்தல் இல்லை. "யாக்கோபைச் சிநேகித்தேன், ஏசாவையோ வெறுத்தேன்" (மல். 1: 2-3) என்பது எபிரேய நடை. தமிழ் நடையில் "பெட்டியையும் கிட்டியையும் எடுத்துவா" என்பதில், கிட்டிக்கம்பையும் எடுத்துவா என்பது கருத்தல்ல.

கிருபை உடன்படிக்கை, அல்லது ரக்ஷிப்பின்பிளானின் நிபந்தனைகள், மனிதருக்கு என்னமாய்ப் பலிதமாகிறதென்பது அடுத்தபிரிவு. இதில் சம்பந்தப்பட்ட வேலைகள்தான் பரிசுத்தாவியானவரின்வேலை.

கிறிஸ்துவின் வேலை பரிசுத்தாவியின்வேலையால் மனிதரிருதயங்களில் பலிதமாகிற வெவ்வேறுவிதபடிகள் சுருக்கமாக ரோ. 8: 30ல் கண்டிருக்கிறது. "எவர்களை முன்னறிந்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ, அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ, அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." அடியில் வருவது இதில் கண்டிருக்கிறபரிசுத்தாவியானவரின் வேலையின் அநேகவித படிகள்.

I. அழைத்தல் (Calling)
II. நீதிமானுகுதல் (Justifying)
III. மகிமைப்படுதல் (Glorifying)

இவைகள் ஒவ்வொன்றும் அனந்த உட்பிரிவுகளுள்ளது.

I. அழைத்தல் (Calling).

இதில் தேவனுல் முன் குறிக்கப்பட்டவர்களை பரிசுத்தாவியானவர் எப்படி அழைக்கிறுர் என்று நாம் கவனிக்கவேண்டும். அவர், (1) அவர்கள் பாவங்களை அவர்களுக்குணர்த்தி, அவர்களுக்கோர் ரக்ஷகர் தேவையென்று காண்பிப்பதாலும்; (2) கிறிஸ்துவை அவருடைய ரக்ஷிப்பின் தன்மையில் எடுத்துக் காண்பிப்பதாலும்; (3) கிறிஸ்துவின் வார்த்தைகளைப் பலிக்கப்பண்ணுவதாலும்; (4) கிறிஸ்துவின் வடிவத்தை அவர்களிருதயங்களில் பதிப்பித்து, அவர்களை கிறிஸ்துவுக்கொப்பானவர்களாக்கி, கிறிஸ்துவின் வடிவத்தின்படி அவர்களிருக்கும்படி செய்வதாலும் அவர்களை அழைக்கிறுர். (a) அவைகளை அவர் அவர்கள் மனச்சாக்ஷிக்கு எடுத்துக்காண்பிப்பதால், (b) தெய்வவசன ஊழியத்தால், (c) தெய்வச்செயலால், அவைகள் அவர்களில் பலிதமாகின்றன. அப்போது,

1. மனந்திரும்புதல் (Repentence)

உண்டாகிறது. அதாவது, (1) குற்ற உணர்ச்சி (Conviction), (2) மனநைவு (Contrition), (3) குற்ற அறிக்கை (Confession), (4) மனமாறுதல் (Conversion) உண்டாகிறது. இது பாவியைக் கிறிஸ்துவண்டை அழைக்கிறதைவிடச் சற்றதிகமானது. இது மனிதரில் ரக்ஷிப்புப் பலிதமாகிற முதல்படி. அதன்பின் அவர் அழைக்கப்பட்டவர்களை என்னமாய்க் கூட்பிட்டுக் கிறிஸ்துவண்டை கொண்டுவருகிறுரென்று கவனிக்கவேண்டும். இதில் கிறிஸ்துவில்,

2. விசுவாசம் (Faith)

உண்டாகிறது. அதாவது, (1) புத்தியைத் தழுவிய

விசுவாசம் (Mental Faith) ஆகிய நம்புதலும் (Belief), (2) சன்மார்க்கத்தைத் தழுவிய விசுவாசம் (Moral Faith) ஆகிய பற்றுதலும் (Trust) உண்டாகிறது. இவ் விசுவாசம் மனந்திரும்புதலைத்தொடர்ந்துவருகிற அடுத் தபடி. அதன்பின்,

II. நீதிமானுகுதல் (Justification)

உண்டாகிறது. அதுவாக்கியத்தில் கண்டிக்கிற ஓர் படி. அது மனந்திரும்புதலினுலும் விசுவாசத்தினுலும் உண்டாகிற பலன். அது அதன் மூலகாரணமாகிய கிறிஸ்துவின் பிராயச்சித்தப்பலியினுலும், அதன் கருவி காரணமாகிய விசுவாசத்தினுலும் உண்டாகிறது. அது கிரியைகளினுல் உண்டாகிறதில்லை. இதில், (1) (a) பாவமன்னிப்பும் (Pardon): அதாவது, பாவத்திற்காக வரவேண்டிய தண்டனை நீங்குதலும்; (b) சமாதானமும் (Peace): அதாவது, தேவனேடு ஒப்புரவாகுதலும்; (2) ஏற்றுக்கொள்ளப்படுதலும் (Acceptance): அதாவது, பாவத்தினுல் இழந்துபோன ஜீவனை, மறுவார்த்தையில் சொல்லவென்ருல், ஆதாம் தேவனுடைய குமாரனுயி ருந்திழந்துபோய்விட்ட நிலைமையைஅடைந்து, சுவிகா ரபுத்திரன் (Adopted Son) ஆவதும் கிடைக்கிறது. கிறிஸ்து தமது மரணபாடுகளால் தண்டனை நீங்குதலை யும் (Removing the Penalty), அவர் நியாயப்பிரமா ணத்திற்குக் கீழ்படிந்ததால் ஜீவனை (Life) யும் சம்பா தித்தார். பாவமன்னிப்பு கிறிஸ்துவின் மரணபாடுகளா லும், ஏற்றுக்கொள்ளப்படுதல் அவர் நியாயப்பிரமாண த்திற்குக் கீழ்ப்படிந்ததாலும் கிடைக்கிறது. அதன்பின்,

பரிசுத்தவானுகுதல் (Sanctification)

உண்டாகிறது. இது நீதிமானுகுதலைத் தொடர்ந்துவ ருகிற அடுத்தபடி. ஒருவன் நீதிமானுன உடனேயே அ வனில் பரிசுத்தவானுகுதலின் வேலை ஆரம்பித்து, அது அவனில் மரணபரியந்தம் நாளடைவில் படிப்படியாய் விர் த்தியாகிறது. அதன்பின் மரணத்தில் அதன்பலனுகிய

அதன் மகிமைக்குள் பிரவேசிக்கிறான். பரிசுத்தவாளுகுதல் ரண்டு பெரும்பிரிவுகளுள்ளது. ஒன்று மரணத்திற்கு முன்னுள்ளது; மற்றது மரணத்திற்குப் பின்னுள்ளது. பரிசுத்தவாளுகுதல் மேலே நாம் கண்ட வாக்கியத்தில், மகிமைப்படுதல் என்று சொல்லப்படுகிறது. அதில் மரணத்திற்குப் பின்வரப்போகும் மகிமையையும் சேர்த்துச்சொல்லியிருக்கிறது. பரிசுத்தவாளுகுதலின் முன்பாகம் மொட்டுப்பூவிலிருக்கிற மகிமையாயும், பரிசுத்தவாளுகுதலின் பின்பாகம் விரிந்த பூவிலிருக்கிற மகிமையாயுமிருக்கிறது. அதாவது, பரிசுத்தவாளுகுதல் மகிமைப்படுதலின் ஆரம்பமாயும், மகிமைப்படுதல் பரிசுத்தவாளுகுதலின்முடிவாயுமிருக்கிறது. 1 பே. 1: 13–15. நாம்பரிசுத்தவாளுகுதலை ஓர் உள்ளானதத்துவமாக (An Inner Principle), அல்லது அத்தத்துவம் நடக்கையில் வெளிப்படுவதாக (The manifestation of it in practice), அல்லது அது கிருபையின் எத்தனங்களைக் கையாடுவதாக (Using the means of Grace) பார்வையிடுவோம். ஆதலின்,

III. மகிமைப்படுதல் (Glorification),

அதாவது பரிசுத்தவாளுகுதல், ரண்டு பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது.

i. இப்போதிருக்கிறகிருபை (Grace now),

ii. இனிமேல்வரும் மகிமை (Glory hereafter).

i. இப்போதிருக்கிறகிருபையினுள்,

1. தேய்வவசனம் (The word of God),

2. ஜெபம் (Prayer),

3. ஞானஸ்நானம் (Baptism),

4. இராப்போசனம் (The Lord's Supper),

இவைகள் கொண்டு செலுத்தப்படுகின்றன. இவைகளுக்குக் கிருபையின் எத்தனங்கள் என்றுபேர். இவைகள் கொண்டு செலுத்தப்படுவதால் அடைகிறபலன்,

1. மறுபிறப்பு (Regeneration).

இது உள்மனிதனில், அதாவது ஆவியில், உண்டாகிற பிறப்பு. உள்மனிதன் என்றால் ஆவி. உள்மனிதன் மறுபிறப்பில்லாத மனிதர்களுக்குள்ளும் உண்டு. அது அவர்களில் செத்துப்போயிருக்கிறது. கிரியைசெய்ய ஏலாதது. கிரியைசெய்யப் பெலனில்லாதது. ஒருவன் நன்மை செய்யப் பிரியமாயிருந்தும், நன்மைசெய்யத் தன்னால் ஏலாதிருப்பதுபோல். ஆனால் தேவனுடைய ஆவியானவர் அவர்களில் நடபடிக்கை பண்ணினபோது, அது ஜீவனை அடைந்து உயிர்ப்பிக்கப்படுகிறது. கிரியைசெய்ய, அதாவது தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ள, பெலனடைகிறது. ஆதலின், மறுபிறப்பென்பது செத்துப்போயிருக்கிற மனிதனுடைய ஆவி உயிரடைகிறதாயிருக்கிறது. இது விசுவாசிதனக்குமட்டுமே அறியப்படும். மறுபிறப்பில்லாத மனிதனிடத்திலிருக்கிற ஆவிதன்னைக்கொடுத்தவரிடத்தில் திரும்புகிறது. ஆனால் அது உயிரடைந்து திரும்புகிறதில்லை. அடுத்த பலன்,

2. பரிசுத்தாவியானவரின் புதிதாக்குதல் (Renovation of the Spirit).

அதாவது, பரிசுத்தாவியானவரால் அவ்வுள் மனிதன் என்கிற ஆவி பூரணமாய்ப் புதுப்பிக்கப்படுகிறது. அப்போது புதுசிருஷ்டியாகிறான். அடுத்தபலன்,

3. நடக்கையில்வெளியாகும் தேவபக்தி (The Practical Godliness).

அதாவது, புதிதாக்கப்பட்ட உள்மனிதனிடத்திலிருக்கிற, அல்லது ஆவியினிடத்திலிருக்கிற, ஜீவனின் தத்துவம் நற்குணங்களாய் யாவருக்கும் பஹிரங்கமாய் வெளியாகிறது. அதன்பின் இப்போதிருக்கிற இக்கிருபையின் கடைசிப்பலனாகிய

ii. இனிமேல்வரும்ம கிமையினுள்,

1. மரணம் அதாவது ஜெயங்கொண்ட மரணம் (Death Conquered)

வருகிறது. நீதிமான்களுக்கு மரணம் மரணமல்ல, அது ஜீவன். நீதி. 12: 28. நீதிமான்கள் அடைந்து கொண்ட மறுபிறப்பின் ஜீவன், அதாவது அவர்கள் ஆத்துமாவிலிருக்க ஆரம்பித்திருக்கிற தேவனுடைய ஜீவன், அவர்கள் சரீரமரணத்தில் அழிந்துபோகிறதில்லை. அவர்கள் அஜீவனுடன் பூமியாகிய தோட்டத்திலிருந்து மத்திப நிலைமையாகிய பரதீசில் மரணத்தினால் பிடுங்கிநடப்பட்டு, புதியவானத்திலும் புதியபூமியிலும், அதாவது ஆயிரவருஷ அரசாட்சியில், கடைசியாய் கீர்த்திபொருந்திய செடிகளாகவேணுமென்று அவ்விடம் காத்திருக்கின்றனர். அப்போது,

2. மத்திபநிலைமை, அதாவது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்குமுள்ள மத்திப நிலைமை (The Intermediate State)

வருகிறது. மரித்துப்போன ஆத்துமாக்களிருக்கிற மொத்த இடத்திற்கும் பேர் ஏதேஸ் (Hades). அதுரண்டு பெரும்பிரிவுகளுள்ளது. ஒன்றில் நீதிமான்களும் மற்றொன்றில் துன்மார்க்கருமிருக்கக் குறிக்கப்பட்டவைகள். நீதிமான்களின் இடத்திற்கு ரண்டு பெயர் உண்டு. ஒன்று ஆபிரகாமின்மடி (Abraham's Bosom); மற்றொன்று பரதீஸ் (Paradise). அதன்பின்,

3. முதலாம் உயிர்த்தெழுதல் அதாவது மகிமையான உயிர்த்தெழுதல் (The Glorious Resurrection)

வருகிறது. இதற்கு அடுத்து முந்தி லூ. 21: 24ல் சொல்லியது நிறைவேறும். அதாவது எருசலேம் புறஜாதியாரிடமிருந்து பிடுங்கப்படும். சிதறப்பட்ட இஸ்ரவேலரில் யூதர்கள்திரும்ப அவ்விடம்போய்ச்சேர்ந்து, அதில் தங்கள் ஆலயத்தைக் கட்டுவார்கள். பத்துக்கோத்திரத்தார் அவ்விடம் சேராமலிருப்பார்கள். அந்திக் கிறிஸ்துவால் ஓர் கலகம் உண்டாகும். அதில், அவனும் அவனுடையவரில் மூன்றில் இருபாகம் பேரும் சேதப்

படுவார்கள். மீதியானவர்கிறிஸ்தவராவார். அப்பொழுது மத். 24: 29, 30ல் சொல்லிய அடையாளங்கள் வானத்தின்மீதில் சம்பவிக்கும். வானமும் பூமியும் அநேகவித மாறுதல்களை அடைந்து அவைகள் புதுப்பிக்கப்படும். அப்பொழுது சாத்தான் ஆயிரவருஷம் கட்டப்படுவான். அதாவது, நரகத்தின் பிரபுவும் அவன் வேலையாட்களும் மனிதரைக்கெடுக்கப் பூலோகத்துக்கு வரவொட்டாதபடி தடுக்கப்படுவார்கள். உடனே ஏசுவானவர் ஆகாயத்தில் எக்காளந் தொனிக்குந் தூதருடன் ஆரவாரத்துடன் வருவார். அப்பொழுது மரித்துப்போன பரிசுத்தவான்களும் இஸ்ரவேலரும், யூதரும் (ரோ. 11: 25-27) உயிரோடெழுப்பப்பட்டு, மருரூபமாகி ஆகாயத்தில் அவரிடம் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். உயிரோடிருக்கிற பரிசுத்தவான்களும் யூதரும் மருரூபமாகி அவ்விடத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். மரித்துப்போன மீதியானவர் கல்லறையில் எழுப்பப்படாமலிருப்பார்கள். 1 தெச. 4: 15-17. வெளி. 20: 4, 5. அதன் பின் ஆகாயத்திலிருந்து ஏசுவானவர் அப்பரிசுத்தவான்களுடன் எருசலேம் பட்டணத்தில் இறங்கி, முட்கிரீடந்தாங்கின அவ்விடத்தில் மெய்யான கிரீடந் தாங்கினவராய் ராஜாவாயிருந்தரசாள்வார். சங். 2: 6. அப்போது,

4. ஆயிரவருஷ அரசாக்ஷி (The Millennium) வருகிறது. அதில் பன்னிரண்டு அப்போஸ்தலரும், ரத்தச்சாட்சிகளாய் மரித்தவரும் அதிகாரிகளும் பிரபுக்களுமாவார். மத். 19: 28. வெளி. 20: 4. குடிகளாயிருப்பவர் ரத்தச்சாட்சிகளல்லாத மற்றும் பரிசுத்தவான்கள். எருசலேமில் இறங்கினவுடன் சிதறப்பட்ட இஸ்ரவேலரின் பத்துக் கோத்திரத்தாரையும் சேகரித்து வரும்படி சகோதரரான பரிசுத்தவான்கள் ஏசுவானவரால் அனுப்பப்படுவார்கள். அவர்கள் அவர்களை வனாந்தரங்களிலிருந்து தேடிக்கொண்டு வருவார்கள். ஏசுவானவர்

அவர்களைப் பட்டணத்திற்கு வெளியே எதிர்கொண்டு போய், அவர்கள் அவபக்திகளையெல்லாம் விலக்கி, அவர்களை ஏற்றுக்கொள்வார். ரோ. 11:26. இந்தப்படி எல்லா இஸ்ரவேலரும் எல்லாயூதரும் பரிசுத்தவான்களாகி அவருடனிருந்தரசாள்வார்கள். இவ்விராஜயம். (1) பரிசுத்தமான ராஜ்யம். தேவனைத்துதிக்கும பாடல்களும் ஆராதனைகளும் அங்குண்டு. மீகா. 4: 1, 2. (2) அதுநீதியான ராஜ்யம். எரே. 23: 5, 6. (3) அதுசமாதானராஜ்யம். எசா. 65: 19, 25. அங்கே மரணமில்லை: பாவமில்லை: துக்கமில்லை: துக்கத்துக்கான காரணங்களுமில்லை; 1 கொ. 15: 44 விலும், பிலி. 3: 21 லும் சொல்லிய ஆவியின் சரீரம் உடையவர்களாயிருப்பார்கள். அதாவது, கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் அவருக்குண்டாயிருந்த தேகத்துக்கொப்பான தேகமுடையவர்களா யிருப்பார்கள். அங்கே விதைப்பும் அறுப்பும் புசிப்பும் உண்டு. எசா 65: 21, 22. பூமியின்சாபம் நீங்கிவிட்டது. வேதனைகளும் வருத்தங்களுமில்லாமல் அது தன்பலனைத்தரும். துஷ்டமிருகங்களின் தத்துவங்கள் மாறிவிட்டன. ரோ. 8: 20. எசா. 65: 25. அங்கே பிள்ளைப்பெறுதலும், கொள்வினை கொடுப்பனைகளுமில்லை. மத். 22: 30. எசா. 65: 23. ஆயிரவருஷத்தின் கடைசியில் சாத்தான் கட்டவிழ்க்கப்படுவான். அப்பொழுது அவன் ஆகாதவர்களை ஏவி, அவர்கள் பரிசுத்தவான்களுடன் யுத்தஞ்செய்வார்கள். கோகுமகாகோகின் சேனைகள் வானத்தின் அக்கினியினால் தகனிக்கப்படுவார்கள். உடனே,

5. இரண்டாம் உயிர்த்தெழுதல்

(The Second Resurrection)

வருகிறது. அதில் ஏசுவானவர் தமது பரிசுத்தவான்களுடன் எருசலேமிலிருந்து ஆகாயத்திலேறி, அவ்விடமிருந்து, தாம் பூமியில் பிரசங்கிக்கப்பட்டபோது தம்மை ஏற்றுக்கொள்ளாதவர்களையும், தாம் ஒருக்காலும் பிரசங்

கிக்கப்பட்டிராமல் தன் போக்கில் நடந்துகொண்ட, கண்டுபிடிக்கப்பட்டதும் கண்டுபிடிக்கப்படாததுமான தீவாந்தரங்கள் தேசங்களிலுள்ளவர்களையும் உயிரோ டெழுப்புவார். அவர்களும், அப்போதுயிரோடிருக் கும் ஆகாதவர்களும் மருரூபமாக்கப்பட்டு ஆகாயத்தி லவரிடம் எடுத்துக்கொள்ளப்படுவோர்கள். உடனே,

6. கடைசி முடிவு (The final consummation of all things)

வருகிறது. இதில் சகலமும் முடிவடைந்து அழிந்து போகிறது. வானமும் பூமியும்அப்புரமிருக்கமாட்டாது. அவைகள் வெந்து உறுகிப்போகும். வெளி. 20: 11. உடனே,

7. கடைசிநியாயத் தீர்ப்பு (The Final Judgment)

வருகிறது. ஆகாயத்தில் ஏசுவானவர் தமது பத்திராச னத்தில் வீற்றிருப்பார். எருசலேமிலிருந்த பரிசுத்தவா ன்கள் ஏசுவானவர் ஆசனத்தின்பக்கமாய் நிற்பார்கள். இரண்டாம் உயிர்த்தெழுதலில் ஆகாயத்தில் ஏறெடுக்க ப்பட்டவர்கள் ரண்டு பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டு, நல் லவர்கள் ஏசுவானவரின் வலதுபக்கத்திலும், பொல்லா தவர்கள் அவர் இடதுபக்கத்திலும் நிறுத்தப்படுவோர்கள். வலதுபக்கத்திலுள்ளவர்களும், அவர்ஆசனத்தின்பக்கமா ய் நிற்பவர்களும் என்றென்றும் மோட்சலோகத்தையும், இடதுபக்கத்திலுள்ளவர்கள் என்றென்றும் நரக ஆக்கி னையையும் அடைந்துகொள்ளும்படி அதில் அவர்கள்தீர் ப்புப்பெருவார்கள். எருசலேமிலிருந்த பரிசுத்தவான்கள் ரண்டாம் உயிர்த்தெழுதலில் ஆகாயத்தில் ஏறெடுக்கப்ப ட்டவர்களுடன் கலந்து, ஏசுவானவரின் வலதுபக்கத்தி லும் அவரின் இடதுபக்கத்திலும் பிரித்து நிறுத்தப்பட்டு நியாயந்தீர்க்கப்படுவதில்லையென்றும், அவர்கள்பக்கத்தி ல்மட்டுமே பார்த்துக்கொண்டு நிற்பார்களென்றும், ரண் டாம் உயிர்த்தெழுதலில் ஆகாயத்தில் ஏறெடுக்கப்பட்ட

வர்களே அப்படி நியாயத் தீர்ப்படையப்பிரித்து நிறுத்த ப்படுவார்களென்றும், வலதுபக்கத்திலுள்ளவர்களுக்கும் இடதுபக்கத்திலுள்ளவர்களுக்கும் அவர் சொல்லும் வார்த்தைகளால் அறியப்படுகின்றன. வலதுபக்கத்திலுள்ள வர்களுக்கு அவர் சொல்வதாவது: நான் பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; நான் தாகமாயிருந்தேன் என் தாகத்தைத்தீர்த்தீர்கள் என்பார். அப்பொழுது அவர்கள் நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியாகக்கண்டு போஜனங் கொடுத்தோம்; தாகமாகக் கண்டு தாகந்தீர்த்தோம் என்பார்கள். அதற்கு அவர் "இவர்களில் ஒருவனுக்கு எதைச்செய்தீர்களோ, அதை எனக்குச் செய்தீர்கள்" (மத். 25: 40) என்று, தமது கையை நீட்டி, தமதுபக்கத்தில் நிற்கும் பரிசுத்தவான்களின் கூட்டத்தாரைக் காண்பிப்பார். அப்படியே, அவர் தமது இடதுபக்கத்தில் நிற்கும் ஆகாதவர்களையும் பார்த்து, நான் பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங் கொடுத்தீர்களில்லை; நான் தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்களில்லை என்பார். அப்பொழுது அவர்கள் நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியாகக்கண்டு போஜனங் கொடுத்தோமில்லை; தாகமாகக்கண்டு தாகந் தீர்த்தோமில்லை என்பார்கள். அதற்கு அவர் "இவர்களில் ஒருவனுக்கு எதைச்செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்குச் செய்யாதிருந்தீர்கள்" (மத். 25: 45) என்று தமது கையை நீட்டி, தமதுபக்கத்தில் நிற்கும் பரிசுத்தவான்களின் கூட்டத்தாரைக் காண்பிப்பார். வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலும் நின்று ஏசுவானவருக்குப் பதில் சொல்லுகின்றவர்கள் அவரை நேராய் அறியாதவர்களும், அவர்பேர் கேள்விப்பட்டு அல்லது பிரசங்கிக்கப்பட்டிராதவர்களுமாயிருந்து, தன் போக்கில் தன்தன் நடக்கைகளால், தேவனொருவருண்டென்று நல்லவர்களாய் அல்லது தீயவர்களாய் நடந்துகொண்ட, கண்டுபிடிக்கப்பட்டதும் கண்டுபிடிக்கப்படாததுமான திவாந்தரங்கள் தேசங்களிலுள்ளவர்களாயிருந்தவர்கள்

என்று காணப்படுகின்றது. "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்குண்டு" (யோ. 10: 16) என்று இரக்ஷகர் சொல்லியதில், கிறிஸ்தவர்களாயிராமல் புறமதஸ்தராயிருந்த இவர்களே ரண்டாம் அர்த்தமாகக் குறிககப்படுகிறுர்கள்.

"இரக்ஷிப்பின்பிளான்" என்ற நமது நூலில்கண்டிருக்கின்றவைகளெல்லாம் பொருட் சாரமானவைகள். உபதேசங்கள்அதில்திட்டவட்டமாய்வேறெங்கும் காணப்பட்டிராத வண்ணம் வரையப்பட்டிருக்கும். அதை வாசித்து உட்கொள்பவரொவரும் வேதாகமத்தின் கருத்துகளைத் தாஞகத் தாற்பரியஞ்செய்யும் சமர்த்தராவார்.

கனம் சிம்மன்ஸ் ஐயரவர்களின் ஸ்காலர்களாயிருந்து, மதிராஸ் சலிவன்ஸ் கார்டன்ஸ் காலேஜ்யின் கிராட்யூயேற்றுகளா யிருப்பவரொவரும், இதில் அமைக்கவிரும்பும் சிம்மன்ஸ் ஐயரவர்களின் கருத்துகளை நமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவாராயின், நாம் அவைகளை ஏற்ற இடங்கண்டமைக்கச் சந்தோஷமாய் அங்கிகாரஞ் செய்வோம்.

THE FOLLOWING BOOKS ALSO ARE FOR PUBLICATION BY ME.

அடியில்வரும் புஸ்தகங்களும் நம்மால் அச்சிடப்படும்.

---

1. ரோமர் நிருப வியாக்கியானம் (Commentary On The Epistle to The Romans). பொருட்சாரமாய். (Critical and Explanatory.) கனம் சிம்மன்ஸ் ஐயரவர்களின் பாதங்களிலிருந்து கற்றுக்கொண்டஞானம்.

2. கலாத்தியர் நிருபவியக்கியானம் (Commentary On The Epistle to The Galatians). பொருட்

சாரமாய். (Critical and Explanatory.) கனம் சிம்ம ன்ஸ் ஐயரவர்களின் பாதங்களிலிருந்து கற்றுக்கொண்ட ஞானம்.

பட்லர் ஒத்துமை (Butler's Analogy). தமிழி மாழிபெயர்ப்பு. இருக்கிறபடி, ஆக்கியோனின் கரு விளங்க. கனம் சிம்மன்ஸ்ஐயரவர்களின் பாதங்களி ந்து கற்றுக்கொண்டஞானம்.

4. நமது ஆதி உத்தியோகத்தை நினைவுகூறும் ஆறு பிரசங்கங்கள். (Six Sermons in Remembrance of My original Employment).

5. டாக்டர் ஞானமுத்து நாடார் (Doctor Gnanamuthoo Nadar). அங்கிலேயவைத்தியமும் தமிழ்வைத்தியமும், கைகண்டவை. சுளுகானவை,